www.padippakam.com

16 - 31 ஜனவரி 2000 □ ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



ஈழப் பிரச்சினை:
சமாதானமா?
தனி ஈழமா?




padippakam

# வெள்ள நிவாரணத்தை ஏப்பம் விட முயன்ற அதிகாரிகள் சிறை பிடிப்பு!

## திருச்சி - அரவானூர் பகுதிப் பெண்கள் நடத்திய போராட்டம் வெற்றி!!

திருச்சியில் கடந்த நவம்பர் 19, 20 தேதிகளில் பெய்த பெருமழையால் மாநகரமே வெள்ளத்தில் தத்தளித்தது. உய்ய கெண்டான் வாய்க்கால், கோரையாறு, வெண்ணாறு ஆகிய மூன்று ஆறுகளின் கரைகளில் உடைப்பு ஏற்பட்டு கடல் போல் வெள்ளம் நகரைச் சூழ்ந்து கொண்டது.

வெள்ளம் சூழ்ந்ததால் நகரின் பல இடங்களில் மண் வீடுகள் சரிந்து விழுந்தன. குறிப்பாக குமரன் நகர், சீனிவாச நகர், அரவானூர் ஆகியவற்றின் தாழ்வான பகுதிகளில் வாழும் உழைக்கும் மக்கள் வீடிழந்து அருகிலுள்ள பள்ளிக் கூடங்களில் தஞ்சம் புகுந்தனர். மழை ஓய்ந்து இரு நாட்களுக்குப் பின்னர் வந்த அதிகாரிகள் வெள்ளம் சூழ்ந்த மாடி வீடுகளுக்குப் பாலும் ரொட்டியும் வழங்கினர். குடிசை வாசிகளுக்கு ரேசன் அரிசிச் சோற்றை உணவாக வழங்கினர். உழைக்கும் மக்களை இழிவுபடுத்தும் இந்த அநியாயத்தை குடிசைவாசிகள் எதிர்த்த பின்னரே, அவர்களுக்கும் பாலும் ரொட்டியும் வழங்கப்பட்டது.

பல பகுதிகளில் உணவு கூடத் தராமலும், எவ்வித மீட்பு நடவடிக்கையோ, நிவாரண உதவியோ செய்யாததாலும் குமுறிய மக்கள் தன்னெழுச்சியாக சாலை மறியல் போராட்டங்களில் ஈடுபட்டனர். அரியமங்கலம் பகுதியில் முதல்வரின் காரை வழிமறித்து மறியல் செய்ய முயன்ற மக்களை போலீசு அடித்து விரட்டியது. நிவாரண உதவிகள் கூடச் செய்ய வக்கற்ற தி.மு.க. அரசைக் கண்டித்தும், உடனடியாக நிவாரணப் பணிகளைச் செய்யக் கோரியும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி சுவரொட்டி பிரச்சாரத்தை நடத்தியது.

சிறீரங்கம் தொகுதி எம்.எல்.ஏ. மாயவனின் காரை மறிக்கும் திருச்சி நகர மக்கள். (உள்படம்) மறியலில் மாட்டிக் கொண்ட முதல்வரின் கார்.



மழை - வெள்ளத்தில் நாற்புறச் சுவரும் இடிந்து விழுந்த வீடுகளுக்கு மட்டும் ரூ. 1000/- நிவாரணத் தொகையாகத் தரப்படும் என்று அரசு அறிவித்தது. அதைத் தொடர்ந்து அரசு அதிகாரிகள் அரவானூர் பகுதியில் உடன் பிறப்புகளின் துணையோடு கணக்கெடுத்தனர். இடிந்த வீடுகளாகத் தமது உறவினர்களின் பெயர்களைக் கொடுத்த உடன் பிறப்புகள், வெள்ள நிவாரண நிதியை அதிகாரிகளுடன் பங்கு போட்டுக் கொண்டனர். இதுதவிர இப்பகுதிக்கென ஒதுக்கப்பட்ட 100 வீடுகளுக்கான நிவாரணத் தொகையைச் சுருட்டிக் கொள்ள அதிகாரிகள் முயன்றனர்.

இதைக் கண்டு வெகுண்டெழுந்த பு.மா.இ.மு.-வினரும் இப்பகுதிவாழ் பெண்களும் அங்கு வந்த துணை வட்டாட்சியர், கிராம நிர்வாக அதிகாரி மற்றும் பிற அதிகாரிகளைப் பிடித்து அங்கிருந்த பள்ளிக் கூடத்தில் சிறை வைத்தனர். பெண்களால் சிறை வைக்கப்பட்ட அதிகாரிகள் அரண்டு போய், அனைவருக்கும் முறைப்படி நிவாரணத் தொகையை அளிப்பதாகக் கையெழுத்திட்டு உறுதியளித்தனர். அதன் பின்னரே அதிகாரிகள் விடுதலை செய்யப்பட்டனர். மறுநாள் அதிகாரிகள் வந்து முறைப்படி பாதிக்கப்பட்ட வீடுகளைக் கணக்கெடுத்து முகவரிகளை வாங்கிக் கொண்டு, விரைவில் நிவாரணத் தொகையை அளிப்பதாக உறுதி அளித்தனர்.

புரட்சிகர மாணவர் -
இளைஞர் முன்னணி,
திருச்சி.

# மலையை நம்பி வாழும் மக்களின் வாழ்வுரிமைக்கான பிரச்சார இயக்கம்

கம்பம் பள்ளத்தாக்கு பச்சை வயல் வெளிகளையும் பசுமை மாறாத தோப்புகளையும் கொண்டுள்ள போதிலும், இங்கு 5000-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மலைகளை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். முறையாக விவசாய வேலை கிடைக்காத கூலி விவசாயிகளுக்கும், நொடித்துப் போகும் ஏழை விவசாயிகளுக்கும் பிழைப்புக்கான ஒரே ஆதாரமாக இருப்பது இந்த மலைகள்தான். மலைகளிலிருந்து விறகு, ஈத்தை, நெல்லிக்காய், கடுக்காய் முதலானவற்றையும் மரக் கட்டைகளையும் கொண்டு வந்து ஊருக்குள் விற்பதன் மூலம் கிடைக்கும் அற்ப வருமானத்தை வைத்தே இவர்களது வயிற்றுப்பாடு நடந்து வருகிறது.

மழை, வெய்யில், முட்கள், பாம்பு, பூச்சிகள் முதலான அனைத்தையும் எதிர்கொண்டு, கழுத்தொடிய மைல் கணக்கில் விறகு சுமந்து பிழைத்து வரும் இவர்களைச் சமூக விரோதிகள் என்று குற்றம் சாட்டி வதைக்கிறது வனத்துறை. தங்களது வானளாவிய அதிகாரத்தைக் கொண்டு பெண்கள் என்றும் பாராமல் அடிப்பது, ஆபாசமாக ஏசுவது, விசாரணை என்ற பெயரில் ஆண்களை இரவில் வீடு புகுந்து கடத்திச் செல்வது, முகாம்களில் அடைத்துச் சித்திரவதை செய்வது, பொய் வழக்குப் போடுவது, இலஞ்சம் பறிப்பது என வனத்துறையினரின் அட்டூழியம் இந்த வட்டாரத்தில் அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது.

இது மட்டுமின்றி, விவசாயிகள் தமது சொந்த நிலத்தில் மணல் அள்ள கிராம நிர்வாக அதிகாரியிடம் அனுமதி பெற்றிருந்தாலும், வனத்துறைக்குக் கட்டாயமாக இலஞ்சம் தர வேண்டும். மலை அடிவாரத்தில் உள்ள விவசாய நிலங்களுக்குக்கூட மாலை 6 மணிக்கு மேல் போகக் கூடாது என்று தடை விதித்து, ஏதோ கார்கில் போர் முனை போல "வயர் லெஸ்", துப்பாக்கிகளோடு கிராம மக்களை அச்சுறுத்தும் வனத்துறையினர், மறுபுறம், கள்ளத்தனமாக கஞ்சா பயிரிடும் சமூக விரோத கும்பலுக்குப் பாதுகாப்பு அளித்து, தொழில் கூட்டாளிகளாக உள்ளனர்.

வனத்துறையினரின் காட்டாட்சியை எதிர்த்தும், மலையையும் காடுகளையும் நம்பி வாழும் மக்களுக்கு அங்கு விறகு பொறுக்குவதிலிருந்து காய்கள், கனிகள், மூலிகைப் பொருட்கள், வாசனைத் திரவியங்களைச் சேகரித்து விற்க முழு உரிமை கோரியும் கம்பம் - கூடலூர் வட்டாரத்தில் வி.வி.மு., பரவலாகத் தெருமுனைக் கூட்டங்களை நடத்தியது. அனைத்துக் கிராமங்களிலும் வனத்துறையினரின் அட்டூழியத்தைப் பற்றி விவசாயிகள் குமுறியதோடு, இப்பிரச்சார இயக்கத்தை வரவேற்று ஆதரித்தனர்.

இதன் தொடர்ச்சியாக இக்கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டமும் பொதுக் கூட்டமும் நடத்தத் தீர்மானித்த வேளையில், போலீசார் அனுமதி தராமல் இழுத்தடித்தனர். பின்னர் ஒருவழியாக 31.10.99 அன்று அனுமதி பெற்று கூடலூரில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தகவல்: விவசாயிகள் விடுதலை முன்னணி, கம்பம்.


படிப்பகம்

www.padippakam.com


புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 15

இதழ்: 4 - 5

1 ஜன.2000 - 31 ஜன.2000

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# கவர்ச்சி நாயகனும் கழிசடை அரசியலும்

ரஜினிகாந்த் என்றழைக்கப்படும் சிவாஜிராவ் கெய்க்குவாட் சினிமாவில் நுழைந்து 25 ஆண்டுகள் ஆனதையும், அவர் 50 வயதை அடைந்ததையும் குறிக்கும் வகையில் நடத்தப்பட்ட ''ரஜினி-25'' என்ற விழாவை ஒரு பிரபல நடிகருக்கு மரியாதை செலுத்தும், பாராட்டும் வகையில் நடத்தப்பட்ட வெறும் பரபரப்பான விழாவாக மட்டும் கருத முடியாது. அவரும் அவரது குடும்பத்தாரும் இன்னொரு சுற்று வசூல் வேட்டை நடத்துவதை மட்டும் நோக்கமாகக் கொண்டதுமல்ல. இந்த விழாவின் நோக்கம், நடிகர் ரஜினியை உடனடியாக அரசியலில் நுழைப்பதற்கான ஏவுதளமாகப் பயன்படுத்துவது இல்லை என்றாலும், அதற்காக அவருக்குள்ள செல்வாக்கை நாடி பிடித்துப் பார்ப்பதற்கான சோதனைக் களமாக அமைக்கப்பட்டது என்றே கருதவேண்டும்.

சினிமா என்பது கோடிகோடியாகப் பணம் புரளும் பொழுதுபோக்கு கனவுத் தொழிற்சாலையாக இருக்கிறது. தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகள் சினிமாவைச் சுற்றி ஒரு பெரிய கற்பனை உலகை உருவாக்குகின்றன. பார்ப்பன - சனாதனப் பத்திரிகைகள்கூடத் தமது ஆச்சாரத்தில் இருந்து சற்று விலகி, சினிமாக் கவர்ச்சிச் செய்திகளை அன்றாடம் தாங்கி வருகின்றன. சாராயம், போதை மருந்து, லாட்டரி வியாபாரம் போல, சமுதாயத்தின் கணிசமான பேரை சினிமா போதைக்கு அடிமையாக்கி விடுவது நிரந்தரக் கொள்ளைக்கான வழியல்லவா! முதலில் ''பொழுதுபோக்கு''க்காக சினிமா, பிறகு ஒரு நடிகனின் கவர்ச்சியில் ஈர்க்கப்படும் ரசிகன் அந்த நடிகனையே கடவுள், தலைவர், முதல்வர் என்றெல்லாம் ஏற்றி வைத்து வெறிகொண்டவனைப் போல வழிபடும் அளவுக்கு போதை தலைக்கேறுகிறது. அந்த நடிகன் மீது வெறியேற்றும் வகையில் அவனும் அவனது உறவினர்களும் ஒரு சிறு சுயநலக்கும்பலும் திட்டமிட்டு வேலை செய்கின்றன. அவர்களிடையே ரசிகன் - நடிகன், தலைவன் தொண்டன் என்கிற உறவு கிடையாது. வசூல் வேட்டையில் சில்லரைப் பங்குதாரர்களாக ரசிகர் மன்றங்கள் மாற்றப்பட்டுவிட்டன.

ரசிகர் மன்ற வலைப்பின்னலை ஓர் அரசியல் கட்சி அமைப்பாக மாற்றுவதை தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆரும், ஆந்திராவில் என்.டி.ஆரும் வெற்றிகரமாகச் சாதித்தார்கள். சிவாஜி கணேசன், பாக்கியராஜ், டி. ராஜேந்தர் போன்றவர்கள் இத்தகைய முயற்சியில் தோல்வியுற்றாலும், எம்.ஜி.ஆரைப் போல நடிகர் ரஜினியை முன்னிறுத்தி, அரசியல் தலைமையை உருவாக்கும் முயற்சியில் சோ. ராமசாமி போன்றவர்கள் அடங்கிய கும்பல் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதற்கு முதற்படியாக, நடிகர் ரஜினிகாந்த் ஒரு சாதாரண மனிதரல்ல, ஓர் அபூர்வப் பிறவி, மகான் என்கிற தோற்றத்தை உருவாக்குகின்றனர். எம்.ஜி.ஆருக்கு இருந்த அத்தனை நல்ல குணங்களும் ரஜினிக்கும் உண்டு. வறுமை நிலையில் இருந்து கடுமையாக உழைத்து முன்னேறியவர்; கோடிகோடியாகப் பணமும், பெரும்புகழும் சேர்ந்த போதும் பழைய வாழ்க்கையையும், நண்பர்களையும் மறக்கவில்லை. அனைவரையும் மதிப்பவர், நன்றிமறவாதவர், பொய்யே பேசாதவர், கடும் உழைப்பாளி, எளிமையானவர், வள்ளல், நினைத்ததை வெளிப்படையாகப் பேசுபவர், மறைக்கத் தெரியாதவர், நல்ல பண்பாளர், மனித நேயர் மட்டுமல்ல எல்லாம் தெரிந்த ஆன்மீக மேதை என்றெல்லாம் ஏகமாகப் புகழ்ந்து தள்ளுகின்றனர். நடிகர் ரஜினிகாந்தால் ஆதாயம் அடைந்த சினிமாக்காரர்கள், ரசிகர்கள், பழைய - புதிய நண்பர்கள் ஆகியோரின் ''நன்றி மறவா''க் கருத்துக்கள் மட்டும் பெருமளவில் பிரச்சாரம் செய்யப்படும் அதே சமயம், அவருடைய பலகோடி ரூபாய் சொத்துக்களைப் பராமரிக்கும், அவருக்குப் பின்னிருந்து அரசியல் ஆலோசனைகள் வழங்கும் கூட்டத்தாரைப் பற்றிய செய்திகள் மட்டும் இரகசியமாகக் காக்கப்படுகின்றன.

ரஜினிக்குப் பின் கட்டப்படும் ஒளி வட்டமெல்லாம் அப்பட்டமான பொய்கள் தாம்! சினிமாவில் அவர் மூலம் சொல்லப்படுவதெல்லாம் ஆபாசம், வன்முறை, வெறும் பழிவாங்குதல், குடி-கூத்து. வெளியில் போதனையோ, இவையெல்லாம் கூடாது என்பது. சொந்த வாழ்விலும் ஆன்மீகம் என்கிற பெயரில் போலிச் சாமியார்கள் பின் அலைவது, வெளிநாடுகளில் குடி கும்மாளம் உல்லாச வாழ்க்கை நடத்திக் கொண்டு, எளிமை பற்றிய போதனை செய்வது. கருப்புப் பணவசூல், கள்ளச் சந்தை சினிமா வியாபாரம், சொத்துக் குவிப்பு; பேசுவதோ நேர்மையான வாழ்க்கை அவசியம் என்று. தன் மனைவி உழைத்துச் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக ரஜினி-25 விழா நடத்த அனுமதித்ததாகவும், முதல் வகுப்பு மாணவருக்கு 15,000 ரூபாய் வசூலிக்கும் தனது ''ஆஷ்ரம்'' பள்ளி மூலம் சமூகத் தொண்டு செய்வதாகவும் சொல்வது சினிமா நகைச்சுவையையே தோற்கடித்துவிட்டது. ''பாசிச இந்துத்துவா'' அரசியல் கண்ணோட்டம் கொண்டிருக்கும் ரஜினி, பாரதீய ஜனதா தலைமையுடன் இரகசிய உறவு வைத்திருக்கும் ரஜினி, தமிழக அரசியல் சூழ்நிலைக்கேற்ப ''ஜெயா எதிர்ப்பு முற்போக்கு அரசியல்'' பேசி வருவது மிகப்பெரிய அரசியல் மோசடி. சொந்த அரசியல் பலத்தின் மீது நம்பிக்கையில்லாத கருணாநிதியும் மூப்பனாரும் ரஜினி துதிபாடுகின்றனர். ஆனால், அரசியல் பிரவேசத்துக்கு சமயம் பார்த்துக் காத்திருக்கிறார்கள் ரஜினியும் அவரது கூட்டத்தாரும். ஒருவேளை அது வெற்றிகரமாக அமையுமானால், தமிழ்நாட்டுக்கு இன்னொரு இருண்டகாலமாகவே அமையும்.

www.padippakam.com

# காங்கிரசின் கொள்கை வழி? போலி கம்யூனிஸ்டுகளின் கனவு!

**வா**னம் ஏறி வைகுந்தம் போவேன் என்று ஆர்ப்பாட்டம் செய்தவன், பிறகு கூரை ஏறிக் கோழி பிடிக்கவும் திராணியற்றவன் என்று நிரூபிக்கப்பட்டது போல சோனியா காந்தி கும்பல் அம்பலப்பட்டு நிற்கிறது.

கடந்த தேர்தலின் போது, இந்த நாட்டுக்கு நிலையான ஆட்சி தரக்கூடிய தகுதி தனக்கு மட்டுமே உண்டு என்று பீற்றிக் கொண்டது சோனிய தலைமையிலான காங்கிரசு. அதற்கு ஒத்தூதிப் பிரச்சாரம் செய்தன இரண்டு போலிக் கம்யூனிஸ்டு மற்றும் பிற கூட்டணிக் கட்சிகள். ஆனால், இன்று....

நாட்டுக்கு நிலையான, திறமையான ஆட்சி தருவது இருக்கட்டும்; "ஒரு பொறுப்பான எதிர்க்கட்சியாகக்கூட இயங்குவதில்லை; ஆளுங்கட்சிக்குத் துணை அணியாகி விட்டதைப் போல செயல்படுகிறது. பலசமயம் திக்குத் தெரியாமல் தவிக்கிறது; செயலிழந்து நிற்கிறது" கூட்டணிக் கட்சிகளும், காங்கிரசிலேயே ஒரு பிரிவினரும் புலம்புகின்றனர்.

நவம்பர் மாதம், தரகு முதலாளிகள் கூட்டத்தில் பேசிய சோனியா காந்தி, பாரதீய ஜனதாக் கட்சியின் பொருளாதாரத் திட்டங்கள் - கொள்கைகளை முழுவதுமாக ஆதரிப்பதாக உறுதி கூறினார். அதன்படியே காப்பீடு துறையைத் தனியார் மற்றும் அந்நிய முதலாளிகளுக்குத் திறந்து விடுவது, அந்நியச் செலாவணி மாற்றை சீர்திருத்துவது என்கிற பெயரில் தாராளமயப்படுத்துவது, காப்புரிமைத் திருத்தச் சட்டம் ஆகிய விவகாரங்களில் அரசின் தீர்மானங்களைச் சிறுசிறு திருத்தங்களுடன் சட்டமாக்குவதற்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்தது, காங்கிரசு. அரசுத்துறை நிறுவனங்களை அடிமாட்டு விலைக்குத் தனியார் மற்றும் அந்நிய நிறுவனங்களுக்கு விற்பதை எதிர்ப்பின்றி ஆமோதித்தது.

பொருளாதாரத் துறையில் மட்டுமல்ல; வானொலி, வானொளியைக் கட்டுப்படுத்தும் பிரச்சார் பாரதி இயக்குநர் வாரியத்தில் இருந்து தாராளவாத "அறிவு ஜீவி"களை நீக்கிவிட்டு, இந்து மத வெறி ஆதரவாளர்களை நியமிப்பது; வரலாற்றுக் கவுன்சிலில் இதேபோன்று, இந்து மதவெறி ஆய்வாளர்களைத் திணிப்பது; கல்வித் துறையில் இந்துத்துவக் கொள்கைகளை அமலாக்குவது இன்னும் பல ஆர். எஸ். எஸ். - பாரதீய ஜனதா எத்தணிப்புகளைக் கண்டும் காணாமல் ஒதுங்கிக் கொள்கிறது, காங்கிரசு.

அயோத்தி பாபரி மசூதி இடிப்புக் குற்றவாளிகளென வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள அத்வானி, ஜோஷி, உமாபாரதி ஆகியோர் மைய அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்று பிற எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் மறியல் போராட்டத்தில் இறங்கின. ஆனால், சோனியாவின் வழிகாட்டுதலை ஏற்று, காங்கிரசுக்காரர்கள் ஒதுங்கிக் கொண்டனர்.

சோனியா காந்தி எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் போராட்டத்துக்குரிய பிரச்சினையாக எடுத்துக் கொண்ட ஒரே விவகாரம், போஃபர்ஸ் பீரங்கி பேர ஊழல் வழக்கில் ராஜீவ் காந்தி பெயரைச் சேர்ப்பதற்கு எதிர்ப்புக் காட்டியதுதான். சில நாட்கள் நாடாளுமன்றம் செயல்படவே முடியாமல் தடுத்ததோடு, டெல்லியில் ஒரு பேரணியும் நடத்தினர். தனது சொந்தப் பிரச்சினை தவிர வேறு எதையும் கையிலெடுத்துப் போராட அக்கட்சி முன்வரவில்லை.

இப்படியே போனால், காங்கிரசு மேலும் மேலும் செல்வாக்கிழந்து, அடுத்த தேர்தலைச் சந்திக்க முடியாமல் போய் விடும் என்று அதன் இடைத்தட்டுத் தலைவர்கள் அஞ்சுகிறார்கள். கடந்த தேர்தலுக்குப் பிறகு நடந்த கருத்துக் கணிப்பின்படி, தாழ்த்தப்பட்ட - பழங்குடியினர், சிறுபான்மையினர், பொருளாதார ரீதியில் பலவீனமானவர் ஆகிய பிரிவினர்களிடமிருந்துதான் அதிக வாக்குகளை காங்கிரசு பெற்றதாம். "இந்தப் பிரிவினர்களின் நலன்களைப் புறக்கணித்துவிட்டு, பாரதீய ஜனதாவுக்கு ஆதரவு தெரிவித்து, மேட்டுக்குடி, மேல்சாதி நலன்களுக்கான கொள்கைகளை காங்கிரசு ஆதரிக்கலாமா? அப்படிச் செய்தால், காங்கிரசு மேலும் மேலும் தனக்கு ஆதரவான வாக்குவங்கியை இழக்காதா?" என்று ஒரு காங்கிரசுத் தலைவர் புலம்புகிறார்.

"அதுதானய்யா காங்கிரசு! ஏழை - எளிய மக்களை ஏய்த்து ஓட்டுவாங்கிக் கொண்டுபோய், மேல்சாதி மேட்டுக்குடிக்கு சேவை செய்வது தானய்யா காங்கிரசின் அரசியல்" என்று நாம் சொல்கிறோம்.

இந்த உண்மையை மூடிமறைத்துவிட்டு, ஓட்டுப்பொறுக்குவதற்கு வசதியாக இந்திராவின் "பழைய வறுமையை ஒழிப்போம்!" என்கிற முழக்கத்துக்கும், மன்மோகன் - சிதம்பரம் பொருளாதாரக் கொள்கைக்கும் கலப்புத் திருமணம் செய்து ஒரு வீரிய ஓட்டு இரகத்தைப் பெற்றெடுக்க வேண்டும் என்று சிலர் கோருகின்றனர்.

காங்கிரசுக்குள்ளாகவே முற்போக்கு வேடம் கட்டி தலைமைக்கு வர எத்தணிக்கும் ராஜேஷ் பைலட், "எந்தக் காரணத்தைக் கொண்டும் நமது ஏழை மக்கள் ஆதரவுத் தோற்றத்தை சமரசம் செய்து கொள்ள முடியாது" என்று குதிக்கிறார்.

சோனியாவின் ராஜ விசுவாசி மாதவராவ் சிந்தியாவோ, "தாராளமயமாக்கம் இந்தியத் தேவைகளுக்குப் பொருத்தமாக இருக்க வேண்டும் என்று நாம் நம்புகிறோம். எல்லாவற்றையும் திறந்துவிடக் கூடாது. பலவீனமான மக்கள் மீதான அதன் தாக்கத்தை நாம் எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்; அதன் போக்கில் அவசியமாகும் போது திருத்தங்கள் செய்ய வேண்டும்" என்று பரிந்து

**"கை கொடுக்க நானிருக்கிறேன், கவலையை விடுங்கள்!" என்கிறாரோ சோனியா காந்தி?**





படிப்பகம்

www.padippakam.com

ரைக்கிறார்.

இவர்கள் அனைவருமே, ''தாராளமயம், தனியார்மயம், உலகமயம்'' என்ற பொருளாதாரக் கொள்கைக்கே ''மனித முகம்'' தருவது என்கிற மன்மோகன் - சிதம்பரம் போதனையைத்தான் வேறுமாதிரிக் கூறுகின்றனர். அதாவது, இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கை, ஏழை எளிய மக்களுக்கு முற்றிலும் எதிரானதல்ல; இவர்களுக்கும் கொஞ்சம் நிவாரணம் அளிக்கும் என்று நம்பவைப்பதுதான்.

ஆனால், இரண்டு போலி கம்யூனிஸ்டுக் கட்சிகளும், இதற்கு மேலாக காங்கிரசிடம் இருந்து எதிர்பார்க்கின்றன. சி.பி.எம். கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினரும் அதன் அதிகாரபூர்வ ஏட்டின் ஆசிரியருமான சீதாராம் எச்சூரி, ''புதிய பொருளாதாரக் கொள்கை மீதான எதிர்த்தரப்பின் உயிர்மூலத்தை காங்கிரசு கொன்றுவிடுகிறது. அது இப்போது பாரதீய ஜனதாக் கட்சியோடு ஒரே குரலில் பேசுகிறது. ஒரு எதிர்க்கட்சியைப் போல இனிமேலும் காங்கிரசு நடப்பதில்லை'' என்று சலித்துக் கொள்கிறார்.

சி.பி.ஐ. கட்சியின் பொதுச் செயலாளர் ராஜாவோ, ''காங்கிரசுக்கு ஒரு கண்ணோட்டமே இல்லை போலத் தெரிகிறது. பாரதீய ஜனதாக் கட்சியால், தான் பயன்படுத்தப்படுவதை காங்கிரசு புரிந்து கொள்ளவில்லை. அதிகாரத்திலுள்ள கட்சியை காங்கிரசு ஆதரிக்கும் ஒவ்வொருமுறையும், முக்கியமான பிரச்சினைகளில் ஒரு நிலை எடுக்கத் தவறும்போதும், அனைவரும் ஏற்றுக்கொள்ளும் கருத்தொற்றுமை அடைந்துவிட்டதாக பாரதீய ஜனதாக் கட்சி கூறுகிறது. இந்த அணுகுமுறை காங்கிரசையே ஒழித்துவிடும்'' என்று எச்சரிக்கிறார்.

''இல்லை, தோழர்களே! எங்கள் அரசியல் பொருளாதாரக் கொள்கைகளில் நாங்கள் தெளிவாகவே இருக்கிறோம். உங்கள் வழிக்கு எங்களை இழுக்கும் வீண் முயற்சியில் நீங்கள் ஈடுபடத் தேவையில்லை!'' என்று அப்பட்டமாகவே காங்கிரசுத் தலைமை அறிவித்துவிட்டது.

தாராளமயம், தனியார்மயம், உலகமயம் ஆகிய புதிய பொருளாதாரக் கொள்கைதான் காங்கிரசின் கொள்கை என்பதை உறுதிப்படுத்திய சோனியா காந்தி, ''காங்கிரசுதான் பொருளாதாரச் சீர்திருத்தத்தைப் புகுத்திய கட்சி; ஆகவே, அந்தப் பாதையில் இருந்து விலகாது; பாரதீய ஜனதாவைப்போல, எதிர்க்கட்சியாக இருக்கும்போது ஒன்றும் ஆளும்கட்சியான பிறகு வேறொன்றுமாக காங்கிரசு நடந்து கொள்ளாது; இரண்டாம் தலைமுறை (இரண்டாம் கட்ட) சீர்திருத்தத்தை காங்கிரசு உறுதியாக ஆதரிக்கிறது; இதைப் பயன்படுத்திக் கொண்டு ஒத்த கருத்தை உருவாக்கி, இனி வேகமாக அமல்படுத்த வேண்டியது பா.ஜ.க. அரசின் பொறுப்பு'' என்று முதலாளிகள் மாநாட்டில் வாக்குறுதி வழங்கினார்.

காப்பீடு துறையைத் தனியார் - அந்நிய மயமாக்கும் மசோதா நாடாளுமன்றத்தில் வந்தபோது, ''காலத்தின் மாறுதலுக்கேற்ப இடது சாரிகள் மாறவில்லை என்றால் வரலாற்றின் குப்பைக் கூடையில் வீசப்படுவார்கள்'' என்று ருசிய டிராட்ஸ்கியை மேற்கோள் காட்டி நீண்ட பிரச்சாரம் செய்தார், நிதி அமைச்சர். அப்போது குறுக்கிட்ட காங்கிரசு எம். பியோ, ''அதுதான் முழு ஆதரவு தருவதாக நாங்கள் கூறிவிட்டோமே! சீக்கிரம் முடித்து, மசோதாவை நிறைவேற்றும். சும்மா, ஏன் பேசிக் கொண்டே போகிறீர்கள்!'' என்று சொல்லி விரைவுபடுத்தினார்.

மசோதாவைப் போலி கம்யூனிஸ்டுகள் எதிர்த்துப் பேசியபோது குறுக்கிட்ட காங்கிரசுக்காரர், ''சீனா, வியத்நாம் ஆகிய கம்யூனிச நாடுகளிலேயே காப்பீடு - வங்கித் துறைகளில் 20 சதவீதம் அந்நிய நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றன; இங்கே செய்தால் என்ன?'' என்று கேட்டபோது, இவர்கள் வாயடைத்துப் போனார்கள்.



**பாரதீய ஜனதாவின் இளைய அணி போல காங்கிரசு செயல்படுகிறது என்று சி.பி.எம். குற்றஞ்சாட்டிய போது, ''இது கூடாது என்றால், சி.பி.எம்.இன் இளைய அணியாக காங்கிரசு செயல்பட வேண்டுமா?'' என்று சோனியா எதிர்க்கேள்வி கேட்டார். இப்படி மூக்குடைபட்டு போன பின்னும், காங்கிரசு ஒரு எதிர்க் கட்சியைப் போலச் செயல்பட மறுக்கிறதே எனப் புலம்புகிறார், சி.பி.எம்.இன் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் சீதாராம் யெச்சூரி**

''பாரதீய ஜனதாவின் இளைய அணி போல காங்கிரசு செயல்படுகிறது'' என்று சி.பி.எம். குற்றஞ்சாட்டிய போது, ''இது கூடாது என்றால், சி.பி.எம்.மின் இளைய அணியாக காங்கிரசு செயல்பட வேண்டுமா?'' என்று சோனியா எதிர்க்கேள்வி கேட்டார்.

இத்தனைக்கும் பிறகு போலி கம்யூனிஸ்டுகள் கொஞ்சமும் கூச்சமின்றி தங்கள் நிலையெடுத்து புதிய பொருளாதாரக் கொள்கைகள், சீர்திருத்த நடவடிக்கைகளை எதிர்க்க வேண்டும் என்று காங்கிரசைக் கோருகின்றனர். சோனியா தலைமையிலான காங்கிரசை இடது பக்கம் திருப்புவதற்கான பகீரத முயற்சியில் இறங்கியுள்ளனர். அதிலும் குறிப்பாக நாட்டின் மிகப் பெரிய அரசியல் தரகரான சுர்ஜித் இதையே தன் வாழ்நாளின் ஒரே இலட்சியமாகக் கொண்டு அயராது பாடுபடுகிறார். ஜெயலலிதா, முலாயம் சிங், லல்லு, தேவே கவுடா இப்படிப்பட்ட நபர்களின் வரிசையில் முதன்மையாக, சோனியாவை முற்போக்கு ஜனநாயக சக்தியாகவே மாற்றிவிடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு தள்ளாத வயதிலும் பாடுபடுகிறார்.

''காங்கிரசு ஏதாவது பாடங்கற்றுக் கொண்டிருக்கிறதா?'' என்ற தலைப்பில், தனது கட்சியின் அதிகாரபூர்வ வார இதழில் (டிச. 5, 1999) முதன்மைக் கட்டுரை ஒன்றை சுர்ஜித் உருகி உருகி எழுதியுள்ளார். ''கடந்த தேர்தலில் மிக மோசமாகத் தோல்வி அடைந்த காங்கிரசுக் கட்சியின் தரப்பில் மறு சிந்தனையை எதிர்பார்த்த மக்கள், சமீபகால சம்பவங்களால் ஏமாந்து போய் விட்டார்கள். அம்மாதிரி மக்களிடம் நிலவி வந்த மிகமோசமான பயங்கலந்த கவலையை, சந்தேகத்தை, நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத் தொடருக்கு முன்பு வந்த காங்கிரசு கட்சி அறிவிப்புகள் உறுதிப்படுத்திவிட்டன'' என்று ஆதங்கப்படுகிறார், சுர்ஜித்.

போஃபார்ஸ் பீரங்கி ஊழல் வழக்கில் இருந்து இராஜீவ் காந்தி பெயரை நீக்கினால், பா.ஜ.க அரசின் தீர்மானங்களை ஆதரிப்பதாக தூதனுப்பியது காங்கிரசுத் தலைமை. இந்தக் கோரிக்கைக்காக தில்லியில் பேரணி நடத்த ஆட்களைத் திரட்டியது. ''இது பரந்துபட்ட மக்களிடையே தவறான சமிக்ஞையை (கருத்தை) மட்டுமே உருவாக்கியது; காங்கிரசு உண்மையான பிரச்சினைகளில் இருந்து திசை திரும்பிவிடக்கூடிய வழக்கமுடையது. அது, பா.ஜ.க அரசுக்கு ஆதரவளித்துவிடும் என்று மக்களை நம்பச் செய்து விட்டது. இம்மாதிரியான செயல் தந்திரங்களில் ஈடுபடுவதன் மூலம், காங்கிரசு, தனது சுயநலனுக்காக வேண்டி நாட்டு நலனைப் பலி கொடுக்கக் கூடிய கட்சி என்ற தோற்றத்தை மட்டுமே ஏற்படுத்துகிறது.''

உலகமயம், தாராளமயம் ஆகிய கொள்கைகள் உலகம் முழுவதும் பல கோடி மக்களின் வாழ்க்கைத் தேவைகளைப் பறிப்பதால், அவற்றை மக்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள்; இந்தியாவிலும் தனியார்மயத்தை எதிர்த்து மக்கள் தீவிரமாகப் போராடுகின்றனர். ''பா.ஜ.வுக்கு எதிராகப் போராடும் காங்கிரசு, தனது பொருளாதாரக் கொள்கைகளை மக்கள் சார்பானதாக மாற்றிக் கொள்ள வேண்டும்; அல்லது, அது தனது செல்வாக்கை மேலும் இழக்கும் என்பதைக் குறிக்கிறது'' என்று சுர்ஜித் எச்சரிக்கிறார்.

''காங்கிரசை உயிர்ப்பிக்கும் எந்தவொரு முயற்சியும் இயற்கையாகவே,



படிப்பகம்

தொடர்ந்து அதன் தோல்விக்கான காரணத்தை ஆய்வு செய்வதை அவசியமாக்கி விடும். இதன் விளைவாக மக்கள் சார்புடையதாக அதன் திட்டத்தையும் கொள்கைகளையும் மறுவார்ப்பு செய்வதாக முடிந்திருந்திருக்கும். அம்மாதிரி எதுவும் வருவதாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக, தாராளமயம் மற்றும் பிற கொள்கைகள் தமக்கே சொந்தமானவை என்று உரிமை பாராட்டுவதன் மூலம் முதலாளிகள், நிலப்பிரபுத்துவ வர்க்க நலன்களுக்காகப் பாடுபடும் காங்கிரசு, அதே வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பா.ஜ.க.விடமிருந்து தெளிவான எல்லைக்கோடு வரைவதில் தோல்வியடைந்துவிட்டது. உண்மையைச் சொல்வதானால், காங்கிரசின் அடியொற்றி, அதே பொருளாதாரக் கொள்கைகளைத்தான் மேலும் தீவிரமாக பா.ஜ.க அமலாக்குகிறது.'' என்று அறிக்கை வாசிக்கிறார், சுர்ஜித்.

''இதன் பொருள் என்னவென்றால், காங்கிரசு அதன் கடந்த காலத் தவறுகளில் இருந்து படிப்பினைகள் எதையும் கற்றுக் கொள்ளவில்லை. இன்றைய காங்கிரசு முந்தையதின் ஒரு நிழல் மட்டுமே. 52 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அமைப்பின் மிகமிக மோசமான ஒரு சாயலைத்தான் பெற்றிருக்கிறது'' என்று ஆதங்கப்படுகிறார், சுர்ஜித்.

சுதந்திரத்துக்குப் பிந்திய கால காங்கிரசுத் தலைமை, தேசிய இயக்கம் கையளித்த அரசியல் - சமூகத் திட்டங்களை மேற்கொண்டது; விடுதலை இயக்கம், சர்வதேச நிலைமைகள் காரணமாக, கல்வி - மருத்துவம் மற்றும் பிற சமூக நலத் திட்டங்களுக்கு ஏராளமான நிதி ஒதுக்கியது. தெலுங்கானா உட்பட பல உழவர் எழுச்சியை ஒட்டி, நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டு வந்தது; அதனால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பலம் பெற்றிருந்தது;

ஆனால், இன்று அதனிடம் நான்கில் ஒரு பங்கு கூட பலம் கிடையாது என்று சொல்லும் சுர்ஜித், இதற்கான காரணமாக, ''தலைமை மாறினால் மட்டும் போதாது, மக்கள் சார்புக் கொள்கைகளும், பா.ஜ.க விடமிருந்து காங்கிரசை வேறுபடுத்தும் தெளிவான வரையறுப்பும் இல்லாததுதான்'' என்கிறார். காங்கிரசில் இருந்து பா.ஜ.கவுக்கு ஓடுவது சோனியாவின் வரவால் ஓரளவு தடுத்து நிறுத்தப்பட்டாலும், ''ஒரு நேர்மறையான வேலைத் திட்டம் இல்லாததால் சோனியாவின் வேண்டுகோள்களை காங்கிரசுத் தலைவர்கள் எதிர்பார்த்ததைப் போல, வாக்குகளாக மாற்ற முடியாமல் போனது; தேர்தல்களில் மிகமோசமான தோல்வி அடைந்தது'', என்கிறார், சுர்ஜித்.

இப்படிப்பட்ட ஆய்வுரையின் மூலம், நாட்டின் முதன்மையான, முதிர்ந்த அரசியல் தரகர் என்ன சொல்கிறார்?

— தேர்தல் தோல்விகளுக்கான காரணங்களைச் சரியாகவும் நேர்மையாகவும் பாரியமுறையிலும் பரிசீலனை செய்து, அவசியமான படிப்பினைகளை காங்கிரசுத் தலைமை பெறத் தவறுகிறது.

— மக்களுடைய எதிர்பார்ப்புக்கு மாறாக, உலகமயம், தாராளமயம், தனியார்மயம் என்கிற புதிய பொருளாதார சீர்திருத்தக் கொள்கைகளில் பா.ஜ.க அரசை ஆதரிக்கிறது.

— பா.ஜ.க அரசின் பொருளாதார நடவடிக்கைகளை ஆதரிப்பதன் காரணமாக, அதனுடன் தெளிவான எல்லைகளை வரையறுக்கத் தவறுகிறது. இதனால் காங்கிரசு தனது சுயநலனுக்காக நாட்டு நலனை - மக்கள் நலனை ஒதுக்கிவிடும் கட்சி என்கிற அவநம்பிக்கை மக்களிடம் ஏற்படுகிறது.

— மக்கள் ஆதரவு, மக்கள் நல, மக்கள் சார்புப் பொருளாதாரத் திட்டங்கள் இல்லாததுதான், காங்கிரசின் செல்வாக்குக் குறையவும், பின்னடைவு - தோல்விக்குக் காரணம்.



மார்க்ஸும், லெனினும் முதலாளிகள் கையிலுள்ள அதிகாரத்தைப் பறிப்பதைத்தான் கம்யூனிஸ்டுகளின் புரட்சிகரப் பணியாகக் கூறினார்கள். 'மார்க்சிஸ்டு' கட்சியின் பொதுச் செயலாளர் சுர்ஜித்தோ, தரகு முதலாளிகள் - நிலப்பிரபுக்களின் கட்சியான காங்கிரசுக்குச் சிவப்புச் சாயம் பூசுவதைப் புரட்சிகரப் பணியாய்க் காட்டி, கட்சியின் அணிகளையும், இந்திய மக்களையும் ஏய்க்கிறார்!

— சுதந்திரத்தை அடுத்து வந்த ஆண்டுகளில் இருந்த காங்கிரசுத் தலைமை பல மக்கள் நலத் திட்டங்களையும் நிலச்சீர்திருத்தச் சட்டம் போன்றவற்றையும் அமலாக்கியது. அப்படிப்பட்ட காங்கிரசின் ஒரு நிழலாகத்தான் இன்றைய அமைப்பு இருக்கிறது.

— ஒன்று மக்கள் சார்புப் பொருளாதாரக் கொள்கை மாற்றங்கள் செய்ய வேண்டும்; அல்லது, அதன் அடிமட்ட செல்வாக்கு மேலும் சரிவதை எதிர்கொள்ள வேண்டும் என்ற நிலைக்கு காங்கிரசு போய்விட்டது.

— காங்கிரசுத் தலைவர்கள் எதிர்பார்க்குமாறு சோனியாவின் செல்வாக்கை வோட்டுக்களாக மாற்ற வேண்டுமானால், மக்கள் நலத் திட்டங்களை வைக்க வேண்டியது அவசியம்.

இந்த ஆய்வுக் கோட்பாடு ஒரு சாதாரண முதலாளித்துவ தாராளவாத அறிவுஜீவியால் முன்வைக்கப்பட்டதில்லை. உலக கம்யூனிஸ்டுகளிலேயே முக்காலும் சரியான நிலைப்பாடு எடுப்பதாக மார்தட்டிக் கொள்ளும் சி.பி.எம். கட்சியின் அரசியல் தலைமைக் குழு, கட்சிப் பொதுச் செயலாளர் அரிகிருஷ்ணசிங் சுர்ஜித் முன்வைப்பது.

ஆனால், மார்க்சிய - லெனினிய ஆரம்பப்பாடம் கூட வேண்டாம், வெறும் தர்க்கம் மட்டுமே அறிந்த மக்களிடமே கூடப் பின்வரும் கேள்விகள் எழக்கூடும்.

★ தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்கிற புதிய பொருளாதார - சீர்திருத்தக் கொள்கைதானே காங்கிரசின் உண்மையான கொள்கை? எப்போதாவது, எந்த வகையிலாவது அந்தக் கொள்கைக்கு மாறுபாடாக காங்கிரசு நடந்ததோ, பேசியதோ உண்டா? காங்கிரசு அதன் ஆளும் வர்க்க ஆதரவு அடிப்படைப் பொருளாதாரக் கொள்கையை எக்காரணம் கொண்டும் கைவிடுமா?

★ இந்திரா காந்தியின் இறுதிக் காலத்திலும், அவரது வாரிசுகளும் பகிரங்கமாக அறிவித்து, மேற்கொண்ட புதிய பொருளாதாரக் கொள்கைதான், நரசிம்மராவ் - மன்மோகன் சிங் கும்பலால் உறுதியாக அமலாக்கப்பட்டது. இப்போது காங்கிரசு எதிர்க் கட்சியாகிவிட்டது என்பதற்காக, பா.ஜ.கவை எதிர்க்க வேண்டும் என்பதற்காக, பொருளாதாரச் சீர்திருத்த என்னும் மக்கள் விரோதக் கொள்கையைக் கைவிட வேண்டுமா? அப்படிக் கைவிடுவதாகச் சொல்லி மக்கள் ஆதரவு கொள்கைகளையும் திட்டங்களையும் அறிவித்தால் அது நம்பக் கூடியதா?

★ காங்கிரசு - பாரதீய ஜனதா ஆகிய இரண்டுமே பெருமுதலாளிகள் தலைமையிலான முதலாளிகள் - நிலப்பிரபுக்கள், ஆகிய ஆளும் வர்க்கக் கட்சிகள் என்று சி.பி.எம். வரையறுக்கிறது. அப்படி இருக்கும் போது பா.ஜ.க.விடமிருந்து வேறுபடுத்தும் வகையில் காங்கிரசு மட்டும் தெளிவான எல்லைக் கோடு வரைந்து கொள்ளத் தவறியது; அவ்வாறு வேறுபடுத்திக் காட்டும் எல்லைக் கோட்டை வரைந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கலாமா? அத்தகைய வேறுபாடு இருப்பதாக காங்கிரசு காட்டிக் கொண்டாலும் அதை மற்றவர்கள் நம்பலாமா?

★ காங்கிரசு, பாரதீய ஜனதா மட்டுமல்ல வி.பி.சிங், சந்திரசேகர், தேவே

தொடர்ச்சி 21-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# சிரிப்பாய்ச் சிரிக்கிறது போலி கம்யூனிஸ்டுகளின் 'புரட்சி'ப் போராட்டம்




இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட்) யிலுள்ள புரட்சியை நேசிக்கும் இளைஞர்களே,

''போராட்டம் இல்லாமல் மாற்றம் இல்லை'' என்று நீங்கள் நீண்டகாலமாகப் பிரச்சாரம் செய்து வருகிறீர்கள். ''இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தில் (DYFI) அணி திரளுங்கள்!'' என்று இளைஞர்களை அறைகூவி அழைக்கிறீர்கள்.

இதோ, இந்தப் படத்தைப் பாருங்கள். புதுவையில் அரியாங்குப்பம் கொம்யூனின் (பஞ்சாயத்தின்) அவலங்களை விளக்கியும், குடிநீர், சாக்கடை - கழிப்பிட வசதி செய்து தராததைக் கண்டித்தும் உங்கள் கட்சியின் தலைமையிலுள்ள இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் கடந்த அக். 26 அன்று நடத்திய சிரிக்கும் போராட்டம்தான் இது!

குடிநீர் - கழிப்பிட வசதிகோரி நாட்டின் பல பகுதிகளில் பல கட்சிகளும் - இளைஞர் அமைப்புகளும் போராட்டங்களை நடத்தியிருக்கின்றன. சில இடங்களில் மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு போராடியிருக்கிறார்கள். கண்டன ஆர்ப்பாட்டம், ஊர்வலம், கழிவு நீரைக் கொண்டுவந்து பஞ்சாயத்து அலுவலகத்தில் கொட்டுவது, அதிகாரிகளை முற்றுகையிட்டு ''கெரோ'' செய்வது — எனப் பல வடிவங்களில் போராட்டங்கள் நடந்ததுண்டு. ஆனால், சிரிக்கும் போராட்டம் என்று யாரும் இதுவரை நடத்தியதாக வரலாறில்லை. போராட்டம் என்ற பெயரில் இப்படி யாரும் கோமாளிக் கூத்து நடத்தியதாகவும் தெரியவில்லை.

''இது நூதன வடிவிலான போராட்டம்; பஞ்சாயத்தின் யோக்கியதை சிரிப்பாய் சிரிக்கிறது என்று காட்டும் வகையிலே இப்போராட்டம் நடத்தப்பட்டது'' என்கிறார்கள் வாலிபர் சங்கத்தினர். ஆனால், இப்படி பல்லைக் காட்டி இளிப்பது ஒரு போராட்டமா? இதன் மூலம் பஞ்சாயத்து நிர்வாகிகளுக்குப் பாதிப்பையோ, நிர்ப்பந்தத்தையோ ஏற்படுத்தத்தான் முடியுமா?

இப்படி நாம் கேட்டால், இதை குதர்க்கவாதம் என்கிறார்கள் உங்கள் கட்சித் தலைவர்கள். ''மக்கள் இன்னும் போராட்டத்துக்குத் தயாராகவில்லை. இந்நிலையில் தீவிரமான போராட்டங்களை நாம் திணிக்கக் கூடாது. அது போராட்டத்தை பின்னுக்கு இழுத்து விடும்; படிப்படியாகத்தான் முன்னேற வேண்டும். மக்களை உணர்வூட்டி அடுத்த கட்ட போராட்டத்தைத் தொடுக்க வேண்டும்'' என்று அறிவுறுத்துகிறார்கள்.

அப்படியென்றால், இந்த சிரிக்கும் போராட்டம் முதற்கட்டமா? ஒப்பாரி வைப்பது அடுத்த கட்டமா? ஊளையிடுவது உயர்ந்த கட்டமா? உங்கள் கட்சித் தலைவர்களுக்கே வெளிச்சம். அது ஒருபுறமிருக்கட்டும். இந்தச் சிரிக்கும் போராட்டத்தால் மக்கள் உணர்வு பெறுவார்கள் என்று நம்புகிறீர்களா? இதை, பைத்தியக்கார விடுதியிலிருந்து தப்பி வந்தவர்கள் நடத்தும் கூத்தாகக் கருதுவார்களே தவிர, இதை ஒரு போராட்டம் என்று மூளையுள்ள எவரும் ஏற்க மாட்டார்கள். தாமும் இணைந்து போராட வேண்டும் என்ற உணர்வையும் பெற மாட்டார்கள்.

அண்மையில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட இந்திய விமானத்தில் பிணைக் கைதிகளாக சிக்கித் தவித்த பயணிகளின் உறவினர்கள் பிரதமர் வீட்டு முன்பு திரண்டு ஆர்ப்பாட்டம் செய்ததையும், சாலை மறியலில் ஈடுபட்டதையும் நாடே நன்கறியும். மேட்டுக்குடியினரான அவர்கள்கூட உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரி இந்திய ஆட்சியாளர்களை நிர்ப்பந்தித்து போராட்டத்தில் ஈடுபட்டார்கள். ஆனால், போராட்டம் என்று அவர்கள் சிரித்துக் கொண்டிருக்கவில்லை. போராட்டம் என்றால் என்னவென்று அவர்களுக்குத் தெரிந்ததுகூட, புரட்சி செய்யப்போவதாகக் கூறிக் கொள்ளும் உங்கள் கட்சித் தலைவர்களுக்குத் தெரியவில்லையே!

மனிதச் சங்கிலி என்று நெடுஞ்சாலை ஓரத்தில் வரிசையாக கைகோர்த்துக் கொண்டு நிற்பது, மொட்டை அடித்து நாமம் போட்டுக் கொண்டு ஊர்வலமாகச் செல்வது, உள்ளாடையுடன் அரைநிர்வாண ஊர்வலம் நடத்துவது, சங்கு ஊதி மணியடித்து பாடை ஊர்வலம் போவது, ஒப்பாரி வைப்பது, கருப்பு நாடாவை சட்டையில் குத்திக் கொள்வது எனப் பலவகையான கோமாளித்தனங்களை உங்கள் கட்சித் தலைமையிலுள்ள பல தொழிற்சங்கங்களும் அலுவலர் சங்கங்களும் நடத்தி வருகின்றன. இவற்றையும் நூதனப் போராட்டம் என்று உங்கள் கட்சி பறைசாற்றிக் கொள்கிறது.

உண்மையில், உங்கள் கட்சி, சக்தி வாய்ந்த மக்கள் திரள் போராட்டங்களையோ, போர்க்குணமிக்க போராட்டங்களையோ நடத்தத் திராணியற்றுப் போய்விட்டது. அரசியல் போராட்டங்களை அல்ல; மிகச் சாதாரண பொருளாதாரக் கோரிக்கைகளுக்கான தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்களைக் கட்டியமைத்து நடத்தக்கூட அருகதையற்றுப் போய்விட்டது. எனவேதான், பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல் — முதலாளிகள், நிலப்பிரபுக்கள், ஆட்சியாளர்களுக்கும் பாதிப்பு இல்லாமல், போராடுவோருக்குச் சிரமம் இல்லாமல், பொழுதுபோக்கு நிகழ்ச்சியைப் போல போராட்டங்களை நடத்துகின்றனர். தங்களையே இழிவுபடுத்திக் கொண்டு கோமாளித்தனமாகக் கூத்தடிப்பதைக் கூட போராட்டம் என்கின்றனர்.

கட்சி ஊழியர்கள் - ஆதரவாளர்களான உங்களை இப்படிப் போராடச் சொல்லி வழிகாட்டும் உங்கள் தலைவர்கள், உங்களுடன் சேர்ந்து இப்படி கோமாளித்தனம் செய்ய வருவதில்லையே! நாடாளுமன்றத்தின்முன் சுர்ஜித் அரைநிர்வாண ஊர்வலம், கோட்டை முன்பு சங்கரய்யா சிரிக்கும் போராட்டம், கல்கத்தா வீதிகளில் ஜோதிபாசு மொட்டையடித்து நாமம் போட்டுக் கொண்டு ஊர்வலம் என்று செய்திகள் வருவதில்லையே, அது ஏன்?

துடிப்பும் ஆற்றலும் கொண்ட புரட்சிகர இளைஞர்களே, போராட்டம் என்ற பெயரில் உங்களை நீங்களே இழிவுபடுத்திக் கொள்ளப் போகிறீர்களா? இனியும் இந்த அவமானங்களைச் சகித்து கொண்டு சிரிப்பாய் சிரிக்கப் போகிறீர்களா? அல்லது உங்களது போர்க்குணத்தை மழுங்கடித்து இழிவுபடுத்தும் இப்போலி கம்யூனிஸ்டுக் கட்சியை விட்டு வெளியேறி, நக்சல்பாரி புரட்சியாளர்களுடன் இணைந்து புரட்சிப் பாதையில் அணிவகுக்கப் போகிறீர்களா?

● குப்பன்



படிப்பகம்

www.padippakam.com

# ஈழப் பிரச்சினை:

# சமாதானமா? தனி ஈழமா?

விடுதலைப் புலிகள், கடந்த நவம்பர் மாதம் முதல் வாரத்தில் சிங்கள இராணுவ நிலைகளின் மீது தாக்குதல் நடத்தி, முல்லைத்தீவு மற்றும் வன்னிப் பகுதிகளைச் சேர்ந்த மாங்குளம், நெடுங்கேணி, ஒட்டிசுட்டான் உள்ளிட்ட ஆறு நகரங்களை மீளக் கைப்பற்றியுள்ளனர். சிங்கள இராணுவம், கடந்த இரண்டரை வருடமாகப் போராடிக் கைப்பற்றியிருந்த இந்தப் பகுதிகள், ஒரு சில நாட்களிலேயே புலிகளின் வசம் விழுந்துவிட்டன. இதையடுத்து, விடுதலைப் புலிகள் யாழ் நகரைக் கைப்பற்றும் நோக்கில், தற்பொழுது, யானையிறவு இராணுவ முகாமைத் தாக்கத் தொடங்கியுள்ளனர். தமிழகத்திலுள்ள விடுதலைப் புலிகளின் பிரச்சாரகர்கள், விடுதலைப் புலிகளின் இந்த வெற்றியைக் காட்டி, புலிகளின் தலைமையில் சுதந்திர தமிழ் ஈழம் அமைவது இன்னும் கையெட்டும் தூரத்தில்தான் உள்ளது என்பதைப் போல ஊதிவிடுகின்றனர்.

இன்னொரு புறமோ, ஈழ மக்களின் சுய நிர்ணய உரிமையை மறுக்கும், விடுதலைப் புலிகளை எதிர்க்கும் ''சோ'' போன்ற பார்ப்பன - பாசிஸ்டுகளும், 'தேசிய'ப் பத்திரிகைகளும், இலங்கையில் நடந்த அதிபர் தேர்தலில் சந்திரிகா மயிரிழையில் அடைந்த வெற்றியை, இலங்கையில் நடைபெற்று வரும் போரை நிறுத்தி, சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு மீண்டும் கிட்டியுள்ள வாய்ப்பாகக் கூறுகின்றனர். இலங்கையில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு சந்திரிகாவை விட்டால் வேறுயாரும் கிடையாது என்று துதி பாடுகின்றனர்.

புலிகளின் தலைமையில் தனி ஈழமா? அல்லது சந்திரிகாவின் சமாதானமா? — ஈழப் பிரச்சினை, இவையிரண்டில் எதை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது எனக் கேட்டால், இவையிரண்டில் எதை நோக்கியும் திட்டவட்டமாகச் செல்லவில்லை என்றுதான் கூற முடியும்.

சந்திரிகா அரசின் சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறையும், அதனை இராணுவ ரீதியாக மட்டுமே எதிர்த்துப் போராடும் புலிகளின் நடைமுறையும், அதனின் பாசிசத் தலைமையும், குறுந்தேசிய வெறியும் ஈழத் தமிழர் பிரச்சினையை முட்டுச் சந்துக்குள் கொண்டு வந்து நிறுத்தி விட்டது.

1994-இல், விடுதலைப் புலிகள் உள்ளிட்டு பெரும்பாலான ஈழத் தமிழ் அமைப்புகளால் சமாதான தேவதையாகக் காட்டப்பட்ட சந்திரிகா, அப்பொழுது நடந்த அதிபர் தேர்தலில் 62 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். சிங்கள மக்களை விட ஈழத் தமிழர்கள் மத்தியில் சந்திரிகாவிற்கும், அவரது சமாதானத்திற்கும் இருந்த வரவேற்புதான் அவரது அமோக வெற்றிக்குக் காரணமாக அமைந்தது.

தற்பொழுது நடைபெற்ற அதிபர் தேர்தலில் சந்திரிகாவுக்குக் கிடைத்த வாக்குகள் பெறும் 51 சதவீதம்தான். ஈழத் தமிழர் பகுதி வாரியான யாழ் வளைகுடா மட்டுமின்றி, மலையகத் தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் நுவரலியா, பதுல்லா மாவட்டங்களிலும், சந்திரிகாவை விட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கேதான் அதிக வாக்குகளைப் பெற்றுள்ளார். இப்படி, ஈழத் தமிழர்களால் புறக்கணிப்பட்டுவிட்ட சந்திரிகாவை, ஈழத் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகக் காட்டுவது கடைந்தெடுத்த பித்தலாட்டத்தனம்!

''சமாதானத்தைக் கொண்டு வருவார்'' என நம்பி வாக்களித்த ஈழத் தமிழ் மக்களுக்கு, சந்திரிகா கொடுத்தது என்ன? கடந்த ஐந்து வருடங்களில், ''சூரிய ஒளிக்கதிர்'', ''ஜெயசிக்குறு'', ''ரிவிபல'', ''ரணகோச'', ''வாட்டர் செட்'' எனப் பத்துக்கும் மேற்பட்ட இராணுவத் தாக்குதல்கள் ஈழத்தமிழ் மக்கள் மீது ஏவிவிடப்பட்டன; போரின் பொழுது உயிரைக் காத்துக் கொள்ள ஈழ மக்கள் தஞ்சமடைந்திருந்த கோயில்களும், தேவாலயங்களும், பள்ளிகளும் அனைத்துலகப் போர் விதிகளையும் மீறிக் குண்டு வீசித் தகர்க்கப்பட்டன; சிங்கள இராணுவத்தால் ஈழத் தமிழர்களின் கிராமங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அழிக்கப்பட்டதால், அவர்கள், தமிழகத்தையும், வன்னிக் காட்டையும் நோக்கி அகதிகளாக ஓடினர். சந்திரிகா எத்தகைய இனவெறி பிடித்த பாசிஸ்ட் என்பதைப் புரிந்து கொள்ளுவதற்கு செம்மணி புதை குழிகள் விவகாரம் ஒன்றே போதும்! இதன் பின்னும், சோ வகையறாக்கள், ''சந்திரிகாவின் வெற்றி, சமாதானத்தின் வெற்றி'' எனக் கூப்பாடு போட்டு, தமிழக மக்களின் காதில் பூ சுற்றுகிறார்கள்.

கடந்த மூன்று ஆண்டுகளாக சிங்கள இராணுவம் பெற்ற வெற்றிகளைக் காட்டி, சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று மீண்டும் அதிபராகிவிடலாம் என்ற நம்பிக்கையில்தான் சந்திரிகா, தனது பதவிக் காலம் முடிவதற்கு ஓராண்டு இருக்கும் பொழுதே இத்திடீர்த் தேர்தலை அறிவித்தார். சந்திரிகாவின் மீது நம்பிக்கையிழந்துவிட்ட ஈழத் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற, சந்திரிகாவை எதிர்த்துப் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்கே, ''வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி, அதனை இரண்டு ஆண்டுகளில் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதாக'' வாக்குறுதியை அள்ளி வீசினார். சந்திரிகா, ரணிலின் இந்தத் தேர்தல் வாக்குறுதியை, நாட்டைத் துண்டாட நடக்கும் சதி என ஊதிப் பெருக்கி, சிங்கள இன வெறியைத் தூண்டிவிட்டார்.

சந்திரிகாவின் இனவெறிப் பிரச்சாரமும், மனித வெடிகுண்டுக்குப் பலியாகாமல், அவர் உயிர்தப்பிப் பிழைத்ததால் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்ட அனுதாபமும் தான், சந்திரிகாவின்

**''காணாமல் போன''த் தங்களின் உறவினர்களின் படங்களுடன் ஈழத் தாய்மார்கள் நடத்தும் போராட்டம்: சந்திரிகா ஆட்சியின் இலட்சணம்.**





படிப்பகம்

மயிரிழை வெற்றிக்குக் காரணமாக அமைந்தன. ஈழத் தமிழ் மக்களின் பெரு வாரியான வாக்குகளைப் பெற்று அதிப ரான பொழுதே, சந்திரிகா, ஈழத் தமிழ் மக்களின் கழுத்தை அறுத்தவர்; அப்படி பட்ட சந்திரிகா, சிங்கள இன வெறியர்க ளின் ஆதரவோடு அதிபராகி இருக்கும் நிலையில், அவர், "போரை நிறுத்துவார்; சமாதானத்தைக் கொண்டு வருவார்" என்று நம்புவதற்குக் கடுகளவுகூட அடிப் படை கிடையாது.

"அதிகாரப் பரவல் திட்டத்தை அம லாக்குவார்" என்கிறார்கள், சந்திரிகாவின் துதிபாடிகள். இந்தியாவிலுள்ள மாநில அர சுகளைப் போன்று, ஈழத் தமிழர்களுக்கு வடக்கிலும், கிழக்கிலும் நிர்வாக அதிகா ரம் கொடுப்பதுதான் இந்த அதிகாரப் பர வல் திட்டம். இந்த நிர்வாக அமைப்பைக் கலைத்திடும் அதிகாரம் சிங்கள மைய அர சுக்கு உண்டு. இந்த அதிகாரப்பரவல் திட் டத்தை அமுலாக்குவதற்கு, மற்றொரு சிங் கள இனவெறிக் கட்சியான ஐக்கிய தேசி யக் கட்சியின் ஆதரவு தேவை. ஈழத்தமிழர் களுக்கு இந்த உப்பு சப்பற்ற அதிகாரத்தை வழங்கக் கூடாது என்றுதான் சிங்கள இன வெறியர்கள் கடந்த ஐந்தாண்டுகளாக முட் டுக்கட்டை போட்டு வருகிறார்கள்.

சந்திரிகா, இந்த முறையாவது, சிங் கள இன வெறியர்களின் ஆதரவைப் பெற்று, அதிகாரப் பரவல் திட்டத்தை நடை முறைப்படுத்துவாரா என்பதல்ல பிரச் சினை. ஈழத் தமிழர்களை ஓர் தேசிய இன மாக அங்கீகரிக்காத, அவர்களுக்கு சுய நிர்ணய உரிமையை மறுக்கின்ற, ஈழத்தின் வடக்கு - கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொள்ளாத, சமாதானம் என்ற பெயரில் ஈழத்தின் வடக்கிலும் - கிழக்கிலும் பொம் மையாட்சியை நிறுவும் நோக்கம் கொண்ட இந்த அதிகாரப் பரவல் திட்டம் யாருக்கு வேண்டும் என்பதுதான் கேள்வி. சந்திரிகா வின் முந்தானையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கும் வரதராஜப் பெருமாள், டக்லஸ் தேவானந்தா போன்ற ஈழத் துரோ கிகளுக்குதான் இந்த எலும்புத் துண்டு தேவையாய் உள்ளது.

1994-இல் நடந்த அதிபர் தேர்தலில் சந்திரிகாவை வெளிப்படையாகவே ஆத ரித்த விடுதலைப் புலிகள், இந்தத் தேர்த லில் ரணில் விக்கிரமசிங்கேவுக்கு மறைமு கமாக ஆதரவு கொடுத்தனர். அந்த வகை யில், சந்திரிகாவின் வெற்றி, புலிகளுக்கு அரசியல்ரீதியில் பின்னடைவுதான். அதே சமயம், புலிகள் முல்லைத்தீவு - வன்னிப் பகுதிகளில் அடைந்துள்ள இராணுவ ரீதி யான வெற்றியையடுத்து, பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக மீண்டும் அறிவித்துள்ளனர்.

பேச்சு வார்த்தைக்கு புலிகள் விதித் துள்ள "போர் நிறுத்தம்", "பொருளாதாரத் தடை நீக்கம்" என்ற இரு நிபந்தனைகளை சந்திரிகா அரசு ஏற்கவில்லை. மற்றொரு நிபந்தனையான மூன்றாம் தரப்பு மத்தியத் துவத்தையும், தான் ஏற்கவில்லை என்று சந்திரிகா கூறினாலும், ஏற்கனவே, பிரிட் டன் ஏகாதிபத்தியம் இவ்விசயத்தில், சந்தி ரிகாவின் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி யின் ஒப்புதலுடன் மூக்கை நுழைத்துள் ளது. இப்பொழுது, ஈழத் தமிழர் பிரச்சி னையில் இந்தியாவையும் நுழைத்துவிட புலிகள் ஆர்வமாக இருக்கிறார்கள்.

இந்த ஆண்டு இலண்டனில் நடந்த மாவீரர் நினைவு நாளில் பேசிய விடுத லைப் புலிகளின் சித்தாந்தத் தலைவர் ஆன் டன் பாலசிங்கம், "இந்தியா எங்கள் நேச சக்தி," "இந்தியாவுடன் மோத எங்களுக் கென்ன பைத்தியமா?", "நாளை தமிழ் ஈழம் மலருமானால், அது இந்தியாவின் உற்றத் தோழனாக விளங்கும்" எனப் பேசி யுள்ளார். இந்திய அரசு நேரடியாக விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தராவிட் டாலும், சந்திரிகாவின் பக்கம் சாய்ந்துவி டக் கூடாது என்பதற்காகவே, விடுதலைப் புலிகள் இந்திய அரசை "தாஜா" செய்து வருகின்றனர். பா.ஜ.க கூட்டணி அரசில் இணைந்துள்ள பா.ம.க., ம.தி.மு.க.வை, விடுதலைப் புலிகள் தங்களின் இந்த நோக் கத்திற்குப் பயன்படுத்தக் கூடும்.

> "அமைதிப் பேச்சு வார்த்தைக்கு யார் தடையாக இருக்கிறார்கள்? எது தடையாக உள்ளது? என்பதைப் பற்றி ஈழ மக்கள் பயமின்றிச் சொல்வதற்குச் சுதந்திரம் வேண்டும். அப்போது தான் பல உண்மைகள் வெளிச்சத்துக்கு வரும்; தீர்வுகளும் வரும்."

விடுதலைப் புலிகளின் ஆதரவு ஏடான நந்தன் வழி, "பழம் பகை மறந்து, நேசக்கரம் நீட்டும் புலிகளையும், அவர்க ளின் விடுதலைப் போராட்டத்தையும் இன் றைய இந்திய அரசு ஆதரிக்குமானால், அது புலிகளுக்கும் நல்லது. இந்தியாவிற் கும் நல்லது" என எழுதுகிறது. சரி, ஈழத் தமிழர்களுக்கு?

சந்திரிகாவின் சமாதானம், புலிகளின் பேச்சுவார்த்தை பற்றிக் குறிப்பிடும் யாழ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்த, "மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்" என்ற அமைப்பைச் சேர்ந்த கே. சிறீதரன், "அமைதிப் பேச்சு வார்த்தைக்கு யார் தடை யாக இருக்கிறார்கள் என்பதைப் பற்றி மக் கள் பயமின்றிச் சொல்வதற்குச் சுதந்திரம் வேண்டும். அப்போதுதான் பல உண்மை கள் வெளிச்சத்துக்கு வரும்; தீர்வுகளும் வரும்" என்கிறார்.

மேலும், அவர், "சிங்களர்களைப் பொறுத்தவரை அரசியல்வாதிகளோ, கட் சிகளோ யார் தவறு செய்தாலும், அதைத் தவறு என்று சிலர் சுட்டிக் காட்டக்கூடிய அளவுக்கு சுதந்திரமாவது இருக்கிறது. ஆனால், தமிழர்கள் நிலை படுமோசம். புலிகள் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர் களாகத் தங்களை நினைக்கிறார்கள். அவர் களை யார் விமர்சனம் செய்தாலும் உயி ரோடு இருக்க முடியாது. இந்தப் பயம்தான் தமிழர்களின் வாழ்க்கை என்றாகி விட்டது" எனக் கூறுகிறார்.

விடுதலைப் புலிகள் இயக்கம், ஈழத் தமிழர்கள் தங்களின் சுயவிருப்பத்துடன் ஆதரிக்கும் அரசியல் தலைமையாக, மக் கள் இராணுவமாக களத்தில் நிற்கவில்லை. "போலீசுக்காரனை ஏன்டா எதிர்த்துக்க ணும்?" என்ற அச்சம் உருவாக்கப்பட்டி ருப்பதைப் போல, ஈழத் தமிழர்கள் மத்தி யில் விடுதலைப் புலிகள் மீது பயம் உரு வாக்கப்பட்டுள்ளது.

ரணிலுக்குக் கொடுத்த ஆதரவு, இந்தி யாவிற்கு நீட்டும் நேசக்கரம் - இப்படி விடு தலைப் புலிகள் எடுக்கும் அரசியல் முடிவு கள் அனைத்தும், ஈழத்தமிழ் மக்களின் நல னைப் பிரதிபலிப்பதாக இல்லை. மாறாக, அவர்களின் மேல் விடுதலைப் புலிகளின் சுயநல அரசியலைத் திணிப்பதாக உள்ளது.

மேலும், விடுதலைப் புலிகள், பேச்சு வார்த்தைக்கு பல்வேறு ஈழப் புரட்சிகரக் குழுக்களும் ஆதரிக்கும் "திம்பு" கோரிக் கைகளை அடிப்படை நிபந்தனையாக வைக்கவில்லை. திம்பு கோரிக்கைகளை அடிப்படை நிபந்தனைகளாக வைக்காமல் நடத்தப்படும் பேச்சு வார்த்தைகள், புலிக ளின் சுயநலனுக்குதான் பயன்படக்கூடும்.

பேச்சு வார்த்தைக்கு திம்பு கோரிக் கைகளை நிபந்தனைகளாக முன் வைப்ப தும், தங்களைத் தவிர, பிற குழுக்கள் இயங் குவதற்குத் தடை விதிக்கும் புலிகளின் பாசி சப் போக்கிற்கு மாறாக, திம்பு கோரிக்கை களை ஏற்கும் ஈழத் தமிழ்க் குழுக்களை, ஈழத் தமிழர்கள் மத்தியில் இயங்க அனும திப்பதும், அரசியல் - இராணுவப் போராட் டங்களை இணைப்பதும், அப்போராட்டங் களில் ஈழத் தமிழ் மக்களின் முன் முயற்சி யைக் கட்டவிழ்த்து விடுவதும், ஈழத் தமி ழர்களின் சுய நிர்ணய உரிமைக்கு ஆதர வாக சிங்களத் தொழிலாளிகளையும், உழைக்கும் மக்களையும் வென்றெடுப்ப தும் - இவை, ஈழத் தமிழர்கள் தங்களின் சுயநிர்ணய உரிமைப் போரில் வெல்லுவ தற்கு அவசியமான முன் நிபந்தனைகள். இந்த அடிப்படைகளை உருவாக்காமல், அதற்காக முயலாமல், விடுதலைப் புலிகள் எத்துணை இராணுவ வெற்றிகள் அடைந் தாலும், பேச்சு வார்த்தைகள் நடத்தினா லும், சுதந்திர தமிழ் ஈழம் மலர்ந்துவிடாது!

● ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

## உலக வர்த்தகக் கழக மாநாடு:

# ஏழை நாட்டுத் தொழிலாளர்கள் பகடைக் காய்களா?

**உ**லக வர்த்தகக் கழகத்தின் மூன்றாவது அமைச்சர்கள் மாநாடு, நவம்பர் 30 தொடங்கி டிசம்பர் 3 முடிய, அமெரிக்காவிலுள்ள சியாட்டில் நகரில் நடந்து முடிந்தது. தாராளமயத்தை மேலும் விரிவுபடுத்துவதுதான் இம்மாநாட்டின் நோக்கமாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும், ஜப்பானும், தங்கள் நாடுகளின் விவசாயத்தை அமெரிக்காவுக்குத் தாராளமாகத் திறந்து விட மறுத்து விட்டதாலும், தொழிலாளர் நலன் மற்றும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு தொடர்பாக சில விதிகளை உருவாக்கி, உலக வர்த்தகக் கழகத்தில் திணிக்க ஏகாதிபத்திய நாடுகள் முயன்றதை ஏழை நாடுகள் எதிர்த்ததாலும், சியாட்டில் மாநாட்டின் நோக்கம் உடனடியாக நிறைவேற வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

சியாட்டில் மாநாட்டில், ஏகாதிபத்திய நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்கும் இடையே நடந்த மோதலைவிட, அமெரிக்காவைச் சேர்ந்த தொழிற்சங்கங்களும், மேற்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த விவசாயிகளும், அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், ஏழை நாடுகளிலும் செயல்படும் தன்னார்வக் குழுக்களும், சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்புகளும், ஏனைய பிற சிறு சிறு குழுக்களும் சியாட்டில் நகரின் தெருக்களில் நடத்திய ஆர்ப்பாட்டங்கள்தான் உலக மக்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தன.

அமெரிக்கத் தொழிற்சங்கங்கள், உலகெங்கிலும் தொழிலாளர்களின் ஊதிய நலன்கள் / உரிமைகள் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர். சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு விதிகள் உலக வர்த்தகக் கழகத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்பது ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இயங்கும் சுற்றுப்புறச் சூழல் அமைப்புகளின் கோரிக்கையாக இருந்தது. ஏழை நாடுகளில் செயல்படும் தன்னார்வக் குழுக்கள், அந்நாடுகளின் இறையாண்மை உலக வர்த்தகக் கழகத்தால் பறிக்கப்படுவதை எதிர்த்தன. உலக வர்த்தகக் கழகம் பன்னாட்டு நிறுவனங்களின் கூஜாவாக இருப்பதை சில குழுக்கள் அம்பலப்படுத்தின.

இந்த அமைப்புகளின் கோரிக்கைகள், நியாயமானவையாகவும், வெளிப்பார்வைக்கு முற்போக்கானவையாகத் தெரிந்தாலும், இந்தக் கோரிக்கைகள், ஏகாதிபத்திய எதிர்ப்பு - தேசிய விடுதலை புரட்சிகர அரசியலில் இருந்து எழவில்லை.

அமெரிக்கத் தொழிற்சங்கங்களும், மேற்கு ஐரோப்பிய சுற்றுப்புறச் சூழல் அமைப்புகளும்தான் சியாட்டிலில் நடந்த ஆர்ப்பாட்டங்களில் முன்னணி வகித்தன. அமெரிக்கத் தொழிலாளர்கள், தங்களின் வேலைக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது என்கிற தொழிற்சங்கவாத அடிப்படையில் தான் உ.வ.க.-வை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தினார்களேயொழிய, பாட்டாளி வர்க்க சர்வதேசிய கண்ணோட்டத்தின் அடிப்படையில் அல்ல. மேற்கு ஐரோப்பிய விவசாயிகளுக்கு அமெரிக்காவையும், ஐரோப்பாவையும் சேர்ந்த பன்னாட்டு நிறுவனங்களால் ஏழை நாடுகளின் விவசாயம் சூறையாடப்படுவது பற்றி அக்கறை கிடையாது. சுற்றுப்புறச் சூழல் அமைப்புகளின் அரசியல் அற்ற கோரிக்கைகள், ஓநாயிடமே நியாயம் கேட்பது போன்றதுதான். அதனால்தான், கிளிண்டன், தொழிலாளர் நலன் மற்றும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு தொடர்பாக உ.வ.க.-இல் விதிகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற அமெரிக்க அரசின் நிபந்தனைகளுக்கு ஆதரவாக, அமெரிக்கத் தொழிலாளர்களும் சுற்றுப்புறச் சூழல் அமைப்புகளும் நடத்திய ஆர்ப்பாட்டங்களை எடுத்துக் காட்டினார்.

''தொழிலாளர்கள், சங்கம் அமைத்துச் செயல்பட உரிமை வேண்டும்; மூன்றாம் உலகத் தொழிலாளர்களுக்கு, மேற்குலகத் தொழிலாளர்களுக்கு இணையாக ஊதியம் வழங்கப்பட வேண்டும்; தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். குழந்தை உழைப்பு முற்றிலுமாகத் தடை செய்யப்பட வேண்டும். இவற்றை மீறும் நாடுகளின் ஏற்றுமதி வர்த்தகம் மீது தடை விதிக்கப்பட வேண்டும். உலக வர்த்தகக் கழகத்தின் கீழ் ஒரு செயல் கமிட்டியை அமைத்து, தொழிலாளர் நலன் மற்றும் சுற்றுப்புறச் சூழல் பற்றி விவாதித்து, விதிகளை உருவாக்கி, அவற்றை இரண்டு ஆண்டுகளுக்குள் உ.வ.க.-வில் சேர்க்க வேண்டும்'' - இவைதான் அமெரிக்க அரசு சியாட்டில் மாநாட்டில் வைத்த நிபந்தனைகள். ஜப்பானும், ஐரோப்பிய குழுமமும், ''தொழிலாளர் நலனை மீறும் நாடுகளின் மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்'' என்பதைத் தவிர, பிறவற்றில் அமெரிக்காவோடு ஒத்துப் போகின்றன.

தாராளமயமாக்கலுக்குப் பின், பன்னாட்டு நிறுவனங்கள், தங்களின் தொழிற்சாலைகளை மேலை நாடுகளில் அமைப்பதை விட, இந்தியா போன்ற ஏழை நாடுகளில் திறப்பதில்தான் அக்கறை காட்டுகின்றன. இதற்குக் காரணம், ஏழை நாடுகளில், மலிவான கூலியில் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்ட முடியும் என்பது தான். மேலும், பன்னாட்டு நிறுவனங்கள், தொழிலாளர் நலச் சட்டங்களைத் திருத்தி, தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரைகுறை உரிமைகளையும் பறித்துவிட வேண்டும் என ஏழை நாடுகளின் அரசுகளை நிர்பந்தித்து வருகின்றன. உண்மை நிலவரம் இப்படி இருக்கும் பொழுது, பன்னாட்டு நிறுவனங்களின் பிறப்பிடமான அமெரிக்காவும், சப்பானும், மேற்கு ஐரோப்பிய அரசுகளும் ஏழை நாடுகளின் தொழிலாளர் உரிமை, நலன் பற்றி அக்கறைப்படுவதாகக் கூறிக் கொள்கின்றன.

போபால் நகரத்தைச் சுடுகாடாக்கிய யூனியன் கார்பைடு; தூத்துக்குடி நகர மக்கள் எதிர்த்துப் போராடி வரும் ஸ்டெர்லைட்; கோவா மாநில மக்கள் துரத்தியடித்ததால், கும்மிடிபூண்டியில் தொழிற்சாலை அமைத்துள்ள டியூ - பாண்ட் — இப்பன்னாட்டு நிறுவனங்கள் அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவை. கிளிண்டன் கூறும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு விதிகள், நமது நாட்டின் சுற்றுப்புறச் சூழலைப் பாழாக்கி வரும் இந்த நிறுவனங்களுக்குப் பொருந்தும் என்றால், கிளிண்டன், தனது சொந்த நாட்டு பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிராகச் செயல்படுகிறார் எனக்

**ஏற்றுமதி நிறுவனங்களில் இந்திய முதலாளிகளால் கொத்தடிமைகளாக நடத்தப்படும் இத்தொழிலாளர்களின் நலன் பற்றி கிளிண்டன் பேசுவதை நம்பத்தான் முடியுமா?**





படிப்பகம்

www.padippakam.com

கொள்ள முடியுமா? பன்னாட்டு நிறுவங்களின் நலன்களையும், ஏகாதிபத்திய அரசுகளையும் பிரித்துப் பார்க்க முடியாது எனும் பொழுது, அமெரிக்காவும், சப்பானும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும் தொழிலாளர் நலன் பற்றியும், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு பற்றியும் அக்கறை காட்டுவதாகக் கூறுவதை எளிதாக நம்பிவிட முடியாது!

★☆★

தாராளமயத்தை நடைமுறைப்படுத்தும் எந்தவொரு நாடும் - அது, இந்தியா போன்றதொரு அரைக் காலனி நாடாக இருக்கலாம்; அல்லது, அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய நாடாகவும் இருக்கலாம் - தனது சொந்த நாட்டு முதலாளிகளின் நலனை - அந்த முதலாளி தரகு முதலாளியாகவும் இருக்கலாம் - அளவுகோலாகக் கொண்டுதான் தாராளமயம் - உலகமயத்தை நடைமுறைப்படுத்துகின்றன.

ஏகாதிபத்திய நாடுகள், தங்களின் அரசியல் - பொருளாதார வலிமையைப் பயன்படுத்தி, இறக்குமதி தடைகளை உருவாக்கி, தங்களது சொந்த நாட்டின் தொழில்களைப் பாதுகாத்துக் கொள்கின்றன. அமெரிக்கா, தனது சொந்த நாட்டு கார் தொழிலைப் பாதுகாத்துக் கொள்ள, ஜப்பானிலிருந்து இறக்குமதியாகும் கார்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த இறக்குமதி கட்டுபாடுகளை விதித்தது; துணிகள், ஆயுத்த ஆடைகள், தோல் பொருட்கள், மின்னணுப் பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்த பல்நூலிழை ஒப்பந்தத்தை உருவாக்கி வைத்திருந்தது.

இந்தியா போன்ற ஏழை நாடுகளைச் சேர்ந்த தரகு முதலாளிகள், ஏகாதிபத்தியங்களுடன் பேரம் நடத்தி, தங்களின் நலனையும் உத்தரவாதப்படுத்திக் கொண்ட பின்புதான், உற்பத்தி துறைகளிலும், இறக்குமதி வர்த்தகத்திலும் தாராளமயத்தை அனுமதிக்கின்றன.

உலக வர்த்தகக் கழகம் உருவான பின்பு, அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்திய நாடுகள், ஒரு தலைபட்சமாக உருவாக்கி வைத்திருந்த இறக்குமதி கட்டுப்பாடுகளை, தங்கள் விருப்பப்படி பயன்படுத்த முடியாமல் போனது. உலக வர்த்தகக் கழகத்தின் உறுப்பு நாடுகளிடையே ஏற்படும் ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகப் பிரச்சினைகளைத் தீர்க்கும் அதிகாரத்தை உ.வ.க., எடுத்துக் கொண்டது.




ஏகாதிபத்தியங்கள் திணிக்கும் உலகமயமாக்கலை எதிர்த்து பிலிப்பைன்சு நாட்டுத் தலைநகர் மணிலாவில் நடந்த ஆர்ப்பாட்டம்

இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட குட்டைப் பாவாடைகள் எளிதாகத் தீப்பிடித்துக் கொள்ளும் என்ற காரணத்தைக் கூறி, அமெரிக்கா குட்டைப் பாவாடைகள் இறக்குமதியைத் தடை செய்தது. இந்தப் பிரச்சினையில் உ.வ.க., இந்தியாவிற்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தது. அமெரிக்காவிற்கு இறால் மீன்கள் ஏற்றுமதி செய்வதில் ஏற்பட்ட பிரச்சினையில், இந்தியா, பாக்., தாய்லாந்திற்குச் சாதகமாகவும், சப்பானுக்கு ஆப்பிள் ஏற்றுமதி செய்வதில் அமெரிக்காவிற்கு ஆதரவாகவும், .பிரான்சுக்கு ஆஸ்பெஸ்டாஸ் ஏற்றுமதி செய்வதில் கனடாவுக்கு ஆதரவாகவும் தீர்ப்பளித்தது. அமெரிக்கா உருவாக்கி வைத்துள்ள பல் நூலிழை ஒப்பந்தம் போன்ற இறக்குமதி கட்டுப்பாடுகளை, படிப்படியாக நீக்கிவிட வேண்டும் என உ.வ.க. கோரியுள்ளது.

இதனின் பொருள், உ.வ.க., ஒரு சுதந்திரமான, ஏகாதிபத்திய சார்பற்ற அமைப்பாக, ஏகாதிபத்திய அரசுகளைக் கூட ஆட்டிப் படைக்கும் அதிகாரம் கொண்ட அமைப்பாக உருவாகிவிட்டது என்பதல்ல. மாறாக, ஏகாதிபத்திய அரசுகள் பன்னாட்டு மற்றும் தேசங்கடந்த நிறுவனங்களின் நலன்களுக்காக உருவாக்கியுள்ள, தாராளமயம் - உலகமயம், ஏகாதிபத்திய நாடுகளுக்கு, அந்நாட்டின் தொழிலாளர்களுக்கு சில பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவது தவிர்க்க இயலாதது என்பதுதான்!

தனது வேலை உத்தரவாதத்துக்காக உ.வ.க.வை எதிர்க்கும் அமெரிக்கத் தொழிலாளர்கள்




சமீபத்தில் கிளிண்டன் அரசாங்கம், சீனாவை, உ.வ.க.வில் சேர்த்துக் கொள்ளுவதை ஆதரித்து ஒப்பந்தம் செய்து கொண்டது. 13 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட அமெரிக்க இரும்பாலைத் தொழிலாளர் சங்கம், இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தியது. ஏற்கனவே நசிந்து கொண்டிருக்கும் அமெரிக்க இரும்பாலைத் தொழில், மலிவான உழைப்பைப் பயன்படுத்தும் சீன இரும்பாலைத் தொழிலுடன் போட்டியிட முடியாது; இதனால் தங்கள் வேலை பறி போய் விடும் என அஞ்சுகிறார்கள், அமெரிக்க இரும்பாலைத் தொழிலாளர்கள்.

இதே போன்ற அச்சம், துணி, ஆயத்த ஆடைகள், தோல் பொருட்கள், மின்னணுப் பொருட்கள் தயாரிக்கும் அமெரிக்கத் தொழிலாளர்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது. ஏற்றுமதி வர்த்தகத்தில் போட்டியிடுதற்கு வசதியாக, அமெரிக்க நிறுவனங்கள், அமெரிக்கத் தொழிலாளர்களுக்குக் கொடுத்து வரும் ஓய்வூதியம், விபத்து காப்பீடு, மருத்துவ வசதி போன்ற சலுகைகளை ரத்து செய்துவிடும் என்ற அச்சமும் அமெரிக்கத் தொழிலாளர்களிடம் பரவியுள்ளது. தங்களின் வேலையைக் காத்துக் கொள்ளும் அடிப்படையில்தான், உலகெங்கிலும் தொழிலாளர்களுக்கு ஒரே மாதிரியான சம்பளம் / நலன்கள் கொடுக்கப்பட வேண்டும் என அமெரிக்கத் தொழிற்சங்கம் கோருகிறது.

ஏகாதிபத்தியவாதிகள் திணிக்கும் உலகமயத்திற்கும், உள்நாட்டின் தொழிலாளர்களின் நலனுக்கும் இடையே இந்த முரண்பாடு எழுவது தவிர்க்க முடியாதது; ஏகாதிபத்தியவாதிகளால் இந்த முரண்பாட்டை நிரந்தரமாகத் தீர்த்துவிட முடியாது. அதேசமயம், இந்தப் பிரச்சினையை முற்றிலுமாகப் புறக்கணித்துவிட்டு, அரசியல்வாதிகளால் மக்களை அணுக முடியாது;

2000-ஆம் ஆண்டின் இறுதியில் அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளதால், கிளிண்டனுக்கு, தனது (ஜனநாயகக்) கட்சியின் வாக்கு வங்கியான தொழிலாளர்கள் மத்தியில் பரவியுள்ள இந்த அச்சத்தைப் போக்க வேண்டியது, இன்று, அரசியல் ரீதியில் மிகவும் அவசியமாக உள்ளது. நமது நாட்டில் தேர்தல் சமயத்தில் ஓட்டுக் கட்சிகள் தாராளமயத்திற்கு மக்களைப்


படிப்பகம்

www.padippakam.com

பலி கொடுக்க மாட்டோம் என வாக்கு றுதி கொடுப்பதைப் போல, கிளிண்டன், அமெரிக்கத் தொழிலாளர்களின் வாக்குகளைப் பொறுக்குவதற்காகவும், தொழிலாளர் நலன் பற்றியும், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு குறித்தும் உ.வ.க.வில் விதிகள் கொண்டுவர வேண்டும் எனக் கூறி வருகிறார். மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் விவசாயிகள் மத்தியில் கடிவாளமற்ற தாராளமயத்துக்கு எதிராகப் போராட்டங்கள் வெடித்து வருவதால், அந்நாட்டு அரசாங்கங்களுக்கும் கிளிண்டனின் ஃபார்முலா தான் சாதகமாகத் தெரிகிறது.

கிளிண்டன் அரசாங்கமும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும் தங்களின் உள்நாட்டு அரசியல் நலன் கருதி எடுத்துள்ள இம்முடிவை, ஏழை நாடுகள் மட்டுமல்ல, தாராளமயத்தை ஆதரிக்கும் பொருளாதார அறிஞர்களும், பெரும்பாலான பன்னாட்டு நிறுவனங்களும் கூட ஆதரிக்கவில்லை.

★☆★

பிற ஏழை நாடுகளைப் போலவே, இந்தியாவும், தொழிலாளர் நலன் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு தொடர்பான விதிகளை உ.வ.க.வில் உருவாக்கிவிட ஏகாதிபத்தியங்கள் செய்த முயற்சிகளை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது. ''ஏகாதிபத்தியங்கள் ஏழை நாடுகளின் ஏற்றுமதியைத் தடை செய்து, தங்கள் சந்தையைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே இப்படி விதிகளை உருவாக்குகின்றன. எனவே, தேசிய நலன் கருதி, இந்த விதிகள் உ.வ.க.-வில் சேர்க்கப்படுவதை எதிர்ப்பதாக''க் கூறுகிறது, பா.ஜ.க. கூட்டணி அரசு. ஏழை நாடுகளில் கிடைக்கும் மலிவான உழைப்பைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் ஆயத்த ஆடைகள், தோல் பொருட்கள், கம்பளம் மற்றும் விவசாய விளை பொருட்களின் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்த, அமெரிக்காவும், பிற ஏகாதிபத்திய நாடுகளும் இந்த விதியைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதை மறுக்க முடியாது; ஆனாலும், இந்தியாவும் சரி, பிற ஏழை நாடுகளும் சரி, சியாட்டிலில், தொழிலாளர் நலன் - சுற்றுப்புறச் சூழல் விசயத்தில், ஏகாதிபத்தியங்களுடன் ஒத்துப் போக மறுத்ததற்கு வேறு காரணம் உண்டு!

''ஏகாதிபத்தியங்கள் நமது ஏற்றுமதி வர்த்தகத்தின் மீது தடைபோடுவார்கள்'' என்று பூச்சாண்டி காட்டுவதன் மூலம், பா.ஜ.க. கூட்டணி அரசு, இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் ஆஹா ஓஹாவென்று நடந்து வருவதைப் போலவும், இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் தடுக்கப்பட்டால் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பாதிப்பு உண்டாகும் என்பது போலவும் சரடு விடுகிறது.

உலகின் ஏற்றுமதி வர்த்தகத்தில் நான்கில் மூன்று பங்கை, ஏகாதிபத்திய நாடுகள்தான், தங்கள் கைகளில் வைத்துக் கொண்டுள்ளன. மீதமுள்ள ஒரு பங்கை தான் நூறுக்கும் மேற்பட்ட ஏழை நாடுகள் பங்கு போட்டுக் கொள்கின்றன. உலக ஏற்றுமதி வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு 0.6 சதவீதம்தான். இந்த அற்பமான ஏற்றுமதி வர்த்தகம் தடுக்கப்பட்டால், இந்தியப் பொருளாதாரம் அடியோடு பாதிக்கப்பட வாய்ப்புகள் இல்லை.

''பிறகு, அந்நியச் செலாவணி எப்படி கிடைக்கும்?'' என்று சில அறிஞர்கள் வேண்டுமானால் கூப்பாடு போடலாம். இந்திய அரசு, தனது அந்நியச் செலாவணியின் தேவைக்கு ஏற்றுமதி வர்த்தகத்தை நம்பியிருக்கவில்லை. ஏகாதிபத்தியங்கள் தரும் கடனையும், இந்தியப் பங்குச் சந்தையில் பன்னாட்டு நிறுவனங்கள் கொட்டும் அமெரிக்க டாலரையும்தான் நம்பியுள்ளது.

ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபடும் இந்தியத் தரகு முதலாளிகளும், பிற தனியார் முதலாளிகளும் தங்களுக்குக் கிடைக்கும் அந்நியச் செலவாணியை ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பதுக்கி வைத்துக் கொள்வதில்தான் அக்கறை காட்டுகிறார்கள். மேற்கு ஆசிய நாடுகளில், கூலி வேலைக்குச் செல்லும் தொழிலாளர்கள், தங்கள் வீடுகளுக்கு அனுப்பும் பணம்தான், இந்தியாவிற்குக் கடனில்லாத வழியில் கிடைக்கும் அந்நியச் செலவாணி. இந்த விசயத்தில், அமெரிக்காவில் குடியேறியிருக்கும் ''அவாள்'' இந்தியாவை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகத்தால் பெரும்பான்மையான மக்களுக்கு எவ்விதப் பயனும் கிடையாது. இந்தியத் தரகு முதலாளிகளும், தனியார் முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களும்தான் பெருத்த இலாபமடைகிறார்கள். ஆயத்த ஆடை, தோலாடை, கம்பளம் போன்ற ஏற்றுமதி சார்ந்த தொழில்களில் இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் வேலை பார்க்கவில்லையா என்ற கேள்வி எழலாம். அந்தத் தொழிலாளர்களுக்கு அதிக ஊதியமோ, உரிமைகளோ தர முடியாது என்பதைத்தான், பா.ஜ.க., 'தேசிய' நலன் எனப் பூசி மெழுகுகிறது.

தொழிலாளர் நலன் பற்றி ஏகாதிபத்தியங்கள் பேசுவதில் சூட்சமம் இருக்கலாம்; அதனால், இந்தியத் தொழிலாளர்களுக்கு அதிக ஊதியமோ / உரிமைகளோ தர முடியாது என பா.ஜ.க. வாதிடுவது அயோக்கியத் தனமானது. இந்தியப் பொருளாதாரத்தை உலகமயமாக்குவோம்; ஆனால், இந்தியத் தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாகத்தான் நடத்துவோம் என்பது என்ன வகை நியாயம்?

ஏகாதிபத்தியங்களின் கட்டளைக்கு அடிபணிந்து, பா.ஜ.க., டீசல் விலையை உயர்த்திய பொழுது, காப்பீடு துறையைத் தனியாருக்குத் திறந்து விட்ட பொழுது, காப்புரிமைச் சட்டத்தைத் திருத்திய பொழுது பறிபோகாத 'தேசிய' நலன், தொழிலாளர்களுக்கு அதிக ஊதியமும், உரிமைகளும் கொடுத்தால் பறிபோய் விடும் என்றால், இது என்ன வகை 'தேசிய' நலன்? இந்த 'தேசிய'த்தால் பலனடையப் போகிறவர்கள் முதலாளிகளா? தொழிலாளிகளா?

இந்த விசயத்தில், போலி கம்யூனிஸ்டுகள் பா.ஜ.க.வைப் போல




''எங்களின் விவசாயத்தை அமெரிக்காவுக்குப் பலியிட மாட்டோம்'' எனப் போராடும் பிரான்சு நாட்டு உழவர்கள்.

**மார்க்சியம், தொழிலாளிகள் சுரண்டப்படுவதை ஒழிக்கக் கோருகிறது; 'மார்க்சிஸ்டு'களோ, முதலாளிகளின் சுரண்டலைக் காப்போம் என்கிறார்கள். ஏகாதிபத்தியத்தை ஒழிக்க, உலகத் தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் நாடுகளையும் ஒன்று திரளச் சொன்னார், லெனின். 'மார்க்சிஸ்டு'களோ ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற பெயரில் டாட்டாவுக்கும், பிர்லாவுக்கும் வால் பிடிக்கிறார்கள்.**



படிப்பகம்

'தேசிய நலன்' என்றெல்லாம் பேசி குட்டையைக் குழப்புவதில்லை. மிகவும்வெளிப்படையாகவே இந்தியத் தொழிலாளர்களுக்கு எதிராக, முதலாளிகளுக்காக வக்காலத்து வாங்குகிறார்கள். சி.பி.எம். கட்சியின் சார்பில், மைய வர்த்தக அமைச்சர் மாறனோடு சியாட்டிலுக்குச் சென்று, கிளிண்டனை எதிர்த்து விட்டுத் திரும்பியிருக்கும் அக்கட்சியின் எம்.பி.யான பிப்லப் தாஸ்குப்தா இப்படி எழுதுகிறார்:

''குறைவான மூலதனம், தரங்குறைந்த தொழில்நுட்பம், மேலாண்மை ஆதாரங்களைக் கொண்டுள்ள இந்தியா போன்ற ஏழை நாடுகளுக்கு, பணக்கர நாடுகளைக் காட்டிலுமுள்ள ஒரே சாதகமான அம்சம் குறைவான ஊதியம்தான்; அந்த நாடுகளை, மேற்கத்திய நாடுகளுக்கு இணையாக ஊதியம் தரச் சொல்லிக் கட்டாயப்படுத்துவது, தொழில்களை நாசப்படுத்திவிடும்.''

இதைப் பச்சையாகச் சொன்னால், இந்தியத் தரகு முதலாளிகளும், தனியார் முதலாளிகளும், இந்தியாவில் மூலதனமிட்டுள்ள பன்னாட்டு முதலாளிகளும் கூட, இந்தியத் தொழிலாளிகளை, இந்தியக் குழந்தைகளைச் சுரண்டுவதை, இந்திய சுற்றுப்புறச் சூழலை நாசப்படுத்துவதை எவனும் தட்டிக் கேட்கக் கூடாது, என்கிறார்கள் 'மார்க்சிஸ்டு'கள்!

மார்க்சியம், தொழிலாளிகள் சுரண்டப்படுவதை ஒழிக்கக் கோருகிறது; 'மார்க்சிஸ்டு'களோ, முதலாளிகளின் சுரண்டலைக் காப்போம் என்கிறார்கள். ஏகாதிபத்தியத்தை ஒழிக்க, உலகத் தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் நாடுகளின் மக்களையும் ஒன்றுதிரளச் சொன்னார், லெனின். 'மார்க்சிஸ்டு'களோ ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற பெயரில், ஒடுக்கப்படும் நாடுகளைச் சேர்ந்த தரகு முதலாளிகளுக்கு வால் பிடிக்கிறார்கள்; ஏகாதிபத்திய நாடுகளின் தொழிலாளர்களையும் ஏழை நாடுகளின் தொழிலாளர்களையும் எதிரெதிராக நிறுத்துகிறார்கள்.

தொழிலாளர் நலன் மற்றும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு பற்றி கிளிண்டன் பேசுவதில், அவரது அரசியல் சுயநலன் ஒளிந்து கொண்டிருப்பது எந்தளவுக்கு உண்மையோ, அந்தளவுக்கு, இந்தியாவின் எதிர்ப்பில் தரகு முதலாளிகளின், தனியார் முதலாளிகளின் இலாப வெறி ஒளிந்து கொண்டுள்ளது. கிளிண்டன், தொழிலாளர் நலனைப் பற்றிப் பேசி, தனது ஏகாதிபத்திய மேலாதிக்க நோக்கத்தை மூடி மறைக்கிறார் என்றால், சியாட்டிலில், இந்தியா அடித்த ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியச் சவடாலில், இந்தியத் தொழிலாளர்கள் வரைமுறையின்றிச் சுரண்டப்படுவது மூடி மறைக்கப்படுகிறது; பிற ஏழை நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பின் பின்னுள்ள உண்மையும் இதுதான்!

● செல்வம்

## ஆந்திராவில் நடப்பது கணிணி ஆட்சியல்ல

# காட்டு தர்பார்

### போலி மோதல் கொலைகள் மூலம் நக்சல்பாரி அமைப்புகளை அழித்துவிடலாம் என மனப்பால் குடிக்கிறார், சந்திரபாபு

கம்யூனிசப் புரட்சியாளர்கள் மீது பயங்கரவாத பாசிசத் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டுள்ள ஆந்திராவின் கொலை வெறி பிடித்த போலீசு, அண்மையில் நக்சல்பாரி இயக்கத்தின் மக்கள் யுத்தக் குழுவைச் சேர்ந்த மூன்று முக்கிய தலைவர்களை 'போலீசாருடன் மோதல்' என்ற பெயரில் சுட்டுக் கொன்றுள்ளது. மக்கள் யுத்தக் குழுவின் மத்தியக் கமிட்டி உறுப்பினர்களும் மூத்த தலைவர்களுமான தோழர்கள் நல்லா ஆதி, சந்தோஷ், நீலம் நரேஷ் மற்றுமொருவர் ஆகிய நால்வரையும் கரீம் நகர் மாவட்டத்தில் உள்ள கொய்யூரு காட்டுப் பகுதியில் கோரமான முறையில் ஆந்திர போலீசார் சுட்டுக் கொன்றுள்ளனர்.

தலைக்கு 10 லட்ச ரூபாய் விலை வைக்கப்பட்டுள்ள இப்புரட்சியாளர்களைப் பிடிக்க கொய்யூரு காட்டுப் பகுதியில் தேடுதல் வேட்டை நடத்தியதாகவும், அப்போது நக்சல்பாரிகள் சுட்டதாகவும், போலீசார் துரத்திச் சென்று சுட்டதாகவும், 4 மணி நேரம் நடந்த இத்துப்பாக்கிச் சண்டையில் நால்வர் பலியானதாகவும் மற்றவர்கள் தப்பியோடி விட்டதாகவும் போலீசார் வழக்கம் போலவே மோதல் நாடகத்தை நடத்தியுள்ளனர். கொல்லப்பட்டவர்களின் உடலருமே சென்று பார்த்த போதுதான் அவர்களில் மூவர் முக்கிய தலைவர்கள் என்று தெரிய வந்ததாகக் கூறி, இக்கொலை வெறியாட்ட நாடகத்தை உண்மையானதாக நிரூபிக்க துப்பாக்கிகள், குண்டுகள், கண்ணி வெடிகள், கட்சிப் பிரசுரங்கள் முதலியன கொல்லப்பட்டோரின் உடலருகே கிடந்ததாக புகைப்பட ஆதாரத்தையும் காட்டுகின்றனர்.

டிசம்பர் 2-ஆம் நாளன்று அதிகாலையில் 4 மணி நேரம் நடந்ததாகக் கூறப்படும் இத்துப்பாக்கிச் சண்டையில் 3 புரட்சியாளர்களையும் மற்றொரு ஆதரவாளரையும் தவிர வேறு யாரும் கொல்லப்படவில்லை. படுகாயமடையவும் இல்லை. 4 மணி நேரம் நடந்ததாகக் கூறப்படும் இத்துப்பாக்கிச் சண்டையில் ஒரு போலீசுக்காரர் கூட மரணமடையவில்லை. யாருக்கும் சிறு சிராய்ப்புக் காயம்கூட ஏற்படவில்லை. புரட்சியாளர்கள் கொல்லப்பட்ட காட்டுப் பகுதியானது, நெடுஞ்சாலையிலிருந்து ஏறத்தாழ ஒரு கி.மீ. தொலைவில்தான் உள்ளது. 4 மணி நேரம் துப்பாக்கிச் சண்டை நடந்த போதிலும் கூட நெடுங்சாலை போக்குவரத்து பாதிக்கப்படவில்லை. அருகிலுள்ள கிராம மக்களுக்கு துப்பாக்கி வேட்டுச் சப்தம் எதுவும் கேட்கவுமில்லை. மோதலில் கொல்லப்பட்டதாகப் போலீசார் அவிழ்த்து விட்டுள்ள கதையை இந்தச் சாதாரண உண்மைகளே திரைகிழித்துக் காட்டுகின்றன.

உண்மையில் நடந்தது என்ன? டிசம்பர் முதல் நாளன்று மக்கள் யுத்தக் குழுவின் மூன்று தலைவர்களும் பெங்களூர் அருகே பனசங்கரி எனுமிடத்திலுள்ள கோவிந்த ரெட்டி என்பவர் வீட்டில் தங்கி இரகசிய ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினர். கோவிந்த ரெட்டி துரோகியாக மாறி, அவர்களது உணவில் மயக்க மருந்து வைத்து ஆந்திரப் போலீசாருக்கு இதுபற்றி தகவல் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து மாறுவேடத்தில் மாருதி வேனில் வந்த ஆந்திர போலீசார் கோவிந்த ரெட்டியின் வீட்டை சுற்றி வளைத்து புரட்சியாளர்களைப் பிடித்தனர். பின்னர் பெங்களூரிலிருந்து அவர்களை ஐதராபாத்துக்கு ஹெலிகாப்டரில் கொண்டு வந்து, சித்திரவதை செய்து அங்கிருந்து ஒரு வாகனத்தில் அவர்களை கொய்யூரு காட்டுப் பகுதிக்குக் கொண்டு சென்று, டிசம்பர் 2-ஆம் நாளன்று அதிகாலையில் சுட்டுக் கொன்றுவிட்டு மோதலில் மாண்டு போனதாகக் கதை கட்டியுள்ளனர். சுட்டுக் கொல்லப்பட்ட தோழர்களுக்கு இராணுவ சீருடை அணிவித்தும், அருண் என்ற ஆதரவாளரைப் பிடித்து இராணுவச் சீருடை அணிவித்து சுட்டுக் கொன்றும்

போலீசு கொலை வெறியாட்டத்தை எதிர்த்துக் கடையடைப்புப் போராட்டத்துக்கு அறைகூவல் விடுக்கும் புரட்சிகர அமைப்புகளின் சுவரொட்டி.



www.padippakam.com





**ஆந்திரப் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட தோழர்கள் நல்லா ஆதிரெட்டி, சந்தோஷ் ரெட்டி, நீலம் நரேஷ்.**

தோழர்களின் உடலருகே போட்டுள்ளனர். இந்த உண்மைகளை மக்கள் யுத்தக் குழுவின் மத்தியக் கமிட்டி செயலாளர் விடுத்துள்ள பத்திரிகை செய்தி நாடெங்கும் பகிரங்கப்படுத்தியுள்ளது.

ஆந்திர போலீசாரின் கொலை வெறியாட்டத்தை நாடெங்கிலுமுள்ள மக்கள் உரிமை அமைப்புகளும் புரட்சிகர மக்கள் திரள் அமைப்புகளும் பல்வேறு அரசியல் கட்சிகளும் கண்டனம் தெரிவித்த போதிலும், ஆந்திராவில் இப்படுகொலையைக் கண்டித்துப் போராட்டங்கள் நடந்த பின்னரும் கூட ஆந்திர போலீசு தனது கொடுஞ் செயலை நியாயப்படுத்தவே செய்கிறது. ''நல்லா ஆதிராமின் இழப்பால் மக்கள் யுத்தக் குழுவுக்கு பெருத்த பாதிப்பும் தலைமையில் வெற்றிடமும் ஏற்பட்டுள்ளது. இதை நாம் சாதகமாக்கிக் கொள்ள வேண்டும். சரணடையும் நக்சல்பாரிகளுக்கு நிதியுதவியும் மறுவாழ்வுக்கான ஏற்பாடுகளும் செய்து தரப்படும். அவர்கள் மீதான வழக்குகள் ரத்து செய்யப்படும்'' என்று ஆந்திர போலீசு தலைமை இயக்குனர் தோரா பகிரங்கமாக அறிவித்துள்ளார். புரட்சியாளன் என்றால் சுட்டுக் கொல்வது; துரோகியாக மாறி சரணடைந்தால் மறுவாழ்வுக்கு உதவி செய்வது என்பதே ஆந்திர கொலைகார போலீசின் கொள்கையாக உள்ளது.

ஆந்திராவில் என்.டி.ஆர். ஆட்சிக் காலத்திலிருந்தே புரட்சிகர அமைப்புகள் மீது தடை விதிக்கப்பட்டுள்ளது. நக்சல்பாரி புரட்சியாளர்களின் கோட்டையான தெலுங்கானா பிராந்தியத்தில் உழைக்கும் மக்கள் சங்கங்களில் திரள முடியாது. பொதுக் கூட்டம் நடத்த முடியாது. போராட்டம் நடத்தவும் முடியாது. இப்பிராந்தியத்தில் இரவானதும் அறிவிக்கப்படாத ஊரடங்கு உத்திரவு இன்னமும் தொடர்கிறது. நக்சல்பாரிகளைப் பிடிக்க தேடுதல் வேட்டை என்ற பெயரில் கிராமங்களைச் சுற்றி வளைத்து சூறையாடுவதும், நக்சல்பாரி இயக்க ஆதரவாளர்களைக் கொடூரமாகச் சித்திரவதை செய்வதும், சுட்டுக் கொன்றுவிட்டு மோதலில் இறந்ததாக கதை கட்டுவதும் என போலீசாரின் கொலை வெறியாட்டமும் அடக்குமுறையும் கேள்வி முறையின்றித் தொடர்கிறது. கடந்த ஈராண்டுகளில் ஏறத்தாழ 200 நக்சல்பாரி புரட்சியாளர்கள் 'போலீசுடன் நடந்த மோதலில்' கொல்லப்பட்டுள்ளதாக முதலாளித்துவ பத்திரிகைகளே ஒப்புக் கொள்கின்றன. இக்கொடுஞ்செயலை அம்பலப்படுத்தும் மக்கள் உரிமைக் கழகத் தலைவர்களும் செயல் வீரர்களும் பத்திரிகை நிருபர்களும் போலீசாரால் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். கரீம் நகர், வாரங்கல், அடிலாபாத் உள்ளிட்ட தெலுங்கானா மாவட்டங்களில் சட்டபூர்வ ஜனநாயக உரிமையை நிலைநாட்டு என்று கோருவது கூட ஆந்திர போலீசு அகராதியில் சட்டவிரோதச் செயலாகிவிட்டது.

ஆந்திராவில் கரீம் நகர் மாவட்டத்தில் நக்சல்பாரி புரட்சியாளர்கள் பலரைக் கேள்வி முறையின்றி கொல்லக் காரணமான போலீசுத் துணை இயக்குநர் உமேஷ் சந்திராவை கடந்த நவம்பர் மாதத்தில் நக்சல்பாரி புரட்சியாளர்கள் ஐதராபாத் நகரில் வைத்து சுட்டுக் கொன்றனர். அதற்குப் பழிக்குப் பழிவாங்கும் நோக்கத்தோடுதான் ஆந்திர கொலைகாரப் போலீசார் மக்கள் யுத்தக் குழுவின் மூன்று முக்கியத் தலைவர்களைக் கோழைத்தனமான முறையில் சுட்டுக் கொன்றுள்ளனர். கடந்த 20 ஆண்டு காலத்தில் ம.யு. குழுவின் மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் போலீசாரால் கொல்லப்பட்டிருப்பது இதுவே முதன் முறையாகும்.

> தெலுங்கானா பகுதி உழைக்கும் மக்கள், நக்சல்பாரிகள் தலைமையில் நிலத்திற்காகவும், சனநாயக உரிமைகளுக்காகவும் நடத்தும் போராட்டத்தை ''பயங்கரவாதம்'' எனக் கொச்சைப் படுத்தி, அவதூறு செய்கிறது ஆந்திர அரசு.

ஆந்திராவை உலுக்கிய இந்நிகழ்ச்சிகளை தேசிய பத்திரிகைகள் சித்தரிப்பது போல, இது நக்சல்பாரிகளுக்கும் போலீசாருக்குமான மோதல் விவகாரமோ, கண்ணாமூச்சி ஆட்டமோ அல்ல. இது தெலுங்கானா பிராந்திய உழைக்கும் மக்களும் அவர்களது போராட்டங்களுக்குத் தலைமை தாங்கி வழிநடத்தும் நக்சல்பாரி புரட்சியாளர்களும் குடியுரிமை - ஜனநாயக உரிமைக்காக நடத்தும் போராட்டம். நரவேட்டையாடி வரும் கொலைகார போலீசு அமைப்புக்கு எதிரான போராட்டம். மிகச் சாதாரண பொருளாதாரக் கோரிக்கைக்காக போராடவோ, சங்கமாக அணிதிரளவோ கூட அனுமதிக்காமல் தடை விதித்துள்ள பாசிச காட்டாட்சிக்கு எதிரான போராட்டம். கொலை வெறி பிடித்த போலீசு வன்முறையாளர்கள், அவர்களது வெறியாட்டத்தை நியாயப்படுத்தும் நீதிமன்றங்கள், பாதுகாக்கும் பாசிச ஆட்சியாளர்கள் என ஒருங்கிணைந்துள்ள இன்றைய அரசியலமைப்பு முறையைத் தகர்த்தெறியாமல், தெலுங்கானா பிராந்தியத்தில் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டவோ, பாதுகாக்கவோ ஒரு போதும் முடியாது. இதை நன்கு உணர்ந்துள்ள உழைக்கும் மக்கள் நக்சல்பாரிப் புரட்சியாளர்களின் தலைமையில் தியாகிகளின் நினைவை நெஞ்சிலேந்தி போராட்டத்தைத் தொடர்கிறார்கள்.

● சுப்பு

## சிவப்பஞ்சலி

சந்திரபாபு நாயுடுவின் பாசிச போலீஸ் ஆட்சியால் 2.12.99 அன்று படுகொலை செய்யப்பட்ட இ.பொ.க. (மா-லெ), மக்கள் யுத்தக் குழுவின் மையக்குழு உறுப்பினர்களான தோழர்கள் நல்லா ஆதிரெட்டி, சந்தோஷ் ரெட்டி, நீலம் நரேஷ் ஆகியோருக்கும் தோழர் அருணுக்கும் நமது சிவப்பஞ்சலியைச் செலுத்துகிறோம். போலி மோதல்களை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், தோழர்களைக் கொலை செய்த காக்கி உடைக் கிரிமினல்கள் மீது நீதி விசாரணை நடத்தித் தண்டிக்க வேண்டுமெனவும் கோருகிறோம்.

இவண்,
மாநில அமைப்புக் கமிட்டி,
இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மா-லெ),
தமிழ்நாடு.



படிப்பகம்

www.padippakam.com

# மீண்டும் ரவுடிகளின் தாக்குதல் தொடரும் மக்கள் போராட்டம்

சென்னை - சேத்துப்பட்டிலுள்ள மங்களாபுரம் பகுதிக்கு கடந்த டிசம்பர் 9 - ந் தேதியன்று இரவு சுமார் 9 மணியளவில் 3 கார்களிலும் வேன்களிலும் ஏறத்தாழ 30 பேர் கொண்ட ரவுடிப் பட்டாளம் வந்திறங்கியது. பட்டாக் கத்தி, கடப்பாரை, வீச்சரிவாள், பெட்ரோல் குண்டுகளுடன் கூச்சலிட்டுக் கொண்டு தெருக்களில் ஊர்வலமாக வந்த இக்கும்பல், பொது மக்களை அச்சுறுத்தியது. இந்த அட்டகாசத்தை எதிர்த்து நெஞ்சுரம் கொண்ட சில இளைஞர்கள் குரலெழுப்பியதும், ரௌடிகளின் கைகளில் சுழன்ற பட்டாக்கத்திகள் இளைஞர்களின் தோள் மீது சரேலென இறங்கியது. பெட்ரோல் குண்டுகளை எடுத்து ரவுடிக் கும்பல் வீசியது. அங்கு வந்த போலீசார் பீதியடைந்து ஓடி, ஜீப்பில் ஏறி தப்பிச் சென்றனர். இத்தாக்குதலை எதிர்த்து இளைஞர்கள் துணிந்து முன்னேறத் தொடங்கியதும், ரவுடிகள் தமது தலைவனோடு கார்களில் ஏறி தப்பிச் சென்றனர்.

தங்கையா - அயோத்தி குப்பம் வீரமணி, ஜாம்பஜார் குள்ளசேகர் வரிசையில் சேத்துப்பட்டு பகுதியை ஆட்டிப் படைத்து வந்த "தாதா". கடந்த சில ஆண்டுகளாக போலீசு ஆதரவுடன் கஞ்சா, கள்ளச்சாராயம், கட்டப் பஞ்சாயத்து, ரவுடித்தனம் என அட்டாகாசம் செய்து வந்த சமூக விரோதி. தாழ்த்தப்பட்டோர் பெரும்பான்மையாக உள்ள சேத்துப்பட்டு பகுதி இளைஞர்களில் தான் கைகாட்டியவர்கள் எல்லாம் தனக்கு அடியாளாக வேலை செய்ய வேண்டும்; கள்ளச் சாராயம் விற்க வேண்டும்; கூலிக்குக் கொலை செய்ய வேண்டும் என அச்சுறுத்தியவன். இதற்கு அடிபணிய மறுத்தவர்களைக் கடத்திச் சென்று, தனது எடுபிடிகளை வைத்துச் சித்திரவதை செய்தவன். அவர்களது வீடுகளைச் சூறையாடிப் பீதியூட்டி வந்தவன்.

இதுபற்றி போலீசில் புகார் செய்தால், புகார் கொடுத்தவர்களையே போலீசு கைது செய்து வதைத்தது; பொய் வழக்குகள் போட்டு சிறையிலடைத்தது. போலீசு அதிகாரிகள் தங்கையாவோடு ஜீப்பில் வீதி உலா வந்து, அவன் கைகாட்டும் இளைஞர்களை அள்ளிக் கொண்டுபோய் கொட்டடியில் பூட்டி வதைப்பது சர்வ சாதாரணமாக நடந்து வந்தது.

இந்நிலையில் கடந்த 29.8.99 அன்று தங்கையா ஏவி விட்ட ரவுடிக் கும்பலால் உதயகுமார் என்ற இளைஞர் வெட்டிக் கொல்லப்பட்டார். அவரோடு சென்ற மூன்று இளைஞர்கள் ரவுடிகளால் வெட்டப்பட்டனர். இப்படுகொலையைக் கண்டு ஏற்கனவே குமுறிக் கொண்டிருந்த சேத்துப்பட்டு மக்கள் ரவுடி தங்கையாவைக் கைது செய்யக்கோரி போராட்டத்தில் இறங்கினர். தங்கையாவின் வீடு சூறையாடப்பட்டது. புரட்சி பாரதக் கட்சியைச் சேர்ந்த அவனது அலுவலகமான சித்திரவதைக் கூடம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. அதன் பின்னரே, தங்கையா தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப் பட்டான்.

அதன் தொடர்ச்சியாக, இப்போராட்டங்களுக்குத் தலைமையேற்ற ம.க.இ.க வின் வழிகாட்டுதலில் "சேத்துப்பட்டு மக்கள் குழு" வை பகுதிவாழ் இளைஞர்களும் மக்களும் கட்டியமைத்தனர். கள்ளச்சாராயம், கஞ்சா முதலான போதைப் பொருட்களுக்குத் தடைவிதித்து, கள்ளச் சாராயம் விற்றவர்களை எச்சரித்து, சாராய பாக்கெட்டுகளைப் பறிமுதல் செய்து பொது இடத்தில் தீயிட்டுக் கொளுத்தினர். எந்த ரவுடியாவது "மாமூல்" கேட்டு மிரட்டினால் மக்கள் குழுவிடம் தெரிவிக்குமாறு வெளிப்படையாக அறிவித்து அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். இரவில் தெருக்களில் ரோந்து சுற்றிக் கண்காணித்து வந்தனர். இந்நடவடிக்கைகளால் அரண்டுபோன தங்கையாவின் ரவுடிக் கும்பல், தமது இழந்த சொர்க்கத்தை மீட்க அதிரடித் தாக்குதலுக்கு முயற்சித்து வந்தது.

இந்நிலையில், தங்கையா கைது விவகாரத்தைப் பரிசீலித்த தேசியப் பாதுகாப்புச் சட்ட ஆலோசனைக் குழு, இவன் மீது முந்தைய ஆண்டுகளில் பெரிதான குற்ற வழக்கு ஏதுமில்லை என்று பிணையில் விடுதலை செய்யப் பரிந்துரைத்தது. அதைத் தொடர்ந்து கடந்த நவம்பரில் தங்கையாவும் அவனது அடியாட்களும் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். மற்றொரு "தாதா"வின் பாதுகாப்பில் தங்கியிருந்து, கீழ்ப்பாக்கம் போலீசு நிலையத்தில் தினமும் கையெழுத்துப் போட்டு வந்த தங்கையா, தனது சாகச பூமியான சேத்துப்பட்டுக்கே வந்து தங்கிவிடும் முடிவோடு, தனது அடியாட்கள் புடைசூழ கடந்த டிசம்பர் 9-ந் தேதியன்று ஊருக்குள் நுழைந்தான்.




இதை எதிர்த்து மக்கள் குழு இளைஞர்களும், பொதுமக்களும் திரண்டு அவனது வீட்டை முற்றுகையிட்டு முழக்கமிட்ட போதுதான், தங்கையாவும் அவனது அடியாட்களும் பெட்ரோல் குண்டுகளை வீசி, பட்டாக்கத்தியால் இருவரை சரமாரியாக வெட்டி வெறியாட்டம் போட்டனர். ஆனாலும், இளைஞர்களும் மக்களும் உறுதியாக நின்று எதிர்க்கத் தொடங்கியதும், பீதியடைந்து பின்வாங்கிய ரவுடிகள் காரில் ஏறித் தப்பிச் சென்றனர்.

தங்கையா ரவுடிக் கும்பல் சேத்துப்பட்டுக்கு வருவது பற்றி போலீசாருக்குத் தெரியாமல் திடீரென நடக்கவில்லை. ம.க.இ.க. மற்றும் மக்கள் குழுவினரிடம் சமரசம் பேசி விட்டதாக போலீசு அதிகாரிகளிடம் கூறிவிட்டு, அவர்களது ஒத்துழைப்போடுதான் இந்த கும்பல் ஊருக்குள் வந்துள்ளது. தங்கையாவை வரவேற்க அவனது மனைவி ஆரத்தித் தட்டுடன் காத்து நின்றது, 4 - 5 கீழ்நிலை போலீசார் மட்டுமே பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டது - ஆகியவையே இதை நிரூபித்துக் காட்டுகின்றன. உண்மையில், ம.க.இ.க மற்றும் மக்கள் குழு இளைஞர்கள் சிலரை வெட்டிக் கொலை செய்யும் நோக்கத்தோடுதான் அடியாள் படையோடு அவன் ஊருக்குள் வந்துள்ளான். ஆனால், இந்த அளவுக்கு உறுதியும் ஒற்றுமையும் கொண்ட எதிர்ப்பை அவனும், அவனது சம்பளப் பட்டியலில் உள்ள போலீசாரும் எதிர்பார்க்கவில்லை.

இந்தக் கொலைவெறியாட்டம் நடந்த போது எந்தவொரு ஓட்டுக்கட்சியும் ரவுடி தங்கையா கும்பலை எதிர்த்து வாயே திறக்கவில்லை. மறுநாள் மக்கள் குழுவினர், அனைத்துக் கட்சிகளின் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்த போதிலும் ஒருவர்கூட எட்டிப் பார்க்கவில்லை. ஓட்டுக் கட்சிகளின் கையாலாகாத்தனத்தைப் பார்த்த இளைஞர்கள், காறி உமிழ்ந்தனர்.

இப்போது தங்கையா மீண்டும் கைது செய்யப்பட்டுள்ள போதிலும், அவனது கும்பலைச் சேர்ந்த முக்கியமான ரவுடிகள் இன்னமும் கைது செய்யப்படவில்லை. இதனால் எந்த நேரத்திலும் மீண்டும் ரவுடிகளின் தாக்குதல் நடக்கலாம் என்ற பதட்ட நிலை சேத்துப்பட்டு பகுதியைக் கவ்வி நிற்கிறது. ரவுடி - போலீசு - நீதித்துறை கூட்டணியை அம்பலப்படுத்தியும், ரவுடித்தனத்துக்கு எதிராகவும் ம.க.இ.க.வும் மக்கள் குழுவும் பிரச்சார இயக்கத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றன.

தகவல்:
மக்கள் கலை இலக்கியக் கழகம்,
சென்னை.


படிப்பகம்

www.padippakam.com

# சந்தர்ப்பவாதமே "நந்தன் வழி"யாம்!

''சந்தர்ப்பவாதமே நந்தன் வழியாம்! '' என்ற கட்டுரையின் முதல் பகுதி 1999 அக்டோபர் இதழில் வெளி வந்தது. நவம்பர் முதல் வாரம் தஞ்சையில் தமிழக சான்றோர் பேரவை நடத்திய தமிழகப் பெரு விழாக் கூத்துகள் பற்றி எழுத வேண்டியிருந்ததால், அதன் இரண்டாம் பகுதி அடுத்த இதழில் வெளியிடாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த இரண்டாம் பகுதி இங்கே தரப்படுகிறது.

சந்தர்ப்பவாத நிலைப்பாடுகள் காரணமாக வெளிப்படுவதுதான் முன்னுக்குப் பின் முரணமாக எழுதுவதற்கான அடிப்படை. மற்ற பிற விடயங்களைப் போலவே, ராஜீவ் கொலை, கொலை வழக்கு சம்பந்தமாக ''நந்தன் வழி'' சந்தர்ப்பவாதமாகவும் முன்னுக்குப்பின் முரணாகவும் பேசுகிறது.

''சி.பி.ஐ. சிறப்புப் புலனாய்வுக் குழு கைது செய்து, பூவிருந்தவல்லி தடா நீதி மன்றத்தில் குற்றஞ்சாட்டிய 26 பேரும் ராஜீவ் கொலையிலோ, சதியிலோ சம்பந்தப்படாத அப்பாவிகள். அவர்களைச் சித்திரவதை செய்து வாக்குமூலம் பெற்று, பொய்யான - தவறான சாட்சியங்கள், ஆதாரங்களைக் காட்டி, உலகில் எங்குமே நடக்காத அளவுக்கு குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேருக்கும் மரணதண்டனை விதித்தார்கள். இந்த வழக்குக்குத் தடா சட்டமே பொருந்தாது, தடாவின் கீழ் தண்டித்ததும் செல்லாது என்று 19 பேரை உச்சநீதி மன்றம் விடுதலை செய்தது. ஆனால் வழக்குக்குப் பொருந்தாது என்று தீர்ப்பளிக்கப்பட்ட தடா சட்டத்தின்படி அளிக்கப்பட்ட வாக்கு மூலம் - சாட்சியங்களை ஆதாரமாகக் கொண்டு எஞ்சிய ஏழுபேரையும் உச்ச நீதி மன்றம் தண்டித்திருப்பதும் தவறான தீர்ப்பு, எனவே இத்தீர்ப்பையும் ரத்து செய்ய வேண்டும்'' என்பது இந்த வழக்கில் வாதாடிய மூத்த வழக்கறிஞர் நடராசனுடைய வாதம்.

சட்ட பூர்வமான இந்த வாதத்தை புதிய ஜனநாயகம் ஏற்கிறது. ராஜீவ் கொலை அரசியல் ரீதியிலானது. அதற்கு அரசியல் ரீதியிலான தீர்வு காண்பதற்குப் போதிய வாய்ப்பும் அவகாசமும் இப்போது இல்லை; இந்த முயற்சிக்காகத் தேவைப்படும் காலத்திற்குள் அரசியல் கேள்விகள் எழாமல் இருக்கவும். பழிவாங்குவதற்காகவும் 26 பேர் சொல்லப்பட்டு விடுவார்கள் என்பதற்காக மட்டுமே இந்தச் சட்டநுட்ப அணுகுமுறையை ஏற்கிறோம். அதற்காக அரசியல் முன்முயற்சியை, அரசியல் உரிமையை இழக்கத் தேவையில்லை.

அதாவது ராஜீவ்காந்தி ஒரு ஆக்கிரமிப்புப் போர்க்குற்றவாளி; அனுதாபத்துக்குரியவரல்ல. ராஜீவ் கொலை விசாரணையில் இதுவும் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதுதான் நாம் சொல்லும் அரசியல் முன்முயற்சி - அரசியல் உரிமை.

ஆனால், ராஜீவ் கொலை காரணமாக எழுந்துள்ள - எழுப்பப்பட்ட அனுதாப அலை தனக்கு எதிராகத் திரும்பியிருக்கிறது, அதற்கு அரசியல் ரீதியில் முகங்கொடுத்து முறியடிக்க வேண்டும். அதற்கு மாறாக, ''இராஜீவ் அனுதாபத்துக்குரியவர், ராஜீவ் கொலை கண்டிக்கத்தக்கது; இராஜீவ் ஒரு ஆக்கிரமிப்புக் குற்றவாளி அல்ல; அதற்காகத் தண்டிக்கப்பட வேண்டியவரல்ல; இராஜீவைக் கற்றியிருந்த அதிகாரிகள்தாம் அவரைத் தவறாக வழி நடத்தி விட்டனர்; ஈழ விவகாரத்தில் நேர்ந்துவிட்ட தவறுகளுக்காக அவர் வருந்தினார்; அவரே அறியாமல் நடந்த தவறுகளைத் திருத்திக் கொள்ளவும், புலிகளுடன் நட்புறவு கொள்ளவும் ஈழத்தமிழர் பிரச்சினையில் உண்மையான அக்கறை காட்டினார்; இதற்காக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி, தி.மு.க உறவுடன் இருக்கையில் நரசிம்மராவ், சந்திரசேகர் பிரதமராக வேண்டும் என்பதற்காக சந்திராசாமி, சுப்பிரமணியசாமி உட்பட காங்கிரசுக்குள்ளும் வெளியிலும் இருந்த ராஜீவின் எதிரிகள் சதி செய்து கொன்றுவிட்டார்கள்.'' - இதுதான் புலிகள் மற்றும் ''நந்தன் வழி'' உட்பட தமிழினக் குழுக்களின் நிலைப்பாடு என்பதை மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம். மறுத்தால் அவர்களுடைய சொந்த ஏடுகளில் இருந்தே ஆதாரபூர்வமாகத் தொகுத்துத் தருவோம்.

இந்த நிலைப்பாடு சரிதான் என்றால் சிவராசன், தனு, சுபா போன்றவர்கள் கூலிக்குக் கொலை செய்யும் கிரிமினல்கள்; சந்திராசாமி, சுப்பிரமணியசாமி போன்ற சதிகாரர்களின் கைக்கூலிகள் என்றாகவில்லையா? நளினி, முருகன், பேரறிவாளன், சாந்தன் போன்றவர்கள் அறியாமலேயே இந்த சதிகாரர்களுடன் உறவு வைத்திருந்தார்கள் என்றாகவில்லையா? இப்படிப்பட்ட பெயரைப் பெறுவதற்குத்தான் அவர்கள் தமது உயிரையும் துறந்தார்களா? இப்படிப் பட்ட அவப்பெயர், அவமரியாதை தமது எதிரிகளால் அல்ல, தாம் நேசித்த தமிழினத் தலைவர்களிடமும், தமிழ் மக்களிடமும் இருந்து தமக்கு வந்து சேரும் என்று அவர்கள் எண்ணியும் பார்த்திருப்பார்களா?

தனக்கு வேண்டிய ஆதரவைப் பெறுவதற்காக எதையும் செய்வார்கள் - எப்படியும் பேசுவார்கள் - எவ்வளவு கீழ்த்தரமாகவும் போவார்கள் புலிகளும் அவர்களுடைய ஆதரவாளர்களும். இந்திய மக்களுக்கும், புரட்சிக்கும் துரோகம் செய்யும் வகையில் இந்திரா - ராஜீவ், எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா முதல் வாஜ்பாய் - பால்தாக்கரே வரை அந்த பாசிஸ்டுகளை தூக்கிப் பிடித்த வரலாறைப் பின்னொரு சமயம் தொகுத்துத் தருவோம்.

ராஜீவ் கொலை விவகாரத்தில் தங்களின் மேற்கண்ட நிலைக்கு ஆதாரமாகப் புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் திரும்பத்திரும்பக் காட்டும் ஆதாரம் ஜெயின் கமிசன் அறிக்கை. காங்கிரசுக் கட்சி தனது அரசியல் எதிரிகளைப் பழி

**மரண தண்டனையை எதிர்த்துத் தமிழினவாதிகள் சென்னையில் நடத்திய ஊர்வலம்**





படிப்பகம்

www.padippakam.com

வாங்கவும் தாக்கி அழிக்கவும் அவசிய மான போது பயன்படுத்துவதற்காக திட்ட மிட்டு ஏற்பாடு செய்து கொண்டுள்ள ஆயு தம்தான் ஜெயின் கமிசன் அறிக்கை. அதை பாசிச ஜெயலலிதா, பா.ஜ.க - ஆர்.எஸ். எஸ் கும்பலும் பயன்படுத்திக் கொள்ளு கின்றன.

அப்படிப்பட்ட ஜெயின் அறிக் கையை அடியோடு நிராகரிப்பதற்குப் பதில் புலிகளும், ''நந்தன் வழி'' ஆதரவா ளர்களும் கூட சந்தர்ப்பவாதமாகப் பயன்ப டுத்திக் கொள்ளுகிறார்கள். கருணாநிதி, வைகோ உட்பட தமிழர்கள் அனைவர் மீதும் பழிபோடும், அவதூறு பரப்பும் சதி கார அறிக்கை என்று ஒருபுறம் நிராகரிக்கி றார்கள். அதே சமயம் ஜெயின் அறிக்கை சுட்டிக்காட்டும் சந்திராசாமி, சுப்பிரமணிய சாமி உட்பட காங்கிரசுக்குள்ளும் வெளியி லும் உள்ள சதிகாரர்கள்தாம் ராஜீவ் கொலைக்குப் பின்னணி என்கிற அடிப்ப டையில் விசாரணையையும் வழக்கையும் நடத்த வேண்டும் என்று மறுபுறம் கோரு கின்றனர். அவரவருக்குத் தேவையான வகையில் பயன்படுத்திக் கொள்வதுதான் சரியான அணுகுமுறையா? அதுதான் நேர்மை - திறமையா?

''புலிகளையே பாசிசப் போக்கு உடையவர்கள் என்று விமர்சனம் செய்யும் 'பரிசுத்தவாதிகள்' என்று புதிய ஜனநாய கத்தின் மீது பாய்கிறார் ''நந்தன் வழி'' சுபவீ. ''பாசிசப் போக்குடையவர்கள்'' என்று சொல்லவில்லை. ''பாசிஸ்டுகள்'' என்றே சொல்கிறோம். ''வைகோ விற்கோ, வேறு எந்தக் கட்சியினருக்கோ விமர்சனமற்ற ஆதரவை எப்போதும் நாம் அளித்ததில்லை'' என்று கூறும் ''நந்தன் வழி,'' ஒன்று, புலிகள் தவிர என்று எழுத வேண்டும் அல்லது, விமர்சனபூர்வமான ஆதரவு என்று இறங்கினால் கூட புலிகள் பாசிஸ்டுகள் தான் என்பதை உணர முடி யும். இந்தமுடிவுக்கு வருவதற்கு ''புதிய ஜனநாயகம்'' முன்வைத்த காரணங்கள் எதையும் ''நந்தன் வழி'' உட்பட புலி களோ, புலி ஆதரவாளர்களோ எவரும் பரி சீலிக்கவும் இல்லை; பதில் சொல்லவும் இல்லை.

புலிகளுக்கு ஒரு நீதி, மற்றவர்க ளுக்கு ஒரு நீதி என்று ''நந்தன் வழி'' போகும் வரை, அது உண்மை என்ற ஊரை ஒருபோதும் அடையாது. ''மரணதண் டனை ஒழிப்பு,'' என்ற முழக்கத்தை முற் றும் முழுதான எப்போதும் எல்லா விவ்கா ரங்களுக்கும் பொதுவாகப் பொருத்த கூடிய அளவுக்கு முதலாளித்துவப் பத்தாம் பசலித்தனமான கோரிக்கையாக ''நந்தன் வழி'' இயக்கம் நடத்துகிறார்கள். வெகுமக் களின் புரட்சிகர எழுச்சி, போரின்போதும் மரணதண்டனை தவிர்க்க முடியாததல் லவா? ''மரண தண்டனை ஒழிப்பு'' என்ப தைப் புலிகளும் ஏற்பார்களா? மாத்தையா போன்று கைது செய்து, சித்திரவதை செய்து மரண தண்டனை வழங்கி கொல்



விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட சிங்கள இன மக்கள்

லப்படுவதற்கு மட்டும் உரிமை உண்டா? மாத்தையா கூட துரோகி, இராணுவ ரீதி யான அமைப்பு நெறிகள் காரணமாகக் கொல்லப்பட்டதாகக் கூறலாம். ஆனால் புலிகளை விமர்சித்தார்கள், மரணதண் டனை ஒழிப்பு இயக்கம் போலவே மனித உரிமை மீறல் - ஜனநாயக உரிமைக்காகக் குரல் கொடுத்தார்கள் என்பதற்காகவே ராஜினி திரணகம, விமலேஸ்வரன் போன் றவர்களைப் புலிகள் கொன்றார்களே, இதையெல்லாம் ''நந்தன் வழி'' எப்போதா வது விமர்சித்தது உண்டா?

''நந்தன் வழி''யின் இந்த இரட்டை நாக்கு அணுகுமுறைதான் புலிகளின் பாசி சத் தன்மையைக் காண மறுக்கிறது; இல்லை, இல்லை மூடி மறைக்கிறது. அதற்கு ஆணித்தரமான இன்னுமொரு சான்று. 1997 டிசம்பர் 6ந் தேதி பாண்டி யன், சேரன், ஆலப்புழை விரைவு இரயில் களில் குண்டு வெடித்து ஒன்பது பயணிகள் மாண்டு போயினர். அது குறித்து அடுத்து வந்த ''நந்தன் வழி'' கண்ணீர்க் கேள்விகள் என்ற தலையங்கத்தைப் பின்வருமாறு எழுதியது. ''இப்படி மடிந்தார்களே ஒன் பது பேர். இவர்கள் யாரை எதிர்த்தார்கள்? படுகாயமடைந்து படுக்கையில் கிடக்கிறார் களே, அவர்கள் இவ்வாறு இரத்தத்தில் மூழ் கடிக்கப்படுவோம் என்று எதிர்பார்த்தார் களா? எப்படி நடந்தது இந்தக் குண்டு வெடிப்புகள்.''

''இந்தக் கண்ணீர்க் கேள்விகளுக்கு விடை சொல்ல எவன் வருவான்?''

''கையில் வெடிகுண்டு கிடைத்துவிட் டது என்பதற்காகக் கண்டவர்கள் மீது எல் லாம் வீசி விடுவதுதான் போராட்டமா? மனதில் கைவைத்துச் சொல்லுங்கள்: போராட்டக்காரர்கள் என்றால் உங்கள் எதிரி யார்? உங்கள் இலக்கு எது? என்று முடிவு செய்துவிட்டு செயல்படுங்கள். அதற்கான விளைவை எதிர்கொள்ளத் தயாராகுங்கள். அதை விட்டுவிட்டு நீங் கள் வெடித்த குண்டு வெடிப்பில் குருதி கொட்டி மாண்டு கிடக்கிறார்களே! அவர் கள் உங்களுக்கு எதிரியுமல்ல. அவர்களும் உங்களை எதிரிகளாக எண்ணவுமில்லை. அவர்கள் அவரவர் வழியில் பயணம் செய்த அப்பாவிகள். உங்கள் எதிரிகளை மிரட்ட அவர்களைப் பலியிடுவது எந்த வகையில் நியாயம்?

''உங்கள் கையில் திரிசூலம் இருக்க லாம். பிறையே இருக்கலாம். சிலுவைகூட தடிகள் ஆகலாம். வெறியர்களே சண்டை உங்களுக்குள் இருக்கட்டும். மக்களின் இரத்தம் குடிக்க மானுடம் இனியும் அனும திக்காது.''

இவை இரண்டாண்டுகளுக்கு முன்பு நந்தன் வழி எழுப்பிய கேள்விகள். சமீபத் தில் நடந்த விமானக் கடத்தல் சம்பவத் துக்கு ''நந்தன் வழி''யில் வந்த தலையங் கம் பின் வருமாறு முடிந்தது.

''நாம் அழுத்தமாய் முன்வைக்க விரும்பும் இரண்டு கருத்துக்கள் இவை தாம்:

1. பொதுமக்களைத் துன்பப்படுத்து வது வன்மையான கண்டனத்திற்குரியது. அவர்களை விரைவாகவும், காயமின்றி யும் காப்பாற்றியாக வேண்டும்.

2. விமானங்கள் கடத்தப்படும் போதும், வெடிகுண்டுகள் வெடிக்கப்படும் போதும் மட்டுமல்லாமல், அமைதிக் காலங்களிலும் இதுபோன்ற பிரச்சினைக ளின் ஆணிவேர்கள் அலசப்பட வேண் டும்.''

''குண்டு வெடிப்புகளில் அப்பாவி கள் பலியாவது'', ''விமானக் கடத்தல் வன் முறை'' பற்றியெல்லாம் ''நந்தன் வழி'' நியாயம் இவ்வாறு இருக்கையில் புலிகள் விடயத்தில் இதே வகை நியாயம், மனிதா பிமானம் பேசுகிறதா? இல்லை; மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்

தொடர்ச்சி 19-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com



## உலக வங்கியின் எடுபிடி சந்திரபாபுவை எதிர்த்து மாணவர்கள் போர்க் கோலம்

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவை ஹைடெக் முதல்வர் என்றும், கவர்ச்சிவாதத்தைக் கைவிட்டு அக்கறையுடன் அவர் மாநிலத்தை முன்னேற்றப் பாடுபடுகிறார் என்றும் ஆளும் வர்க்கங்களும் பத்திரிகைகளும் புகழ்ந்து தள்ளுகின்றன. ஆனால், உலக வங்கி உத்தரவுப்படி அவர் செயல்படுத்தி வரும் நயவஞ்சகத் திட்டங்கள் மக்களிடம் அம்பலப்பட்டுப் போயுள்ளதோடு, மாணவர்களும் இளைஞர்களும் இம்மக்கள் விரோத ஆட்சிக்கு எதிராக மிகப்பெரிய போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

உலக வங்கி உத்தரவுப்படி ரேஷன் கடைகளை மூடிவிட ஆந்திர அரசு தீர்மானித்துள்ளது. உடனடியாக ரேஷன் கடைகளை மூடினால் மக்களிடம் எதிர்ப்பும் ஆட்சி மீது அதிருப்தியும் ஏற்படும் என்பதால், முதற்கட்டமாக போலி ரேஷன் கார்டுகளைப் பறிமுதல் செய்யவும் முறைகேடாகப் பயன்படுத்துவோரைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப் போவதாக அரசு அறிவித்தது.

முறைகேடுகளை ஒழிப்பதாக நாடகமாடும் சந்திரபாபுவின் சூழ்ச்சி இதில்தான் உள்ளது. ஆந்திராவில் ஆண்டு வருமானம் ரூ. 11,000-க்கு குறைவாகப் பெறும் குடும்பங்களுக்கு மட்டுமே, ரேஷனில் ரூ. 3.50 விலையில் 20 கிலோ அரிசி பெற வெள்ளை நிற அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இன்றைய விலைவாசியில் மாதம் ரூ. 900 வருமானமுள்ள குடும்பங்கள் மிகக் குறைவாகவே இருக்க முடியும். ஆனால், ஆந்திராவில் ஒரு கோடிக்கும் மேலான குடும்பங்களிடம் வெள்ளைநிற ரேஷன் அட்டைகள் உள்ளன. இத்தகையோரின் மாத வருமானம் ரூ. 1000-க்கும் மேலாக உள்ளதெனக் காட்டி ரேஷனில் மலிவு விலை அரிசியைப் பெறமுடியாமல் தடுப்பதுதான் சந்திரபாபுவின் திட்டம்.



கடப்பா நகரில் போலீசு அச்சுறுத்தலை மீறி, உலக வங்கியின் எடுபிடி சந்திரபாபு நாயுடுவின் மக்கள் விரோத ஆட்சிக்கெதிராகப் பொங்கிவரும் மாணவர் போராட்டம்.

இதன்படி, ஒவ்வொரு ஊரிலும் வீடுவீடாகக் கணக்கெடுப்பு - ஆய்வு நடத்துவது, தொலைக்காட்சி, மின் விசிறி, எரிவாயு அடுப்பு முதலானவை உள்ளதா எனக் கண்டறிவது, குடும்பத்தில் வேலைக்குச் செல்வோர் பற்றிய விபரங்களை எடுப்பது - இவற்றைக் கொண்டு ஆண்டு வருமானம் ரூ. 11,000 - க்கு மேலாக உள்ளவர்களை இனங்கண்டு, அவர்களுக்கு வெள்ளை நிற ரேஷன் அட்டையை ரத்து செய்வது என்ற திட்டத்துடன் கல்லூரி மாணவர்களை கணக்கெடுக்கச் செல்லுமாறு ஆந்திர அரசு உத்திரவிட்டது. பட்டப்படிப்பு முதல் உயர் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களும் ஜனவரி 3 - ந்தேதி முதல் 15 - ந் தேதி வரை கணக்கெடுக்கச் செல்ல வேண்டும் என்றும் அவ்வாறு செல்வோருக்கு மட்டும் தேர்வில் 10 மதிப்பெண்கள் கூடுதலாக வழங்கப்படும் என்றும் அறிவித்தது.

பஞ்சாயத்துகள் செய்ய வேண்டிய வேலையை மாணவர்கள் தலையில் கட்டுவதோடு, அதற்கு தேர்வில் மதிப்பெண்கள் தருவதாக ஆசை காட்டுவதையும், இம்மக்கள் விரோதத் திட்டத்தையும் ஆந்திர மாணவர்கள் கடுமையாக எதிர்த்து இதைப் புறக்கணித்துள்ளனர்.

இது தவிர உலக வங்கி உத்தரவுப்படி, ஆண்டுக்கு 2% வீதம் அரசு ஊழியர்களைக் குறைக்க சந்திரபாபு அரசு தீர்மானித்துள்ளது. இதன்படி, தற்போது அரசுப் பணியாளர் தேர்வையும் ரத்து செய்துவிட்டது. பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களை ஒப்பந்த முறையில் நியமிக்கவும், உயர் கல்விக் கூடங்களைத் தனியாரிடம் ஒப்படைக்கவும் பரிசீலித்து வருகிறது.

மொத்தத்தில் ஆந்திர மக்கள் அனுபவித்து வரும் அற்பச் சலுகைகளையும் பறித்து வறுமைப் படுகுழியில் தள்ளுவதோடு, மாணவர் - இளைஞர்களின் எதிர்காலத்தையே இருளில் தள்ளிவிடக் கிளம்பியுள்ள சந்திரபாபு அரசுக்கு எதிராக 10 - க்கும் மேலான இடதுசாரி மாணவர் சங்கங்கள் ஒன்றிணைந்து பொதுக் கூட்டம், பேரணி, ஆர்ப்பாட்டம், கடையடைப்பு எனத் தொடர்ச்சியான போராட்டங்களில் இறங்கியுள்ளன. மக்களிடமிருந்தும், மாணவர் - இளைஞர்களிடமிருந்தும் தனிமைப்பட்டுப் போயுள்ள சந்திரபாபு அரசு, குமுறும் எரிமலையைத் தணிக்க வழி தெரியாமல் கம்ப்யூட்டரில் தீர்வைத் தேடிக் கொண்டிருக்கிறது.

## மீண்டும் "தடா" சட்டம்?

பயங்கரவாத "தடா" சட்டத்தைக் கைவிட்டுள்ளதாக அறிவித்த போதிலும், மீண்டும் அதை உயிர்ப்பிக்க அரசு பயங்கரவாத ஆட்சியாளர்கள் முயற்சித்து வருகின்றனர். இதற்கான பரிசீலனைக் கூட்டங்களை நடத்தியுள்ள சட்டக் கமிஷன், உள்துறை அமைச்சகம் அளித்த தகவல்களின் அடிப்படையில் இப்புதிய சட்டத்திற்கான செயல் திட்டத்தையும் தயாரித்துள்ளது.

புதிய தடா சட்டத்திற்கான பரிசீலனைக் கூட்டத்தில், "தற்போதைய சட்டங்களைக் கொண்டு பயங்கரவாதத்தை ஒழிக்க முடியாது என்பதை அண்மைக்கால அனுபவங்கள் காட்டுகின்றன. சில மாநிலங்களில் நிலைமை மிக மோசமாக உள்ளது. எனவே சிறப்பு அதிகாரம் கொண்ட சட்டம் உடனடி அவசியமாக உள்ளது" என்று போலீசு அதிகாரிகளும் அரசுயர் அதிகாரிகளும் வலியுறுத்திப் பேசியுள்ளனர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட தேசிய மனித உரிமைக் கமிஷனின் தலைமை இயக்குனரான கார்த்திகேயன், "ராஜீவ் கொலை வழக்கை விசாரித்த நீதிமன்றம் அதை 'மிருகத்தனமான படுகொலை' என்று முடிவு செய்துள்ளதே தவிர, பயங்கரவாத சதிச் செயல் என்று கூறவில்லை, இது பயங்கரவாதமல்ல என்றால், வேறு எதுதான் பயங்கரவாதமாகும்?" என்று நீதித்துறை மீது குற்றம் சாட்டினார். ஒரு குறிப்பிட்ட பயங்கரவாதி மட்டுமின்றி, அவனுக்கு ஆதரவளித்தோர், புகலிடம் கொடுத்தோர் உட்பட அனைவரையுமே பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்துக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். நீதிமன்றங்கள் இத்தகையோருக்கு கருணை காட்டி பிணையில் விடுதலை செய்ய ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என்று வலியுறுத்தியுள்ளார்.

இந்த ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டுள்ள சட்டக் கமிஷன், "தடா" சட்டத்தை சில போலீசு அதிகாரிகள் தவறாகப் பயன்படுத்தி அப்பாவிகளை வதைத்ததைப் போன்று இனி ஏற்படாத வகையில் புதிய "தடா" சட்டம் அமைய வேண்டும் என்று கோரியுள்ளது. "மனித முகம் கொண்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை" விரைவில் செயல்படுத்துமாறு அரசுக்குப் பரிந்துரையும் செய்துள்ளது.

அண்மையில் நடந்த விமானக் கடத்தல் விவகாரத்துக்குப் பிறகு, இந்திய உளவுத்துறை அதிகாரிகளும் உள்துறை அமைச்சக



படிப்பகம்

www.padippakam.com



அதிகாரிகளும் மிக விரைவாக இச்சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்கள். பயங்கரவாதிகள் - ஆதரவு கொடுத்தவர்கள் என்ற பெயரில் அனைத்துப் புரட்சிகர - ஜனநாயக இயக்கங்களையும், சிறுபான்மை மதத்தவரையும் ஒடுக்கி பாசிச காட்டாட்சியை நிலைநாட்டி விட ஆட்சியாளர்கள் முயற்சித்து வருவதையே இது சுட்டிக் காட்டுகிறது.

## புதிய வடிவில் தொடரும் சாதியத் திமிர்

தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட சிறுவர்கள் வறுமை - பின்தங்கிய நிலைமையால் தொடர்ந்து கல்வி கற்க முடியாத அவலத்தைப் போக்கி, அவர்களை ஊக்கப்படுத்தும் முறையிலே, மும்பை நகரப் பள்ளிகளில் அரசு உத்திரவுப்படி அவர்களிடம் கல்விக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. ஆனால் சாதியத் திமிர் பிடித்த ஒரு பள்ளி நிர்வாகிகள் தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மாணவர்களிடம் வேறு வழிகளில் கட்டாய வசூல் மூலம் அவர்களை இழிவுபடுத்தி பகற்கொள்ளை அடிக்கக் கிளம்பிய விவகாரம் இப்போது அம்பலமாகியுள்ளது.

மும்பை மாநகரின் செம்பூரிலுள்ள நாராயண குரு உயர்நிலைப் பள்ளியின் வெள்ளி விழாவை ஒட்டி ஒரு இசை நிகழ்ச்சி அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கு தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட மாணவர்கள் ரூ. 200 மதிப்புள்ள அனுமதிச் சீட்டு வாங்க வேண்டுமென்றும், மேல்சாதி மாணவர்கள் ரூ. 50 மதிப்புள்ள அனுமதிச் சீட்டை வாங்கினால் போதுமென்றும் நிர்வாகம் உத்திரவிட்டது. இதன்படி 500-க்கும் மேலான தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட மாணவர்களிடம் கட்டாய வசூலும் நடந்துள்ளது.

''பிற்பட்ட - தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் உள்ளிட்டு பல சலுகைகளை அரசு செய்கிறது. அவர்கள் பள்ளிக்கென்று நன்கொடை எதுவும் தருவதில்லை. எனவே அவர்களிடம் ரூ. 200 வசூல் செய்வதில் எந்தத் தவறுமில்லை'' என்று இப்பள்ளியின் கண்காணிப்பாளர் சாதியத் திமிரோடு கொக்கரித்தார்.

இக்கொடுஞ்செயலை எதிர்த்து இந்தியக் குடியரசுக் கட்சியும் ஜனதா தளமும் ஆர்ப்பாட்டங்களை நடத்தின. பல கல்வியாளர்களும் மனித உரிமை அமைப்புகளும் கண்டனம் தெரிவித்து, பள்ளி நிர்வாகிகளை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யக் கோரின. அதன்பினர், மகாராஷ்டிர அரசு இந்த விவகாரம் பற்றி விசாரணைக்கு உத்திரவிட்டு, பள்ளி நிர்வாகிகளிடம் எழுத்து பூர்வ விளக்கமும் கோரியது. பீதியடைந்த பள்ளி நிர்வாகிகள், ஒரு சில ஆசிரியர்கள் இப்படி தவறாக வசூல் செய்து விட்டனர் என்றும், தாங்கள் இப்படி எந்த உத்திரவும் போடவில்லை என்றும் இப்போது மழுப்புகின்றனர். மூன்று ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுத்துள்ளதாக நாடகமாடுகின்றனர்.

கேரளத்தின் சமூக சீர்திருத்தவாதியான நாராயண குருவின் பெயரால் பள்ளியை நடத்திக் கொண்டு, சாதியத் திமிருடன் ஆசிரியர்களும் நிர்வாகிகளும் செயல்பட்டிருப்பது மிகப் பெரிய அவமானம். நாராயண குரு பள்ளியிலேயே இந்த நிலை என்றால், மற்ற பள்ளிகளில் தொடரும் சாதியப் பாகுபாட்டையும் அவமானங்களையும் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ''கிராமங்களில் தான் தீண்டாமையும் சாதியப் பாகுபாடும் நிலவுகிறது; நகரங்களில் யாரும் சாதி பார்ப்பதில்லை'' என்ற பிதற்றலை, இந்தியாவின் மிகப்பெரிய நாகரீகமிக்க நகரமான மும்பையில் புதிய வடிவில் தொடரும் சாதியப் பாகுபாடுகளே நிரூபித்துக் காட்டுகிறது.

---

17-ஆம் பக்கத் தொடர்ச்சி

தால் பொன்குடம் என்பதுதான் நந்தன் வழி அணுகுமுறையாக உள்ளது.

1985-86-இல் சிங்கள கிராமங்களில் புகுந்து சிவிலியன்களைக் கொலை செய்வதன் மூலம் இலங்கை அரசைப் பேச்சு வார்த்தைக்கு நிர்பந்திக்கலாம் என்று இந்திய உளவுப் படை ''ரா'' தூண்டியது. பின்னாளில் இந்தியக் கைக்கூலிகளாகவும், ஈழத் துரோகிகளாகவும் சீரழிந்த ''பிளாட்'', ஈ.பி.ஆர்.எல்.எஃப். போன்ற குழுக்கள் கூட அந்தக் கொலைவெறிச் செயலைச் செய்ய மறுத்து விட்டன. ஆனால் பணமும் ஆயுதமும் பெற்றுக் கொண்டு அனுராதபுரத்தில் புகுந்து சிங்கள சிவிலியன்களை, குறிப்பாக பால்மணம் மாறாத குழந்தைகள், முதியவர்கள், இளஞ்சிறார்கள், பெண்களை எல்லாம் வெட்டிக் கொன்றார்கள் விடுதலைப்புலிகள்.

அதன் பிறகு, சிங்கள பாசிச இராணுவம் ஈழத் தமிழ் சிவிலியன்களைத் தாக்கிக் கொல்லும் பொழுதெல்லாம், அதற்குப் பதிலடியாக சிங்கள சிவிலியன்களை புலிகள் கொன்றார்கள். கடைசியாக, செப் - 15 அன்று புதுக்குடியிருப்பு கிராமத்தின் மீது இலங்கை விமானப்படை குண்டு வீசி 22 தமிழர்களைக் கொன்றது. அதற்குப் பழி வாங்கும் முகமாக மூன்றாம் நாள் சிலாவ் பூந்த், கோனகலா கிராமங்களில் புகுந்து புலிப்படையினர் 60 பேருக்கும் மேற்பட்ட சிங்கள சிவிலியன்களைக் கண்டதுண்டமாக வெட்டிப் போட்டனர். மாண்டவர்களில் 14 பேர் சிறுவர்களும் குழந்தைகளும் அடங்குவர்.

அவர்கள் அனைவரையும் சிங்கள வெறியர்களாக, சிங்கள மக்கள் அனைவரையும் ஈழத்தமிழர்களின் எதிரிகளாகப் புலிகள் கருதுகிறார்களா? அதை ''நந்தன் வழி''த் தமிழினவாதிகள் ஏற்கிறார்களா? இல்லை என்றால் இப்படிப்பட்ட கொலைகளுக்கு எதிராக எப்போதாவது கண்ணீர்க் கேள்விகள் எழுப்பியதுண்டா?

சிங்கள சிவிலியன்களை மட்டுமல்ல, இசுலாமியர் அனைவரும் ஈழத்தைவிட்டு வெளியேற வேண்டும் எனக் காலக்கெடு வைத்த விடுதலைப் புலிகள், மன்னார் - புத்தன் குடி மசூதிக்குள் புகுந்து தொழுகை நடத்திக் கொண்டிருந்தவர்களைக் கண் மண் தெரியாமல் சுட்டுக் கொன்றார்களே; அப்போதாவது கண்ணீர்க் கேள்விகள் எழுப்பியதுண்டா?

விடுதலைக்குப் போரிட்டுக் கொண்டிருந்த லாவோ, வியத்நாமிய, கம்போடிய மக்கள் மீது நேபாம் - தீக் குண்டுகள், மூச்சுத் திணறிச் சாகும் இரசாயனக் குண்டுகள், புல் - பூண்டுகளையும் அழிக்கும் ''ஏஜெண்டு ஆரஞ்சு'' - இரசாயனம் வீசி அழித்தார்கள் அமெரிக்க ஆக்கிரமிப்பு வெறியர்கள். அவ்வளவு கொடூரத்துக்குமிடையே பிடிபட்ட அமெரிக்கப் போர்க் கைதிகளைக் கூட பாதுகாப்பாக செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தார்கள், விடுதலைப் போராளிகள். உலகமே வியந்த அப்போராளிகளை வழிநடத்தியது மார்க்சிய - லெனினியம். ஆனால் ஈழப்புலிகளை வழி நடத்துவது இனவெறி பாசிசம்; எனவேதான் அரசியல் காரணங்களுக்காக மட்டும் போர்க் கைதிகளை ஒப்படைக்கும் அதேசமயம், சிவிலியன்களைப் படுகொலை செய்வதில் சிங்கள பாசிஸ்டுகளுடன் போட்டி போடுகிறார்கள்.

● மாணிக்கவாசகம்


## படியுங்கள்!

### தோழர் மாவோவின் மூன்று சொற்பொழிவுகள்

*சீனப் புரட்சியின் 50-ஆவது ஆண்டினை நினைவு கூர்ந்து வெளியிடப்பட்டுள்ள நூல்*

விலை : ரூ. 8.00

பிரதிகளுக்கு:
கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002.




படிப்பகம்

# புரட்சிகர அமைப்பு மீது ஆதாரமற்ற பொய்க் குற்றச்சாட்டு

## ஏ.எம். கோதண்டராமனும், ''பொதுவுடமை'' இதழும் மாநில அமைப்புக் கமிட்டியின் மீது விமர்சனம் என்ற பெயரில் அள்ளி வீசிய அவதூறுக்கு ஒரு மறுப்பு

இ.பொ.க (மா - லெ), மக்கள்யுத்தம் (போல்ஷ்விக்) என்கிற பெயர்ப்பலகை அமைப்பின் தலைவர் ஏ.எம். கோதண்டராமன் (ஏ.எம்.கே) அவர்கள் ''நியூஸ்ஸைட்''(Newsside) என்ற இதழுக்கு (ஏப்ரல் '99) ஒரு பேட்டி அளித்துள்ளார்.

இவர், ஒன்றுபட்ட மார்க்சிய - லெனினியக் கட்சியின் மையக் குழு உறுப்பினராகவும், தமிழ் மாநிலக் கமிட்டியின் செயலராகவும் இருந்தவர்.

சில ஆண்டுகள் சிறையிலிருந்த அவர், 1977-இல் விடுதலையடைந்தார். அப்போது இ.பொ.க (மா - லெ) இயக்கம் பின்னடைவு, பிளவுக்குள்ளாகி, சில குழுக்களாக இயங்கி வந்தது. அப்போது எமது அமைப்பின் சார்பில் அவருக்கு 29.12.1977 தேதியிட்டு ஒரு கடிதம் எழுதப்பட்டது. ஒன்றுபட்ட மா - லெ கட்சியின் மையக் குழு உறுப்பினர், தமிழ் மாநிலக் கமிட்டியின் செயலராக இருந்த பொறுப்பின் காரணமாக, குழு அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில், மா - லெ இயக்கத்தின் பின்னடைவு, பிளவுக்கான காரணங்களையும் அனுபவங்களையும் அவர் தொகுத்து முன்வைக்க வேண்டும் என்றும், அதை அடிப்படையாக வைத்துப் புரட்சிகரக் குழுக்களை ஐக்கியப்படுத்தும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்றும் கோரியிருந்தோம். ஆனால், இன்றுவரை அதற்கு அவர் பதிலளிக்கவே இல்லை.

எமது கோரிக்கைக்கு மாறாக, குழு அரசியலில் இறங்கி, ''கூட்டக்குழு'' என்றழைக்கப்பட்ட ஒரு குழுவுடன் சேர்ந்து, ஆந்திர சி.ஓ.சி குழுவுடன் இணைந்தார். அப்படி இணைந்தபோதே, தமிழக மார்க்சிய - லெனினிய இயக்கம் சார்பாக முந்தைய பின்னடைவு, பிளவுக்கான காரணங்களையும் அனுபவங்களையும் தொகுத்து முன்வைக்கும் பொறுப்பு ஏ.எம்.கே அவர்களுக்கு வழங்கப்பட்டது; அவரும் அதை ஏற்றுக் கொண்டார். அந்தத் தொகுப்பின் அடிப்படையில் தமிழ் மாநில இ.பொ.க (மா-லெ) மாநாடு கூட்டி, முறைப்படி சி.ஓ.சி.க்கான உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பது என்று முடிவானது. ஆனால், ஐந்தாண்டுகளாகியும் அந்தப் பொறுப்பை அவர் நிறைவேற்றாது தட்டிக்கழித்தார். பின்னர், சி.ஓ.சி.யில் கருத்துவேறுபாடுகள் எழுந்தபோது, ஏ.எம்.கே.யும் அவர் தலைமையிலான தமிழ்நாடு பிரிவும் அந்தக் கடமையைச் செய்யத் தவறியதையே காரணமாக வைத்து, தமிழ்நாட்டைச் சேர்ந்த சி.ஓ.சி. உறுப்பினர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லவெனக் காட்டி, சி.ஓ.சி. செயலாளர் சி.ஓ.சி.யையே கலைத்து விட்டார்; அமைப்பும் பிளவுபட்டது.

அப்பிளவின் காரணமாக உருவான இ.பொ.க (மா - லெ) ம.யு (போல்ஷ்விக்) - தமிழ்நாடு என்ற அமைப்பின் தலைவரானார் ஏ.எம்.கே. மார்க்சிய - லெனினிய இயக்கத்தின் அடிப்படை நிலைப்பாடுகளை மறுபரிசீலனை செய்து, அரசியல் - கோட்பாட்டுப் பிரச்சினைகள் மீது ஆழமான, விரிவான விவாதம் நடத்தப் போவதாக அந்த அமைப்பு முடிவு செய்தது. அதோடு மா - லெ இயக்கத்தின் பின்னடைவு, பிளவுக்கான காரணங்களையும், அனுபவங்களையும் தொகுத்து முன்வைக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் மூத்த தலைவர் என்கிற முறையில் அவருக்கே விடப்பட்டது. ஆனால், இந்த முடிவுகள், கடமைகள் எதையும் நிறைவேற்றாது செயலிழந்த நிலைக்கு அக்குழு தள்ளப்பட்டது. இதனால் வெறுப்புற்ற அணிகள் பலரும் வெளியேறினர். அக்குழுவும், ஏ.எம்.கே உட்பட சில ''தலைவர்''களையும் அவர்களுடைய விசுவாசிகளையும் மட்டுமே கொண்ட பெயர்ப்பலகை அமைப்பாகி, இனிமேலும் மா - லெ குழுவாக இல்லாமற்போனது.

மார்க்சிய - லெனினிய இயக்கத்தில் கடந்த காலத்தில் ஏற்பட்ட பின்னடைவு, பிளவுக்கான காரணங்களையும், அனுபவங்களையும் அந்த (மா - லெ) குழுக்கள் தனித்தனியே தொகுத்துக் கொண்டும் பகிர்ந்து கொண்டும், ஐக்கியத்துக்கான முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளன. ஆனால், இ.பொ.க. (மா-லெ), ம.யு. (போல்ஷ்விக்) மட்டும் அவ்வாறான காரணங்களையும், அனுபவங்களைத் தொகுப்பதையும், அரசியல் கோட்பாட்டு முடிவுகள் எடுப்பதையும் ஏறக்குறைய 15 ஆண்டுகளாகத் தவிர்த்து வருகிறது. காரணம், மா - லெ இயக்கத்தில் ஏற்பட்ட பின்னடைவு, பிளவுகள், அரசியல் நடைமுறைத் தவறுகளுக்குத் தாங்கள் பொறுப்பேற்க நேரினும், தங்களுக்குள்ளேயே நிலவும் கருத்து வேறுபாடுகளை அலச வேண்டிவரும் என்பதால் ஒருவித சமரசத்தோடு அந்தக் குழுவின் ஏ.எம்.கே. மற்றும் பிற ''தலைவர்கள்'' அஞ்சுகின்றனர்.

இவ்வாறு 20 ஆண்டுகளுக்கு மேலாக வெவ்வேறு அமைப்புகள் கோரியும், தானே பொறுப்பேற்றும் கூட மா - லெ இயக்கப் பின்னடைவு, பிளவுக்கான காரணங்களையும், அனுபவங்களையும் தொகுத்து முன்வைப்பதை தவிர்த்தும், தட்டிக்கழித்தும் வரும் ஏ.எம்.கே. அவர்கள், இயக்கத் தோழர்கள் பலரும் போராடிப் பெற முடியாததை ஒரு முதலாளித்துவப் பத்திரிகை நேர்காணலின் வாயிலாக ''நாட்டு மக்கள் அனைவருக்கும்'' வழங்கியிருக்கிறார். இயக்கத்துக்குள் அவர் மீது வைக்கப்படும் மிக முக்கியமான விமர்சனங்களில் இதுவும் ஒன்று. ''ஜனநாயக மத்தியத்துவம்'' என்ற மா - லெ இயக்கத்தின் உயரிய அமைப்புக் கோட்பாட்டை அவர் ஒரு போதும் மதித்து நடந்ததில்லை. ''கமிட்டி அமைப்புக்குள் நடக்கும் விவாதத்தையும், யார் யார் என்னென்ன நிலைப்பாடுகளை எடுத்தார்கள் என்பதையும், அமைப்பு முடிவுக்கு மாறாக உள்ள தனது தனிப்பட்ட நிலைப்பாடுகளையும், கமிட்டி அமைப்புக்கு வெளியே அணிகளிடம் பேசி தனது விசுவாசிகளை உருவாக்கிக் கொள்வதை நடைமுறையாக ஏ.எம்.கே. கொண்டிருக்கிறார்'' என்பது அவர் மீது வைக்கப்படும் நீண்ட கால விமர்சனம்.

''ஜனநாயக மத்தியத்துவம்'' என்ற உயரிய அமைப்புக் கோட்பாட்டை உருவாக்கி வழங்கிய தோழர். லெனினுடைய 'போல்ஷவிக்' கட்சியின் பெயரைத் தமது அமைப்புக்குச் சூட்டியிருக்கும் தலைவர், ஏ.எம்.கே., ''நியூஸ்ஸைட்'' பத்திரிக்கைக்கு அளித்துள்ள பேட்டியில் மா-லெ இயக்கத்தின் அனுபவமாகவும், தான் எடுத்த முடிவுகளுக்குக் காரணமாகவும் கூறுகின்ற கருத்துக்கள் எந்த அமைப்பிலும் எப்போதும் ஏற்றுக்கொண்டதல்ல. வழக்கமான அவருடைய ''கிசுகிசு'' பாணியிலான பிரச்சாரம்தான். இப்படிச் செய்வது தான் சரிபார்க்க முடியாத அவதூறுகளையும் பொய்களையும் பேசுவதற்கு வசதியான வடிவம் என்று செய்கிறார்.

அவசர நிலைக்குப் பின் சிறையிலிருந்து வெளிவந்த நீங்கள், ''வேறு பல குழுக்கள் இருந்தபோதும் மைய அமைப்புக் குழுவை (C.O.C) ஏன் தெரிவு செய்தீர்கள்?'' என்ற கேள்விக்கு விளக்கமளித்த ஏ.எம்.கே, எமது அமைப்பைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

''மத்தியில் ஆட்சியிலிருந்த ஜனதா அரசாங்கத்துடன் ஐக்கிய முன்னணி அமைத்துக் காங்கிரசை எதிர்க்க வேண்டும் என்று மாநில அமைப்புக் கமிட்டி (S.O.C) தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. (S.O.C had adopted a resolution for a United front with the then Janata Govt at the centre...) அதில் எனக்கு உடன்பாடு இல்லையாதலால், அந்தக் குழுவுடன் நான் சேரவில்லை'' என்று



படிப்பகம்

www.padippakam.com

கூறியுள்ளார்.

ஏ.எம்.கே. - யின் இந்தப் பேட்டிக்கு மறுப்புரை வெளியிட்டுள்ள 'பொதுவுடைமை' என்ற இதழ் (மார்ச் - நவ '99) ''எஸ்.ஓ.சி. (S.O.C.)-யினராவது காங்கிரசின் நெருக்கடி நிலைப் பிரகடனத்தை எதிர்த்து ஜனதாவோடு ஐக்கிய முன்னணியைப் பற்றிப் பேசினார்கள்.....'' எனக் குறிப்பிட்டு ஏ.எம்.கே.யின் பொய்யை வழி மொழிந்துள்ளது.

இதன்மூலம் ஏ.எம்.கே அவர்களின் முன்னாள் அணுக்கத் தொண்டர்களும், இந்நாள் அறிஞர்களுமான 'பொதுவுடைமை' இதழ்க்காரர்களும், மா.அ.க அப்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருந்ததாகவே குறிப்பிட்டுள்ளனர்.

மாநில அமைப்புக் கமிட்டி (S.O.C) இ.பொ.க (மா-லெ) என்றழைக்கப்படும் எமது அமைப்பு, ஜனதா அரசாங்கத்துடன் ஐக்கிய முன்னணி அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஒரு போதும் நிறைவேற்றியதில்லை. மாறாக, ஜனதா உருவாக்கிய ஜனநாயக மாயவலையை முறியடிக்க, ஜனதா அரசின் ''பாசிஃபிசத்தை'' (Pacifism) அம்பலப்படுத்த வேண்டும் என்றுதான் முடிவெடுத்துள்ளோம். எனவே, ஏ.எம்.கே கூறியுள்ளது அப்பட்டமான பொய்யும், அவதூறும் ஆகும்.

'நியூஸ்ஸைடு' இதழில் இந்தப் பேட்டியைப் படித்த எமது தோழர்கள், போல்ஷ்விக் அமைப்பின் அணிகளிடம், ''உங்கள் தலைவர் கூறியிருப்பது பொய்'' என்பதை எடுத்துச் சொல்லி, ஏ.எம்.கே.யின் கூற்றுக்கான ஆதாரத்தைக் காட்டும்படியும் கோரியுள்ளனர். பேட்டி வெளிவந்து எட்டு மாதங்களாகியும் அவர்களது தலைமையாலோ, விசுவாசிகளாலோ அதற்கான ஆதாரம் எதையும் காட்டமுடியவில்லை.

இப்போது, நாம் பகிரங்கமாகவே கோருகிறோம். ''மத்தியில் ஆட்சியிலிருந்த ஜனதா அரசாங்கத்துடன் ஐக்கிய முன்னணி அமைத்துக் காங்கிரசை எதிர்க்க வேண்டும்'' என்று மாநில அமைப்புக் கமிட்டி நிறைவேற்றியதாகக் கூறப்படும் தீர்மானத்தை ஏ.எம். கே.யும் அவரது விசுவாசிகளும் எமக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஏ.எம்.கே.யின் இந்த அவதூறை வழிமொழியும் வகையில் எழுதியுள்ள ''பொதுவுடைமை''ப் பத்திரிக்கையாளர்களும் அத்தீர்மானத்தை அனுப்பி வைக்க வேண்டும். அரசியல் நாணயமும், நாகரிகமும் கொண்டவர்களாக இருந்தால் இதைச் செய்வார்கள். இல்லையானால், தவறை ஒப்புக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

மாநில அமைப்புக் கமிட்டி,
இ.பொ.க (மா-லெ),
தமிழ்நாடு.

---

6-ஆம் பக்கத் தொடர்ச்சி

கவுடா, குஜ்ரால் என்று யார் பிரதமராக இருந்த போதும், வி.பி.சிங், யெசுவந்த் சின்கா, மன்மோகன் சிங், சிதம்பரம் என்று யார் நிதி அமைச்சராக இருந்தபோதும் இவர்கள் அனைவருமே பொருளாதாரச் சீர்திருத்தம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கையைத்தானே அமலாக்கினார்கள்! போலி கம்யூனிஸ்டுகள் உட்பட, எல்லா ஓட்டுக் கட்சிகளும், யெசுவந்த் சிங், சிதம்பரம் கொண்டுவந்த நிதிநிலை அறிக்கைகளை எந்தவித மூச்சும் விடாமல் 10,15 நிமிடங்களில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினவே! ஆளும் வர்க்கக் கட்சிகளிடையே கொள்ளை மாறுபாடுகள், தெளிவான எல்லைக்கோடுகள் என்பதெல்லாம் வெறும் மோசடி என்பது அப்போதே விளங்கிவிட வில்லையா?

★ புலிகள் தமது கோடுகளை அழித்துக் கொண்டும், சிறுத்தைகள் தமது புள்ளிகளை அழித்துக் கொண்டும், ஓநாய்கள் தமது வாலைச் சுருட்டிக் கொண்டும் சைவப் பிராணிகளாகிவிட முடியும் என்றால், காங்கிரசு தனது ஆளும் வர்க்கக் கொள்கைகளைக் கைவிட்டு மக்கள் ஆதரவு நிலை எடுக்க முடியும் என்றால், பா.ஜ.க.வுக்கும் இது பொருந்தாதா? தானே ஆட்சியைப் பிடிக்க முடியாத தேக்க நிலையை எட்டியுள்ள பா.ஜ.க.வையும், அதற்குக் காரணமான இந்து மதவெறி வகுப்புவாதத்தைக் கைவிடும்படி போலிக் கம்யூனிஸ்டுகள் கோரலாமே!

இந்தக் கேள்விகள் எல்லாம் சுர்ஜித்துக்கும் அவரது கட்சி அறிவாளிகளுக்கும் ஏன் எழவில்லை?

இவ்வளவு இக்கட்டான நிலையிலும் அடுத்தடுத்த தோல்வி, பின்னடைவுக்குப் போன பின்னும் காங்கிரசு, தனது ஆளும் வர்க்க ஆதரவு பொருளாதாரச் சீர்திருத்தக் கொள்கையில் உறுதியாக இருக்கிறது என்றால், அதையே அம்பலப்படுத்தி, தனிமைப்படுத்தி, தமது பலத்தைப் பெருக்கி கொள்ள வேண்டியது அல்லவா கம்யூனிஸ்டுகளின் குறிக்கோளாக இருக்க வேண்டும்? காங்கிரசு, தனது தோல்வி, பின்னடைவு காரணமாக மக்கள் ஆதரவு கொள்கைகள் - திட்டங்களை முன்வைத்து ஓட்டுப் பொறுக்க முயன்றால்கூட, அது வெறும் நாடகம் என்பதை அம்பலப்படுத்தியும் அதன் பின்னே ஒளிந்திருக்கும் ஆளும் வர்க்க ஆதரவுப் பொருளாதார நோக்கங்களை மக்களிடம் எடுத்துச் சொல்லுவதும் கம்யூனிஸ்டுகளின் கடமையல்லவா?

காங்கிரசின் மீது ஒரு வேளை மக்களுக்கு நம்பிக்கை, மாயை, பிரேமை, கவர்ச்சி ஏதாவது இருந்தால், அதை அம்பலப்படுத்தி, அவற்றில் இருந்து விடுவித்து, விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியதல்லவா கம்யூனிஸ்டுகளின் கடமை?

இல்லை, இவர்கள் கம்யூனிஸ்டுகள் அல்ல. போலிக் கம்யூனிஸ்டுகள்! காங்கிரசிடம் நம்பிக்கை எதிர்பார்ப்புக் கொண்டுள்ள ''மக்கள்'' என்று சுர்ஜித் கூறுவது வேறு யாரையுமில்லை, தங்களைத்தான்.

அடுத்தடுத்து ஆளும் வர்க்கக் கட்சிகளின் மீது நம்பிக்கை - எதிர்பார்ப்பு கொண்டு, கூட்டணி வைத்து, மக்களை ஏமாற்றுவதுடன், தங்கள் அணிகளையும் ஏமாற்றுகிறார்கள். நேரு - இந்திரா தலைமையில் முற்போக்கு அணி அமைத்து, தேசிய ஜனநாயக அரசமைத்து, முதலாளித்துவமற்ற பாதையில் போய் சோசலிசத்தை அடைவதாகச் சொல்லி ஏமாற்றியது டாங்கேயிச சி.பி.ஐ. கட்சி. அதைத் திரிபுவாதமென்று சொல்லித் தனிக்கட்சி அமைத்த சி.பி.எம்.மும் அதையே செய்கிறது.

காங்கிரசு, ஜெயலலிதாவெல்லாம் மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகள் என்று சொல்லிக் கூட்டணி வைத்துக் கொண்டுள்ள இரண்டு போலி கம்யூனிஸ்டு கட்சிகளும், அக்கட்சிகள் கூட்டணியை நியாயப்படுத்தும் வகையில் கொள்கை வகுத்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றன.

''காங்கிரசுக் கட்சி தானே மக்களிடமிருந்து அந்நியப்பட்டுப் போகும் அதேசமயம், அதனால் ஏற்படுத்தப்பட்ட வெற்றிடத்தை பா.ஜ.க.வால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வலது சாரி சக்திகள் பிடித்துக் கொண்டன. பா.ஜ.க. மக்கள் சார்புடைய மாற்றுத் திட்டத்தை முன்வைக்காத அதேசமயம், வகுப்புவாத மற்றும் வெறித்தனமான உணர்வுகளைக் கிண்டிவிட்டு மக்கள் கவனத்தைத் திசை திருப்புகிறது. எவ்வாறாயினும், (காங்கிரசு ஏற்படுத்திய) வெற்றிடத்தை இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகள் நிரப்பத் தவறியதன் காரணமாக இது நடந்தது என்பதையும் குறிப்பிட வேண்டும்'' என்கிறார் சுர்ஜித்.

ஐயா, தாடிக்காரர் கிழவரே! காங்கிரசு ஏற்படுத்திய வெற்றிடத்தை இடதுசாரி ஜனநாயக சக்திகள் பிடித்துக் கொள்ளத் தவறியதற்கான காரணத்தை மட்டும் சரியாக, நேர்மையாக, பாரிய முறையில் தங்கள் ஆய்வு செய்யவில்லையே அது ஏனய்யா! அன்னை சோனியா தலைமையில் நிலையான, மதச்சார்பற்ற நல்லாட்சி மலர,

புரட்சித் தலைவியின் ஆதரவு பெற்ற மார்க்சிஸ்ட் கட்சி வேட்பாளர் தோழர் .......... அவர்களை ஆதரியுங்கள் என்கிற சுவரெழுத்துக்கள் இன்னமும் வட சென்னை, நாகை, கோவை, மதுரையில் அப்படியே இருக்கின்றன போய்ப் பாருங்கள்.

உங்கள் கொள்கையைச் சொல்லி ஓட்டுக் கேட்டால் மக்கள் ஓட்டுப் போட மாட்டார்கள்; அன்னை சோனியா, புரட்சித் தலைவி ஜெயலலிதாவின் பெயரைச் சொல்லித்தான் ஓட்டுப் பொறுக்க முடியும் என்று நீங்களே நம்பும்போது, இப்படித் தானே ஆய்வுரை எழுதுவீர்கள்!

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# அகமதாபாத் கலவரம் பற்றிய உண்மையறிக்கை

**வாஜ்பாயின் ஆட்சியில் இந்து மதவெறிக் கலவரங்கள் நடக்கவில்லை என்று பா.ஜ.க.வுடன் கூட்டுச் சேர்ந்துள்ள திராவிடக் கட்சிகள் கூறுவது அப்பட்டமான பொய் என்பதற்கான ஆதாரம்**

தாங்கள் ஆளும் மாநிலங்களில் மதக் கலவரங்களே கிடையாது என்று இந்து வெறியர்கள் பம்மாத்து செய்துவரும் நிலையில், பாரதீய ஜனதா ஆளும் குஜராத் மாநிலத்தில் கடந்த ஜூலை 20-ந் தேதி முதல் ஆகஸ்டு 2-ந் தேதி வரை ஏறத்தாழ 15 நாட்களுக்கு தொடர்ச்சியாக மதக்கலவரம் மூண்டது. இதில் 8 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. கார்கில் போர் வெற்றி - தேர்தல் ஆரவாரத்தில் இக்கலவரம் பற்றிய செய்திகள் இருட்டடிப்பு செய்யப்பட்டுவிட்டன. 1969-ஆம் ஆண்டில் நடந்த மிகப்பெரிய மதக்கலவரத்தையே விஞ்சும் வகையில் நடந்துள்ள இக்கலவரம் தற்போது ஓய்ந்து விட்டபோதிலும், இன்னமும் நீறுபூத்த நெருப்பாகவே நீடிக்கிறது. அடுத்த கலவரம் எப்போது வேண்டுமானாலும் வெடிக்கலாம் என்பதற்கான சூழ்நிலையே அம்மாநிலத்தைக் கவ்வி நிற்கிறது.

இக்கலவரத்துக்கு முன்பே சிறுபான்மை முஸ்லிம் மக்களுக்கு எதிரான வெறுப்புணர்வை இந்து வெறியர்கள் திட்டமிட்டு பரப்பி வந்தனர். உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியும் கார்கில் மோதலும் அவர்களுக்கு மேலும் சாதகமாக அமைந்தது. கிரிக்கெட் போட்டியில் இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் பாகிஸ்தானை வீழ்த்தியதும் இந்து வெறியர்கள் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் பட்டாசு வெடித்துக் கொண்டாடினர். இந்திய குடிமக்களாகிய முஸ்லிம்களையும் பாகிஸ்தானின் முஸ்லிம்களையும் ஒன்றாக வைத்து வக்கிரமான முறையில் வெறியூட்டினர்.

கார்கில் போர் மூண்டதும் அதை முஸ்லிம்களுக்கு எதிரான போராக இந்து வெறியர்கள் கொச்சையாக சித்தரித்து, முஸ்லிம் எதிர்ப்பு தட்டிகள் - சுவரெழுத்துக்களுடன் கீழ்த்தரமான முறையில் பிரச்சாரம் செய்தனர். கார்கில் போரை ஆதரித்து இந்து வெறியர்கள் ஆங்காங்கே நடத்திய சிறு சிறு ஊர்வலங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக ஆபாசமான முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இதைக் கண்டித்து முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் செய்தபோது, போலீசார் அவர்கள் மீது கண்மூடித்தனமாக தடியடி தாக்குதல் நடத்தியதோடு, வீடுகளில் புகுந்தும் வதைத்தனர்.

கார்கில் போரில் முகேஷ் ரத்தோட் என்ற சிப்பாய் மரணமடைந்தார். இவர் உள்துறை அமைச்சர் அத்வானி போட்டியிட்ட காந்தி நகர் நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்தவர். தேர்தல் ஆதாயத்துக்காக இறந்த சிப்பாயின் சுடுகாட்டுச் சாம்பல் கொண்ட பானையுடன் அத்வானி காந்தி நகருக்கு வந்தார். முதல்வர் கேசுபாய் பட்டேல் தலைமையில் அத்வானி முன்னிலையில் இந்த 'அஸ்தி கலச'த்துடன் காந்தி நகரில் ஊர்வலம் நடத்தப்பட்டது. முஸ்லிம்கள் வாழும் பகுதியில் ஊர்வலம் சென்றபோது, ஆபாசமான முறையில் முஸ்லிம்களை இழிவுபடுத்தி ஆத்திரமூட்டும் வகையில் இந்துவெறியர்கள் முழக்கமிட்டுச் சென்றனர். ஊர்வல முடிவில் அத்வானி உரையாற்றிய பொதுக் கூட்டத்தில் பாகிஸ்தான் எதிர்ப்பு - முஸ்லிம் எதிர்ப்பு முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இந்த ஊர்வலம் - பொதுக் கூட்டத்திற்கு போலீசாரிடம் முன் அனுமதியும் பெறப்படவில்லை.

நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு, போரில் மாண்டு போன சிப்பாய் பிறந்த ஊரான மேகானி நகரில் இந்து வெறி பரிவாரங்கள் தமது கிளை அலுவலகங்களைத் திறந்தன. மதவெறி சக்திகள் வெறியூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்க்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும், பாரதீய ஜனதா, விசுவ இந்து பரிஷத், பஜ்ரங்தளம் ஆகிய அமைப்புகளைக் கட்டுப்படுத்துமாறும் அகமதாபாத் போலீசு துணை கமிஷனர் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை குறிப்பு அனுப்பினார். கலவரச் சூழலைத் தூண்டாமல் தமது அணிகளைக் கட்டுப்படுத்தி வைக்குமாறு விசுவ இந்து பரிஷத், பஜ்ரங்தளம் ஆகியவற்றின் மாநிலத் தலைமைக்கும் போலீசு அதிகாரிகள் கடிதம் எழுதினர்.

இந்தச் சூழ்நிலையில் ஜூலை 14-ஆம் நாளன்று ரத யாத்திரை விழா வந்தது. குஜராத்தில் ஒவ்வொரு நகரிலுமுள்ள ஜெகன்னாதர் கோயிலிலிருந்து கடவுள் சிலைகள் ஆண்டு தோறும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். காலையில் தொடங்கி நள்ளிரவு வரை பல பகுதிகளுக்கு ஊர்வலம் சென்று மீண்டும் புறப்பட்ட இடத்திற்கு வந்து சேரும். இதில் கடவுளை வாழ்த்தி பாடல்களும் முழக்கங்களும் எழுப்பப்படும். முஸ்லிம்கள் வாழும் பகுதியில் ஊர்வலம் சென்றபோது இந்து வெறியர்கள் முஸ்லிம்களுக்கு எதிரான முழக்கங்களை திட்டமிட்டே எழுப்பினர். ''முஸ்லிம் நாய்களே, பாகிஸ்தானுக்கு ஓடுங்கள்; இல்லையேல் உங்களுக்குக் கல்லறை நிச்சயம்!'' என்ற முழக்கங்களும், இன்னும் ஆபாசமான முழக்கங்களும் ஊர்வலத்தில் எழுப்பப்பட்டன.

ஊர்வலப் பாதையெங்கும் தடுப்பு அரண் அமைக்கப்பட்டிருந்த போதிலும் பெருந்திரளான முஸ்லிம் மக்கள் திரண்டு, இந்த ஊர்வலத்திற்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்து கைகளை உற்சாகமாக அசைத்தனர். முஸ்லிம் இளைஞர்கள் உணர்ச்சிவசப்பட்டு விபரீதம் ஏதும் ஏற்பட்டு விடக்கூடாதென்று, தாய்மார்கள் முன்னணியில் நின்று கொண்டு இளைஞர்களை பின்னுக்குத் தள்ளிவிட்டனர். தாரியாபூரில் முஸ்லிம் பெண்கள் ஊர்வலம்

**இந்து வெறியர்களின் கல்வீச்சுத் தாக்குதலில் நிலைகுலைந்த ஏழை முஸ்லிம்கள் வாழும் பகுதி**





படிப்பகம்

www.padippakam.com

வரும்போது குரானிலிருந்து சில பகுதிகளைப் படித்து நல்லிணக்கத்தை வேண்டினர். சில பகுதிகளில் முஸ்லிம் பெரியவர்கள், யாரும் வீட்டை விட்டு வெளியேறக் கூடாது என்று தமது இனத்தவருக்குக் கட்டுப்பாடு விதித்திருந்தனர். ஆயினும் இந்து வெறியர்கள் - குறிப்பாக விசுவ இந்து பிரஷத் - சிறுபான்மை மக்களுக்கு எதிராக அவதூறு - வதந்திகளுடன் துண்டுப் பிரசுரங்களை ஊர்வலப் பாதை எங்கும் விநியோகித்தது. அதில் "இந்துக்களுக்கு எதிராக முஸ்லிம்களும் கிறித்துவர்களும் மிகப்பெரிய சதியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு வெளிநாட்டிலிருந்து பணம் வருகிறது. முஸ்லிம், கிறித்துவ இளைஞர்கள் இந்துப் பெண்களிடம் ஆசை வார்த்தை கூறி, திருமணம் செய்து கொள்வதாக நாடகமாகி பின்னர் வஞ்சித்து விடுவார்கள். அவர்கள் தமது மதத்தை மறைத்துக் கொண்டு இந்துப் பெயர்களையே கூறுவார்கள். இந்து கலாச்சாரத்தை அழிக்க நடக்கும் இந்தச் சதியை முறியடிக்க வேண்டும். எச்சரிக்கை!" என்று எழுதப்பட்டிருந்தது.

இப்படி இந்து வெறியர்கள் வதந்தியைக் கிளப்பி ஆத்திரமூட்டிய போதிலும், முஸ்லிம்கள் அமைதியாகவே இருந்தனர். ஜாமல்பூரில் உள்ள முஸ்லிம் தலைவர்கள், இத்தொகுதியின் எம்.பி.யான உஸ்மாங் கனி தலைமையில் ஜெகந்நாதர் கோயிலுக்கு ஊர்வலமாகச் சென்று வெள்ளித் தேரும், ரூ. 51,000 நன்கொடையும் அளித்தனர். தாஜியா கமிட்டித் தலைவரான மோமின் தலைமையில் மற்றுமொரு முஸ்லிம் குழுவினர் ஜெகன்னாதர் கோவிலுக்குச் சென்று வழிபாடு நடத்தியதோடு, தலைமைப் பூசாரியான மகந்த் ராமேஷ்வர்தாஸ்ஜியைச் சந்தித்து இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்குப் பாடுபட உறுதி அளித்து விட்டு வந்தனர். ஆனால் நல்லெண்ணத்தாலும் நல்லிணக்கத்தாலும் சாந்தப்படுத்தும் நடவடிக்கைகளாலும் இந்து வெறியர்களின் தாக்குதலைத் தடுத்துவிட முடியுமா?

ஜூலை 17-ஆம் தேதியன்று தேர்தல் பிரச்சாரத்துக்காக காங்கிரசு தலைவி சோனியா காந்தி அகமதாபாத்துக்கு வந்தார். பெருந்திரளான மக்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இதனால் தங்களது ஓட்டு வங்கி சிதறிப் போய் விடுமோ என்று இந்து வெறியர்கள் அஞ்சினர். ஏற்கனவே பாரதீய ஜனதாவின் அதிருப்தி அமைச்சரான வகேலா, காங்கிரசுக்குத் தாவிவிட்ட நிலையில் இந்து வெறியூட்டி கலவரத்தைத் தூண்டி தேர்தலில் ஆதாயமடைவதே இந்து வெறியர்களிடம் எஞ்சிய ஒரே வழியாக இருந்தது.

ஜூலை 20-ந் தேதியன்று மனவளர்ச்சி குன்றிய ஒரு முஸ்லிம் சிறுவனை இந்து இளைஞர்கள் தாரியாபூரில் கிண்டல் கேலி செய்து அவமானப்படுத்தினர். இதை சில முஸ்லிம் இளைஞர்கள் தட்டிக் கேட்கவும், இந்து இளைஞர்கள் அவர்களைத் தாக்கிவிட்டு தப்பியோடி விட்டனர். காயமடைந்த முஸ்லிம் இளைஞர்கள் இதுபற்றி போலீசு நிலையத்தில் புகார் கொடுக்கச் சென்றபோது உயர் அதிகாரிகள் இல்லாததால் புகாரைப் பதிவு செய்ய முடியாது என்று போலீசார் விரட்டினர். இதை எதிர்த்து பகுதிவாழ் முஸ்லிம் மக்கள் போலீசு நிலையம் முன் திரண்டு முழக்கமிட்டனர். போலீசார் தடியடி நடத்தி மக்களை விரட்டியபோது, இந்து வெறியர்கள் அவர்கள் மீது கல்லெறித் தாக்குதலை நடத்தினர். அடுத்த ஒரு மணி நேரத்தில் காதியா நாகா பகுதியில் இரு முஸ்லிம் இளைஞர்களை இந்து வெறியர்கள் கும்பலாகச் சூழ்ந்து கத்தியால் குத்திவிட்டு ஓடினர்.



இந்து மதவெறியால் மயானமாக மாறிவிட்ட அகமதாபாத் நகரம்.

இச்செய்தி பரவியதும் அடுத்த சில மணி நேரத்தில் அகமதாபாத்தின் தாரியாபூர், காவ்பூர், சராஸ்பூர் பகுதிகளில் கலவரம் மூண்டது. இந்து வெறியர்கள் வீதிகளில் கும்பலாக ஆயுதங்களுடன் திரண்டு வந்து கடைகளையும், வாகனங்களையும் பொது மக்களையும் தாக்கினர். பல இடங்களில் முஸ்லிம்கள் மீது கத்திக் குத்து, அரிவாள் வெட்டு தாக்குதலை நடத்தினர்.

சராஸ்பூரில் இந்துக்கள் நிறைந்த ஜலாம்புரி எனுமிடத்தில் முஸ்லிம் ஏழைகளுக்கான சத்திரம் ஒன்று உள்ளது. கலவரம் மூண்டதும் இந்து வெறியர்கள் இந்த சத்திரத்தில் புகுந்து நிராதரவான ஏழை முஸ்லிம்களை மிருகத்தனமாகத் தாக்கினர். அங்கு தங்கியிருந்த 300-க்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் படுகாயத்துடன் காலாபூர் ரயில் நிலையத்தில் தஞ்சமடைந்தனர். சராஸ்பூரில் 50-க்கும் மேற்பட்ட முஸ்லிம் வீடுகள் சூறையாடப்பட்டு தீயிடப்பட்டன. 30-க்கும் மேலான முஸ்லிம்கள் படுகாயமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். ஜூலை 23-ந் தேதியன்று முகம்மது அனிப் என்பவரது வயதான உறவினர் இந்து வெறியர்களிடம் சிக்கி பெட்ரோல் ஊற்றி உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டார்.

குப்தா நகரின் சேரிப் பகுதியில் பெரும்பான்மையாக ஏழை முஸ்லிம்கள் வாழ்கின்றனர். அப்பகுதியில் சூறையாடிக் கொள்ளையடிக்க ஏதுமில்லாத போதிலும், வெறியூட்டப்பட்ட இந்துவெறி குண்டர்கள், ஜூலை 27-ஆம் தேதியன்று அச்சேரிப் பகுதியில் புகுந்து கொலை வெறித் தாக்குதல் நடத்தினர். பெண்கள், குழந்தைகள், முதியவர்களைக் கூட அவர்கள் இரக்கமின்றித் தாக்கினர். உயிருக்கு அஞ்சி தப்பியோடிய மக்கள் அருகிலுள்ள மசூதியில் தஞ்சமடைந்தனர். போலீசார் வந்ததும் இந்துவெறி குண்டர்கள் கலைந்தோடி விட்டனர். ஆனால் போலீசாரோ மசூதியினுள் புகுந்து முஸ்லிம்களை மிருகத்தனமாக வதைத்தனர்.

இக்கொடுஞ் செயலை எதிர்த்து மறு நாள் ஜூலை 28-ந் தேதியன்று கல்லூரி விரிவுரையாளரும் மக்கள் உரிமைக் கழகச் செயல் வீரருமான மெஹ்ருன்னிசா என்பவர், பாதிக்கப்பட்ட பெண்களைத் திரட்டி கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினார். "நாங்கள் இந்து வெறியர்கள் மற்றும் போலீசாரின் கூட்டுத் தாக்குதலை எதிர்த்து வழக்கு தொடுத்துள்ளோம். முஸ்லிம் தலைவர்களாக உள்ள ஆண்கள் செயலற்று கிடக்கின்றனர். அதேசமயம் பெண்களாகிய நாங்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம் பற்றி கண்டிக்கின்றனர்" என்று முஸ்லிம் தலைவர்களின் கையாலாகாத்தனத்தை அம்பலப்படுத்துகிறார்.

கோம்திபூரில் இந்து வெறியர்கள், முஸ்லிம் வியாபாரிகளைத் தாக்கி கடைகளைச் சூறையாடினர். முஸ்லிமுக்குச் சொந்தமான ஒரு சொகுசுப் பேருந்தைத் தீயிட்டுக் கொளுத்தினர். பின்னர் போலீசார் வந்து கலவரத்தில் ஈடுபட்டதாகக் கூறி சிலரைக் கைது செய்தனர், ஆனால் அவர்கள் அனைவருமே முஸ்லிம் இளைஞர்கள்! அவர்களைப் பிணையில் விடுவிக்கும் உத்தரவில், "ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிம் கடையைச் சூறையாடியதாக போலீசார் கூறுவது நம்பும்படியாக இல்லை" என்று நீதிபதியே இந்து வெறியர்களுக்கு இசைவாகச் செயல்படும் போலீசாரை அம்பலப்படுத்தியுள்ளார்.

இவை எல்லாவற்றையும்விட, பகோடே உணவு விடுதி எரிப்பு மிகக் கொடூரமானது. அகமதாபாத் நகரில் உள்ள மொத்த உணவு விடுதிகளில் ஏறத்தாழ 20%-க்கு மேலானவை, மோமின் முஸ்லிம்களுக்குச் சொந்தமாகும். ஆகஸ்டு முதல் நாளன்று நகரின் மையப் பகுதியிலுள்ள பகோடே உணவு விடுதியில், விடுதியை மூடப்போகும் நேரத்தில் இருவர் உணவு



படிப்பகம்

www.padippakam.com

கேட்டு வந்தனர். அவர்களுக்கு உணவைப் பரிமாறுவதற்குள், விடுதி எங்கும் திடீரென தீப்பிடித்து எரிந்தது. உரிமையாளரும் ஊழியர்களும் தீயில் சிக்கி உடலெங்கும் வெந்த நிலையில் பின்புற வழியாக தப்பினர். சாப்பிட வந்த இருவரும் முன் பக்க வழியில் தப்பிவிட்டனர். உணவு விடுதி எரிந்து சாம்பலானது. உரிமையாளர்களில் ஒருவரமான இமாதத் அலி, தீயினால் வெந்து போய் சிகிச்சை பலனளிக்காமல் மாண்டு போனார். கடைசி நேரத்தில் விடுதிக்கு சாப்பிட வந்த இருவரும் இந்து வெறியர்கள்தான் என்று பின்னர் அம்பலமானது. ஒருவன், விசுவ இந்து பரிஷத்தின் செயற்குழு உறுப்பினன். மற்றவன் பஜ்ராங் தளத்தின் உள்ளூர் தலைவன்.

இந்து மதவெறி அமைப்புகள், நாட்டின் பல்வேறு பகுதிகளில், ஆங்காங்கே, துண்டு துண்டாக முசுலீம் - கிறித்தவர்களுக்கு எதிரான மதவெறிக் கலவரங்களை நடத்திக் கொண்டுதான் உள்ளன. இந்த உத்தி மூலம், நாடெங்கும் ஒரே சமயத்தில் தங்களின் கோர முகம் மேலும் அம்பலப்பட்டு விடாமல் தற்காத்துக் கொள்ள முயலுகின்றன.

அகமதாபாத்தில் கலவரம் கோரத் தாண்டியபோது குஜராத்திய நாளேடுகள் இந்து வெறியர்களுக்கு ஆதரவாக நின்று கலவரத்தை மேலும் தூண்டிவிட்டன. குறிப்பாக ''சந்தேஷ்'' நாளேடு இரதயாத்திரையின் போது எவ்வித அசம்பாவிதமும் நடக்காத போதிலும், ''இரத யாத்திரையின் போது இந்துக்கள் மீது முஸ்லிம்கள் தாக்குதல்'' என்று வதந்தியை முதல் பக்கச் செய்தியாக வெளியிட்டு இந்து வெறியர்களின் ஊதுகுழலாகச் செயல்பட்டது. இதர 'தேசிய' பத்திரிகைகளும், ஆங்கில நாளேடு

# அடுத்த கலவரத்துக்கு அடிக்கல் நாட்டு விழா

குஜராத்தின் டாங்ஸ் மாவட்டத்தில் கடந்த 1998-ஆம் ஆண்டு கிறித்துவர்களைத் தாக்கி, தேவாலயங்களை எரித்துக் கொட்டமடித்த இந்து வெறியர்கள் இப்போது அடுத்துள்ள சூரத் மாவட்டத்தைக் குறி வைத்துள்ளனர். கடந்த கிறிஸ்துமஸ் விழாவின் போது சூரத் மாவட்டத்தில் கிறித்துவ பழங்குடியினர் நிறைந்த ஹல்மோடி கிராமத்தில் இராமன் கோயில் கட்ட இந்து ஜாக்ரான் மன்ச்சும் விசுவ இந்து பரிஷத்தும் கிளம்பின. இராமன் கோயிலுக்கு அடிக்கல் நாட்டும் செங்கல் பூசை டிசம்பர் 24 அன்று தொடங்கி மறுநாள் வரை விடிய விடிய நடைபெறும் என்று இந்த இந்துவெறி அமைப்புகள் அறிவித்தன.

இதுதவிர, டாங்ஸ் மாவட்டத்தில் முன்பு கிறித்துவர்கள் மீது தாக்குதல் நடந்த ஆவா நகரில், டிசம்பர் 25 அன்று துவாரகா மட சங்கராச்சாரி முன்னிலையில் இங்குள்ள சிறிய கோயிலில் சிறப்பு பூசையும் விழாவும் நடைபெறும் என்று இந்து வெறியர்கள் அறிவித்தனர். இதேபோல, நல்சாரி மாவட்டத்தில் கிறித்துவ பழங்குடியினர் நிறைந்த பில்மோடா கிராமத்தில் உள்ள ஒரு இந்து வழிபாட்டுக் கொட்டகையில் அனுமார் சிலை நிறுவும் பூசையும் விழாவும் இந்து வெறியர்களால் அறிவிக்கப்பட்டன.

சிறுபான்மை கிறித்துவர்கள் மீது கலவரத்தைக் கட்டவிழ்த்து விடும் நோக்கத்துடன் இந்து வெறியர்கள் கிளம்பியுள்ளதை எதிர்த்து, கிறித்துவர்கள் மட்டுமின்றி பல்வேறு மனித உரிமை - ஜனநாயக அமைப்புகளும் இந்நிகழ்ச்சிகளுக்குத் தடைவிதிக்கக் கோரின. அதைத் தொடர்ந்து இந்த செங்கல் பூசை - இராமன் கோயில் அடிக்கல் நாட்டு விழா நடத்த அனுமதிக்கக் கூடாது என்று மத்திய அரசு குஜராத் மாநில அரசுக்கு உத்திரவிட்டது. இத்தடையை மீறப் போவதாக இந்துவெறி அமைப்புகள் அச்சுறுத்தியதைத் தொடர்ந்து, ஆளும் பா.ஜ.க. அரசு டிசம்பர் 22 அன்று செங்கல் பூசை நடத்த அனுமதியளித்தது.

ஹல்மோடி கிராமத்தில் பெரும்பான்மையினர் - 75% பேர் கிறித்துவர்கள் ஆவர். இங்கு மூன்று தேவாலயங்கள் உள்ளன. இக்கிராமத்திலுள்ள இந்துக்கள் (உண்மையில் இவர்கள் இந்துகள் அல்ல, பழங்குடியினர்) எவரும் இராமன் கோயில் கட்ட முயற்சிக்கவுமில்லை. அதில் ஆர்வம் காட்டவுமில்லை. செங்கல் பூசை நடந்த டிசம்பர் 22-ந் தேதியன்று ஹல்மோடி கிராமத்து கிறித்துவர்கள் அனைவரும் ஏதோ விபரீதம் நடக்கப்போகிறது என்று அஞ்சி ஊரை விட்டே வெளியேறி விட்டனர். இந்துக்கள் எவரும் வீட்டை விட்டு வெளியே வரவில்லை. இந்து வெறியர்கள் ஏறத்தாழ 300 பேர் வெளியூர்களிலிருந்து வாகனத்தில் வந்திறங்கி, திடீர் இராமன் கோயிலுக்கு அடிக்கல் நாட்டும் செங்கல் பூசை நடத்திவிட்டுச் சென்றனர். போலீசு பாதுகாப்புடன் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் உள்ளூர் பாரதீய ஜனதா தலைவர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

**கிறித்துவர்கள் பெரும்பான்மையாக உள்ள பழங்குடியினர் கிராமத்தில் தேசிய வில்லன் இராமனுக்கு கோயில் கட்ட அடிக்கல் நாட்டிப் பூசை நடத்தும் இந்து வெறியர்கள்.**



இது, பக்தர்கள் தமது சுயமுயற்சியால் எழுப்ப முயற்சிக்கும் கோயில் அல்ல. கோயில் கட்டுவதன் பெயரால் கிறித்துவ தேவாலயங்களைத் தாக்கி கலவரத்தைக் கட்டவிழ்த்து விடுவது, கிறித்துவர்களை அச்சுறுத்தி பயபீதியில் ஆழ்த்தி இந்து மதத்துக்கு மாறச் செய்வது என்ற நோக்கத்தோடு தான் தேசிய வில்லன் இராமன் கோயிலைக் கட்ட இந்து வெறியர்கள் கிளம்பியுள்ளனர். இந்த விவகாரம் பற்றி காங்கிரசும் போலி கம்யூனிஸ்டுகளும் நாடாளுமன்றத்தில் கூச்சலிட்டு அடங்கிவிட்டனர். சிறுபான்மயினர் நலன் காக்க நிற்பதாகக் கூறிக் கொள்ளும் திராவிடக் கட்சிகளோ இந்து வெறியர்களுக்கு விசுவாசமாக வாய்மூடிக் கிடந்தன.



படிப்பகம்

www.padippakam.com

களும் கார்கில் போர் பற்றிய செய்திகளை வெள்ளமாக வெளியிட்டு, இக்கோரமான கலவரம் பற்றிய செய்தியை திட்டமிட்டே இருட்டடிப்பு செய்தன.

அகமாத்தின் போலீசு துணை கமிஷனரான வினோத்மால், ''இக்கலவரத்துக்கு பாரதீய ஜனதா, விசுவ இந்து பரிஷத், பஜ ராங்தளம் ஆகியவையே காரணம்'' என்று குற்றம் சாட்டியுள்ளார். ''கார்கில் போர், அஸ்தி கலச ஊர்வலம், இரத யாத்திரை ஆகியவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு முஸ்லிம்களுக்கு எதிரான மதவெறியை அவர்கள் தூண்டி விட்டனர். தேர்தல் நெருங்கியதும் கலவரத்தில் இறங்கினர். பொய்களையும் வதந்திகளையும் பரப்பினர். இக்கலவரத்தில் சொத்துக்களை இழந்தவர்கள் என்று ஒரு பட்டியலை விசுவ இந்து பரிஷத் பிரசுரமாக வெளியிட்டது. விசாரணையில் இது பொய் என்று நிருபணமானது. உண்மையில் முஸ்லிம்களின் சொத்துக்கள்தான் இக்கலவரத்தில் நாசமாக்கப்பட்டுள்ளது. வன்முறையிலும் சூறையாடலிலும் ஈடுபட்ட இந்து மதவாத அமைப்பினர் மீது நாங்கள் வழக்கு தொடுத்துள்ளோம்'' என்கிறார்.

இருப்பினும், கைது செய்யப்பட்ட இந்து வெறியர்கள் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டு விட்டனர். பல உயிர்களைக் காவு கொண்ட இக்கலவரம் பற்றி நீதி விசாரணை நடத்தக்கூட அரசு முன்வரவில்லை. பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை.

வாஜ்பாயின் 13 மாத கால ஆட்சியில் மதக்கலவரம் எங்குமே நடக்கவில்லை என்று நற்சான்றிதழ் கொடுத்து தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. ஆகியன கூட்டணி கட்டிக் கொண்டு ஓட்டுப் பொறுக்கிய போதுதான், அகமதாபாத்தில் கலவரத் தீ பற்றி எரிந்தது. ஆனாலும் தேர்தல் ஆதாயத்திற்காக இப்பிழைப்புவாதக் கட்சிகள், காந்தீயக் குரங்குகளாக மாறி இந்து வெறியாட்டத்துக்குத் துணை நின்றன. முஸ்லிம் அமைப்புகளும் தலைவர்களும் இந்து வெறியர்களை நடைமுறையில் எதிர்த்து முறியடிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை அகமதாபாத் கலவரம் நிருபித்துக் காட்டுகிறது. குறிப்பாக, கீழ்நிலையிலுள்ள ஏழை முஸ்லிம்களைப் பாதுகாக்க தற்காப்பு நடவடிக்கையில் இறங்கக் கூட அவர்கள் முன்வரவில்லை. இவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு, இந்து வெறியர்கள் குஜராத்தில் கேள்வி முறையின்றி கொட்டமடித்து வருகின்றனர்.

(மும்பையைச் சேர்ந்த ஜனநாயக உரிமைப் பாதுகாப்புச் சங்கத்தின் (CPDR) உண்மையறியும் குழு வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து)

### ''ஊருக்குள் நுழையாதே!'' - மேல்சாதி வெறியர்களுக்கு எச்சரிக்கை

# சுயமரியாதையை நிலைநாட்டும் போராட்டத்தில் தாழ்த்தப்பட்டோர்

இந்து வெறியர்கள் ஆளும் குஜராத் மாநிலத்தின் மேஹ்சனா மாவட்டத்திலுள்ள தேதியா - வன்சஜடா கிராமத்து தாழ்த்தப்பட்ட மக்கள், தமது கிராமத்தினுள் மேல் சாதியினர் எவரும் நுழையக் கூடாது என்று தடை விதித்து, பகிரங்கமாக எச்சரிக்கையும் விடுத்துள்ளனர். இக்கிராமத்துச் சுவர்களில் இந்த எச்சரிக்கை சுவரெழுத்துக்களாகப் பளிச்சிடுகிறது. மேல்சாதியினருக்கு இதுநாள் வரை பால் விநியோகித்து வந்த தாழ்த்தப்பட்டோர் இப்போது அதை நகரங்களுக்குக் கொண்டு சென்று விற்கின்றனர். மேல் சாதியினரின் வீடுகளிலும் நிலங்களிலும் வேலை செய்ய மறுத்து விட்டனர். எல்லாவற்றுக்கும் மேலாக துப்புரவுப் பணிகளையும், பிணங்களை எடுக்கவும் மறுத்து உறுதியாக நிற்கின்றனர்.

இந்த அதிசயம் திடீரென ஒரு நாளில் ஏற்பட்டதல்ல. அது மேல்சாதி வெறியர்கள் அடக்குமுறை - அட்டூழியங்களால் குமுறிய தாழ்த்தப்பட்ட மக்கள், தொடர்ச்சியான போராட்டத்தில் எடுத்த முடிவு. இம்முடிவை நிறைவேற்றவும் தமது சுயமரியாதையை நிலைநாட்டவும் அக்கிராம மக்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள்.

இக்கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவரான சக்ரிபென் சேனம்மா பஞ்சாயத்துத் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அவரது கணவர் பாஷாபாயும் பஞ்சாயத்து உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவர் அரசுத் தலைவராகலாம். ஆனால் பஞ்சாயத்துத் தலைவராக நீடிக்க மேல்சாதி வெறியர்கள் அனுமதிப்பார்களா?

தமிழகத்தின் மேலவளவு கிராமத்தில் தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்து தலைவரை பட்டப் பகலில் வெட்டிக் கொன்றார்கள். குஜராத்தின் தேதியா - வன்சஜடா கிராமத்து பஞ்சாயத்துத் தலைவிக்குத் தொல்லைகள் கொடுத்து வந்தார்கள். அதன் தொடர்ச்சியாக, கடந்த செப்டம்பர் மாதத்தில் பஞ்சாயத்து தலைவி சக்ரிபென் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகக் கூறி அவரை பஞ்சாயத்து அலுவலகத்தினுள் நுழைய விடாமல் விரட்டியடித்தார்கள்.

பஞ்சாயத்துத் தலைவியான சக்ரிபென் செய்த குற்றம் என்ன?

சாதி வெறியர்களின் ஆதிக்கத்தின் கீழுள்ள பல்லாயிரக் கணக்கான இந்தியக் கிராமங்களைப் போலவே தேதியா - வன்சஜடா கிராமமும் இருந்தது. இக்கிராமத்தில் தாழ்த்தப்பட்ட பெண்கள், பூ வேலைப்பாடு கொண்ட (எம்ப்ராய்டரி) சேலைகளையோ, ஜாக்கெட்டுகளையோ அணிய முடியாது. பித்தளைக் குடத்தில் தண்ணீர் எடுக்க முடியாது. தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் பேண்ட் - சட்டை - செருப்பு அணிந்து மேல்சாதியினர் முன்பு வரக் கூடாது. சிறுவர்களை உயர்நிலைப் படிப்புக்காக நகருக்கு அனுப்ப முடியாது. இக்

மேல்சாதி வெறியர்களால் தாக்கப்பட்டு கால் எலும்பு முறிந்த பாஷாபாய்; அருகில் அவரது மனைவியும் பஞ்சாயத்துத் தலைவியுமான சக்ரிபென் - உள்ளூர் மக்களுடன்




படிப்பகம்

www.padippakam.com

கிராமத்தில் மேல் சாதியினருக்கு ஒரு கிணறும், தாழ்த்தப்பட்டோருக்கு ஒரு கிணறும் உண்டு. மேல் சாதியினருக்கு கோபம் வந்தால் தாழ்த்தப்பட்டோர் கிணற்றில் மலத்தைப் போட்டு விடுவார்கள். குடிநீருக்காக மேல் சாதியினர் கிணற்றுக்குச் சென்றால் பானைகளை உடைத்து வதைப்பார்கள். இதைத் தட்டிக் கேட்கவோ, தடுக்கவோ செய்தால், தாழ்த்தப்பட்டோருக்கு வீடுகளிலும் நிலங்களிலும் வேலை கொடுக்காமல் பட்டினியில் பரிதவிக்க விடுவார்கள்.

இந்நிலையில், பஞ்சாயத்து தலைவியான சக்ரிபென், இக்கிராமத்தில் ஆழ்குழாய் கிணறும் மேல்நிலை தண்ணீர் தொட்டியும் அமைக்க ஏற்பாடு செய்து, தாழ்த்தப்பட்டோர் பகுதிக்கும் சேர்த்து குழாய் மூலம் குடிநீர் விநியோகம் நடைபெற உதவினார். இச்செயலால் ஆத்திரமடைந்த மேல்சாதி வெறியர்கள் அவரைப் பதவியிலிருந்து விரட்ட தருணத்தை எதிர்பார்த்திருந்தனர். சக்ரிபென்னுக்கு பல வழிகளில் தொல்லைகள் கொடுத்து மறைமுகமாக மிரட்டி வந்தனர்.

சக்ரிபென் இவற்றுக்கு அஞ்சாமல் அரசின் நலத்திட்ட ஒதுக்கீட்டின்படி, சிறுவர் பள்ளியும் - விளையாட்டு மைதானமும் நிறுவ ஆவன செய்தார். அரசு அதிகாரிகளிடம் போராடி இக்கிராமத்துக்குப் பேருந்து வசதியை ஏற்படுத்தினார். இது, மாணவர்கள் நகரங்களுக்குச் சென்று உயர்நிலைப் பள்ளியில் படிக்க உதவியாக அமைந்தது. இளைஞர்கள் நகரங்களில் வேலைக்குச் சென்றுவர சாதகமாக இருந்தது. இவற்றால் தமது சாதிய ஆதிக்கம் படிப்படியாகச் சரிவதைக் கண்டு மேல்சாதி வெறியர்கள் எரிச்சலடைந்தனர். சக்ரிபென் அடுத்தகட்டமாக தாழ்த்தப்பட்டோருக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தரவும், கிராமத்தில் பொது நிகழ்ச்சிகளுக்கான அரங்கம் கட்டவும் ஏற்பாடுகள் செய்து வந்தார்.

இதற்கிடையே நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மூலம் சக்ரிபென்னின் பதவி பறிக்கப்பட்டதாக மேல்சாதி வெறியர்கள் அறிவித்தனர். பஞ்சாயத்தில் வேலை செய்து வந்த தாழ்த்தப்பட்ட ஊழியர்களும் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இந்த அயோக்கியத்தனத்துக்கு சாதிவெறி பிடித்த அதிகார வர்க்கம் துணை நின்றது. இக்கொடுஞ் செயலை எதிர்த்து சக்ரிபென் வட்டார வளர்ச்சி அதிகாரியிடம் முறையிட்டார். பின்னர் மாவட்ட ஆட்சியாளர், ஊரக வளர்ச்சி ஆணையர் என அனைத்து மட்டத்திலும் புகார் கொடுத்தார்.

இவற்றைச் சகித்துக் கொள்ள முடியாத மேல்சாதி வெறியர்கள் கடந்த அக்டோபர் 20-ந் தேதியன்று சக்ரிபென்னின் கணவரும் பஞ்சாயத்து உறுப்பினருமான பாஷா பாயை பட்டப் பகலில் கும்பலாக வந்து கொடிய ஆயுதங்களுடன் தாக்கினர். இரும்புக் குழாயினால் தாக்கப்பட்ட பாஷா பாயின் கால் முறிந்தது. அரிவாள்



**மேல்சாதி வெறியர்களை ஊருக்குள் நுழையத் தடை விதித்துக் கிராமச் சுவர்களில் பளிச்சிடும் எச்சரிக்கை.**

வெட்டினால் தலையிலிருந்து கால்கள் வரை படுகாயமடைந்த அவர் நினைவிழந்து இரத்த வெள்ளத்தில் மிதந்தார்.

தாக்குதலின் போது அவர் போட்ட கூச்சலைக் கேட்டு தாழ்த்தப்பட்டோர் ஓடி வந்ததும் சாதிவெறி குண்டர்கள் தப்பியோடி விட்டனர். ஆனாலும் அவருக்கு முதலுதவி செய்து காப்பாற்ற தாழ்த்தப்பட்டோர் அஞ்சினர். இது பாஷா பாயின் மீதான தனிப்பட்ட தாக்குதல் அல்ல; ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு விடப்பட்டுள்ள எச்சரிக்கை என்பதால் பாஷா பாயைக் காப்பாற்றி உதவி செய்யத் தயங்கினர். பின்னர், ஆனது ஆகட்டும் என்று ஆட்டோ தொழிலாளியான ஒரு தாழ்த்தப்பட்ட இளைஞர் அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்று காப்பாற்றினார்.

ஆனாலும் தொல்லைகள் நீங்கிவிடவில்லை. சாதிவெறியர்களின் நிர்பந்தத்தால் பாஷா பாய்க்கு அரசு மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை அளிக்க மறுத்துவிட்டனர். பின்னர் அவர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டியதாயிற்று. இப்பகுதியில் இயங்கும் தன்னார்வக் குழுவின் முயற்சியாலும், நாளேடுகளில் இச்சாதிவெறி அட்டூழியம் பற்றிய செய்திகள் வெளியாகி அம்பலமானதாலும் மேல்சாதி வெறியர்களில் நால்வர் இப்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தாழ்த்தப்பட்டோரிடமிருந்த அச்சத்தைப் போக்கி, தைரியமடைய வாய்ப்பாக அமைந்தது. அதைத் தொடர்ந்து உணர்வு பெற்ற தாழ்த்தப்பட்ட மக்கள், தமது சுயமரியாதையை நிலைநாட்டும் வகையில் மேல்சாதி வெறியர்கள் தமது கிராமத்தினுள் நுழையத் தடை விதித்துள்ளனர். ''நாங்கள் வன்முறையை ஒருபோதும் ஏற்பதில்லை. மேல்சாதியினர் மனம் திருந்தி எங்களை சகோதரர்களாக மதிக்கும் நிலை வரும்போது இத்தடையை நீக்குவோம்'' என்கிறார்கள் அவர்கள்.

முஸ்லிம்கள் - கிறித்துவர்கள் மீது தாக்குதலை நடத்த ''நாமெல்லோரும் இந்துக்கள்'' என்று தாழ்த்தப்பட்டோரையும் தம்முடன் சேர்த்துக் கொள்ளும் இந்து வெறியர்கள், அன்றாட வாழ்வில் தாழ்த்தப்பட்டோரை ஒடுக்கும் சாதி வெறியர்களாக உள்ளனர் என்ற உண்மையை இந்த விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது. ஓரளவு விழிப்புணர்வும் ஒற்றுமையும் தன்னார்வக் குழுக்களின் உதவியும் இருப்பதால் இக்கிராமத்தின் தாழ்த்தப்பட்ட மக்கள், மேல்சாதி ஆதிக்க வெறியர்களுக்கு எதிராக தைரியமாக நிற்க முடிந்துள்ளது. இல்லையேல் சாதி வெறியர்களின் ஆதிக்கமும் அட்டூழியமும் கேள்வி முறையின்றித் தொடர்வதோடு இந்த உண்மைகள் வெளிவராமல் போயிருக்கும். குஜராத்தும் இன்னுமொரு மேலவளவைச் சந்தித்திருக்கும்!

● குமார்

## ''ஆட்டோ ரிக்ஷா தொழிலுக்கு நலவாரியம் அமைத்துக் கொடு!''

போலீசாரின் அவமானப்படுத்தலுக்கும் அடாவடித்தனத்திற்கும் எதிராக திருச்சி மாநகரில் கடந்த அக்டோபர் மாதத்தில் வெற்றிகரமான போராட்டத்தை நடத்திய ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்கம், கடந்த 27.11.99 அன்று தனது சங்கத்தின் சார்பில் ஒரு கருத்தரங்கத்தை நடத்தியது. இதில் பல்வேறு தொழிற்சங்கத் தலைவர்களும், மருத்துவர் அருட் செல்வன், வழக்குரைஞர் பானுமதி, மனித உரிமைப் பாதுகாப்புக் கவுன்சிலின் செயலாளர் போஜ குமார் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரையும் சிறப்புரையும் ஆற்றினர்.

இக்கருத்தரங்கின் இறுதியில், பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்களைக் கொண்ட ஆட்டோ ரிக்ஷா தொழிலுக்குத் தனி நல வாரியம் அமைக்க வேண்டும்; கட்டிடத் தொழிலாளர் போலவே, அமைப்பு சாரா பிற தொழில் பிரிவைச் சேர்ந்தோருக்கும் நியாயமான அனைத்துச் சலுகைகளும் வழங்கப்பட வேண்டும்; ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் வகையில், ஏற்கனவே இயங்கி வந்த ஆட்டோ நிறுத்தங்களுக்கான அங்கீகாரத்தை ரத்து செய்த மாநகராட்சியின் உத்திரவை நீக்க வேண்டும்; ஆட்டோ ஓட்டுநர்களை அடிக்கடி தொல்லை செய்து இழிவாக நடத்தும் போலீசாரின் அராஜகத்தைத் தடுக்க ஆவண செய்ய வேண்டும் முதலான கோரிக்கைகளுடன் மாநில அரசு, மாவட்ட - மாநகர நிர்வாகம் ஆகியவற்றை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பெருந்திரளான ஆட்டோ ஓட்டுநர்கள் பங்கேற்ற இக்கருத்தரங்கில் நடந்த ம.க.இ.க. கலைக் குழுவினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சி, புதிய நம்பிக்கையையும் எழுச்சியையும் ஊட்டுவதாக அமைந்தது.

— ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்கம்,
திருச்சி.


படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## வருகிறது அமெரிக்கப் பலசரக்குக் கடை

"வால் - மார்ட்", அமெரிக்காவில் சில்லறை விற்பனைக் கடைகளை நடத்தி வரும் நிறுவனம். சில்லறை வியாபாரம் தானே என்பதால், வால் - மார்ட்டை நம்ம வீட்டுத் தெருக்களில் இருக்கும் பலசரக்குக் கடைகளோடு ஒப்பிட்டுவிட முடியாது. வால் - மார்ட்டின் ஆண்டு வியாபாரம் கிட்டதட்ட 8,60,000 கோடி ரூபாய். வால் - மார்ட்டோடு ஒப்பிட்டால், நம்மூரில் "கடை அல்ல, கடல்" என்று போர்டு மாட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் பெரிய வியாபாரிகள் கூட, கொசுதான். வால் - மார்ட் போன்று சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள பன்னாட்டு நிறுவனங்களை, நமது நாட்டிலும் கடைகளைத் திறந்து கொள்ள அனுமதிக்கத் தயாராக உள்ளது பா.ஜ.க. அரசு. இந்த நிறுவனங்கள் உள்ளே நுழைந்த பின்பு, நம்ம ஊர்க் கடைத் தெருக்களில் வியாபார அண்ணாச்சிகளைப் பார்க்க முடியாது; "ஷாப்பிங் மால்"களை அண்ணாந்து, வாயைப் பிளந்து பார்த்துக் கொள்ள வேண்டியதுதான். ("ஷாப்பிங் மால்" என்பது பலவிதமான பொருட்களை விற்கும் பிரம்மாண்டமான கடைகள்)

## பாவம் ஓரிடம்; பழி ஓரிடம்

தேசியப் பஞ்சாலைக் கழகம் நடத்தி வரும் 190 துணி ஆலைகளில் 97,000 தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகின்றனர். நட்டத்தில் இயங்குவதாகக் கூறப்படும் இக்கழகத்தை இலாபத்தில் நடத்துவதற்காக, 36 துணி ஆலைகளை நவீனப்படுத்தவும், நலிவடைந்த துணி ஆலைகளை மூடி விடவும் முடிவெடுத்து, 3,300 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது மைய அரசு. இதனால், என்.டி.சி. மில்களில் வேலை பார்த்து வரும் முக்கால்வாசித் தொழிலாளர்கள், 73,000 பேர், வேலையிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தாராளமயமும், அதிகார வர்க்கத்தின் ஊழலும், ஊதாரிச் செலவும்தான் என்.டி.சி. மில்களின் நட்டத்திற்குக் காரணம்; ஆனால், நட்டத்திற்காகத் தண்டிக்கப்படுவதோ தொழிலாளி வர்க்கம். களையை விட்டுவிட்டுப் பயிரை அறுத்தால், என்ன மிஞ்சும்?

## தேர்தல் புறக்கணிப்பு: ஜனநாயக உரிமையா? கிரிமினல் குற்றமா?

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில், பாராளுமன்றத் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரிப் பிரச்சார இயக்கம் நடத்திய ஹுரியத் அமைப்பைச் சேர்ந்த 15 தலைவர்கள், ஜம்மு - காஷ்மீர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கடந்த செப்டம்பர் மாதம் அம்மாநில அரசால் கைது செய்யப்பட்டனர். இதுபற்றி எவ்வித வழக்கோ / விசாரணையோ நடத்தாமல், இந்தத் தலைவர்களை 2001-ஆம் ஆண்டு செப்டம்பர் வரை சிறையிலேயே அடைத்து வைக்க உத்தரவிட்டுள்ளார், இம்மாநில முதல்வர் பரூக் அப்துல்லா. தேர்தலைப் புறக்கணிக்கக் கோருவது ஜனநாயக உரிமை. இதனை, பல நீதிமன்றத் தீர்ப்புகளும் சுட்டிக் காட்டியுள்ளன. அப்படியிருந்தும், காஷ்மீர் மக்களுக்கு இந்த உரிமையை மறுக்கும் இந்திய 'ஜனநாயகத்தை' என்னவென்பது?

## முசுலீம் உயிர் என்றால் இளப்பமா?

1991-ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலின் பொழுது, உ.பி. மாநிலத்திலுள்ள மீரட் நகரில் இந்து மதவெறியர்கள் நடத்திய கலவரத்தில், 17 முசுலிம்கள் கொல்லப்பட்டனர். உ.பி. மாநிலத்தை ஆண்டு வரும் ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறிக் கும்பல், மத நல்லிணக்கத்தைப் பேணுவது என்ற பெயரில், இந்தக் கொலை வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டதால், கொலைக் குற்றவாளிகளான இந்து மதவெறியர்களை நீதிமன்றம் விடுதலை செய்துவிட்டது. ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட நால்வருக்கும் கருணை காட்டக் கூடாது என வரிந்து கட்டிக் கொண்டு எழுதும் 'நியாயவான்' சோ, உ.பி. மாநில அரசின் இந்தக் கருணையைக் கண்டித்தும் எழுதுவாரா?

## பழைய அடிமையும் புதிய விசுவாசியும்

சென்னையில் நடந்த சோனியா காந்தி பிறந்த நாள் விழா கொண்டாட்டத்தில், த.மா.கா. தலைவர் சோ. பாலகிருஷ்னன், "சோனியா காந்தி இந்த தமிழக மண்ணில் பட்ட துயரத்திற்கு, தமிழக மக்கள் அவருக்கு நிரந்தர அடிமைகளாக இருக்கக் கடமைப்பட்டவர்கள்" எனப் பேசினார். அதே விழாவில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன், "தமிழக காங்கிரசு கட்சிக்கு கக்கன், இளைய பெருமாள், மரகதம் சந்திரசேகர் போன்றவர்கள் தலைவராக முடிந்துள்ளது என்பதை தாழ்த்தப்பட்ட மக்கள் நன்றியோடு நினைவு கூர்வார்கள்" எனப் பேசியிருக்கிறார். "சேரிப் பயல்" எனத் தங்களைக் கூறிக் கொள்ளும் விடுதலைச் சிறுத்தைகளை, இனி, "சாமரம்" என அழைக்கலாமா?

## மேற்கு வங்கம் - 'மார்க்சிஸ்டு'களின் மண்கோட்டை

மேற்கு வங்க மாநிலத்திலுள்ள 70 கல்லூரிகளில் நடந்த மாணவர் சங்கத் தேர்தலில், ஆர்.எஸ்.எஸ்.-இன் மாணவர் அமைப்பான, அகில பாரதீய வித்யார்தி பரிஷத்தைச் சேர்ந்த 115 இந்து மதவெறியர்கள் வெற்றி பெற்றுள்ளனர். அம்மாணவர் அமைப்பு, இரண்டு கல்லூரி சங்கத் தலைமையையும் கைப்பற்றியுள்ளது. இந்த வெற்றிகள் தந்த மிதப்பில், ஆர்.எஸ்.எஸ்., கல்லூரி மாணவர்களுக்காக, "இந்திய வரலாறும், நாட்டின் புகழ்மிக்க பண்பாடும்" எனும் தலைப்பில், ஒரு வார கால பயற்சி முகாமையும் ஹூக்ளியில் நடத்தி முடித்துள்ளது. "மேற்கு வங்கம் எங்களின் கோட்டை" என்று 'மார்க்சிஸ்டு'கள் விடும் உதார், இனி இளிச்சவாயர்களிடம் மட்டுமே எடுபடும்!

சென்னையில் நடந்த சோனியா பிறந்த நாள் விழாவில் "சேரிப் புயல்" திருமாவளவன் (வலது ஓரம்) காங்கிரசின் விசிறியானார்!



Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

www.padippakam.com

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42648/85

Regd. No. TN/MS(S) 622 / 99



சமூக நீதி அமைச்சரான மேனகா காந்தி, ஏதோ பொழுது போக்கிற்காக, மூர்த்தி என்ற இந்த யானையின் வாயில் கரும்புத் துண்டைத் திணிக்கவில்லை. மூர்த்தியின் உடல்நிலை எப்படி உள்ளது? தமிழக வனத்துறை அதிகாரிகள் மூர்த்தியை அடித்துத் துன்புறுத்துகிறார்களா? இல்லை, பரிவோடு கவனித்துக் கொள்கிறார்களா? மூர்த்தியால், அவனது உரிமையை அனுபவிக்க முடிகிறதா? என்பதை நேரடியாகப் பரிசோதித்துத் தெரிந்து கொள்ளுகிறார், அவர்.

மதம் பிடித்துப்போய், கிராமங்களுக்குள் புகுந்து அட்டகாசம் பண்ணிக் கொண்டிருந்த இந்த யானையை தமிழக வனத்துறையினர் முதுமலை சரணாலயத்தில் அடைத்தனர். சரணாலயத்தில், ''மூர்த்தி பரிவோடு நடத்தப்படவில்லை'' என மிருகங்களின் உரிமைக்காக அமைப்பு நடத்தும் பலரும் கண்டனக் குரல்கள் எழுப்பியதால் பத்திப் போன சமூக நீதி அமைச்சர், தமிழக வனத்துறைக்குக் காட்டமாகக் கடிதம் எழுதினார். தமிழக அரசு பதில் கடிதம் எழுதிய பின்னும் திருப்தி கொள்ளாத மேனகா காந்தி, தனது வேலைகளை-யெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, முதுமலைக்குப் பறந்து வந்து, மூர்த்தியைப் பார்த்த பின்புதான், அவருக்கு நிம்மதி வந்தது.

''மிருகங்களுக்குக் கூட அநீதி இழைக்கப்பட்டுவிடக் கூடாது'' என அக்கறை கொண்டுள்ள மேனகா காந்தியின் கையில் சமூக நீதித்துறை இருப்பதால், இந்தியாவில் மக்களுக்கான சமூக நீதிக்குப் பஞ்சமே இருக்காது என்று நாம்தான் நிம்மதி கொள்ள முடியவில்லை.

இதோ, இந்தப் படத்தில் இருக்கும் கணபதியும், பானுமதியும் உளுந்தூர் பேட்டை வட்டத்திலுள்ள அரூர் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். அக்கிராமத்தில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவி சக்திக்கு ஆதரவாக இவர்கள் செயல்பட்டதால், அக்கிராமத்தின் மேல்சாதிவெறி பிடித்த பண்ணையாரால் தாக்கப்பட்டனர்; இவர்-களின் வீடு அடித்து நொறுக்கப்பட்டது. மேல்சாதியைச் சேர்ந்த இவர்களுக்கே இந்தக் கதி என்றால், தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவியின் கதி...

தனக்கு அடிமையாய் நடக்க மறுத்த சக்தியை, அவரின் வீட்டைக் கொளுத்தி-யதைப் போலவே, அவரையும் உயிரோடு கொளுத்தி விடுவோம் என பண்ணையார் கும்பல் மிரட்டியதால், சக்தி, அந்தக் கிராமத்தை விட்டு தலைமறைவாக வெளியேறிவிட்டார். தேர்தலில், சக்திக்கு ஓட்டுப் போட்ட, ஆதரவாகச் செயல்பட்ட தாழ்த்தப்-பட்டோரின் வீடுகளும் அடித்து நொறுக்கப்பட்டு விட்டதால், அவர்கள் அனைவரும் அக்கம் பக்கத்து கிராமங்களில் அகதிகளைப் போல தஞ்சம் புகுந்துவிட்டனர். தமிழகப் போலீசோ, மேல்சாதி வெறி பிடித்த பண்ணையாரைக் கைது செய்யாமல், பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோரையே குற்றவாளிகளாக்கிவிட்டது!

# இதுதான் இன்றைய இந்தியா



ஒரு யானைக்காகப் பதறித் துடித்து வந்த சமூக நீதி அமைச்சருக்கு, சக்திக்கும், அவரை ஆதரித்த தாழ்த்தப்-பட்டோருக்கும், பிறருக்கும் இழைக்கப்-பட்ட அநீதி பெரிதாகத் தெரிய-வில்லை. பட்டியில் அடைக்கப்பட்ட மிருகத்திற்கு நீதியை உத்திரவாதப்-படுத்திய அமைச்சருக்கு, காலனியில் காலந் தள்ளும் மனிதனுக்கு நீதி வழங்க வழி தெரியவில்லை.

''நடந்த விசயமே தெரியாதே'' என்று அமைச்சர் மழுப்பலாம். ஆனால், உண்மையில், ஒரு தாழ்த்தப்பட்டவனை விட தெரு நாயிடமும், சாக்கடைப் பன்னியிடமும்தான் அவர்களுக்கு உரிமைகளும் தெரியும், தெய்வாம்சமும் தெரியும். ஆளும்கும்பலின் இந்த சமூக நீதிப் பசப்பலை இனியும் நம்பி ஏமாறத்தான் வேண்டுமா?